களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளை தாங்கிவரும் பத்திரிகை 24-06-1994

அன்பளிப்பு 40P

உள்ளே...


- சுதந்திரத்தைத் தேடி - மேஜர் தயாளினி
- உழைப்பால் உயர்ந்த துணைவேந்தர் துரைராசா
- நாம் கடந்துவந்த பாதை...
- தமிழீழச் சட்டக் கோவை
- 'கேடீஸ்' தும்புத் தொழிற்சாலை...
- சிறுகதை - சிறைக்கூடங்கள்
- சிறீலங்காவில் பிரேமதாசா இல்லாத ஒரு ஆண்டு


# பலதுறைகளில் விடுதலைப்புலிகள் ஒரு அரசுபோல் செயற்படுகின்றனர்

▢ பி.பி.சி. முகவர் கருத்து

## குடாநாடு உட்பட விடுவிக்கப்பட்ட ஏனைய பகுதிகளிலும் சிவில் நிர்வாகத்தை விரிவுபடுத்தி வருகிறோம்

▢ 'தமிழ்ச்செல்வன்' பேட்டி



"நான் இங்கு வந்தபின்னர் ஒரு விசயம் எனக்குத் தெளிவாகத் தெரிகிறது. சிவில் நிர்வாகத்தை நடத்துவதில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கூடுதலாகப் பங்கேற்று வருகின்றது. பலதுறைகளில் அது ஒரு அரசுபோலவே செயற்படுகின்றது".

இவ்வாறு, சமீபத்தில் யாழ். குடாநாட்டுக்குச் சென்று திரும்பிய பி. பி. சி. உலக ஒலிபரப்புச் சேவையின் முகவர் ஜோர்ஜ் ஆனி அவர்கள் யாழ்ப்பாணத்தில் வைத்துக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இதற்குப் பதிலளித்த தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் அவர்கள், "யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டுமல்லாது ஏனைய எமது கட்டுப்பாட்டிலுள்ள, பிரதேசங்களிலும் நாம் சிவில் நிர்வாக அமைப்புக்களை உருவாக்கி வருகின்றோம். தமிழ்ப் பகுதிகளில் சிறீலங்கா அரசாங்கத்தின் நிர்வாக இயந்திரம் பெருமளவில் செயலிழந்து போயிருக்கிறது. இந்த நிலைமையைச் சீர்செய்து எமது மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் நோக்கத்துடன் நாம் எமது நிர்வாக அமைப்புக்களைக் கட்டி எழுப்பி வருகின்றோம். இன்றைய சூழ்நிலையில் இது ஒரு வரலாற்றுத் தேவையாக உள்ளது. எமது நிர்வாக அமைப்புக்களில் போராளிகளும் பொதுமக்களும் இணைந்தே சிவில் நிர்வாக அலுவல்களைச் செய்து வருகின்றனர். நிர்வாகத்தை நேரடியாகக் கண்காணித்து கட்டுப்பாட்டுடனும் திறமையுடனும் நிர்வாகத்தைக் கொண்டு நடாத்தும் நோக்கில், எமது போராளிகள் அநேகமான நிர்வாக அலுவலகங்களில் பொறுப்பாளர்களாகவும் உள்ளனர்" எனக் கூறியுள்ளார்.

### பாதுகாப்புக்கான யுத்தம்

மேலும், "தற்போது போரில் மந்தநிலை ஏற்பட்டுள்ளதாகச் சொல்லமுடியாது. ஒரு பெரிய யுத்தத்திற்கான ஆயத்தங்களை அரசாங்கம் செய்துவருகின்றது. இராணுவத்திற்குப் போர்ப் பயிற்சிகளைக் கொடுப்பதுடன் வெளிநாடுகளிலிருந்து பெருந்தொகையான ஆயுதங்களை வாங்கிக் குவித்து வருகின்றது.

இது ஒருபுறமிருக்க, பூநகரிச்சமரை அடுத்து பல்வேறு இடங்களில் சிறுஅளவிலான மோதல்கள் நிகழ்ந்து வருகின்றன. வவுனியாவில் மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை ஒன்றும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எம்மைப் பொறுத்தவரை எமது மண்ணைக் காக்கும் நோக்கில் ஒரு பாதுகாப்பு யுத்தத்துக்கு நாமும் தயாராகி வருகின்றோம்" எனத் தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

# இதய அஞ்சலிகள்



தமிழீழத் தேச
நிர்மாணிப்பிற்கு, தனது
சிந்தனை மூலமும் செயல்
மூலமும் உரமூட்டிய,
அண்மையில் மறைந்த
யாழ்.
பல்கலைக்கழகத்தின்
முன்னாள் துணைவேந்தர்
பேராசான் அ.துரைராசா
அவர்களுக்கு எமது இதய
அஞ்சலிகள்.

# தமிழீழத்தின் வைப்பகம் யாழ். நகரில் உதயம்

## பெருமளவு பொதுமக்கள், வர்த்தகர் நிதிவைப்புச் செய்தனர்

தமிழீழத்தின் முதலாவது வைப்பகம் யாழ். நகரில் 23-5-94 அன்று தனது சேவையைத் தொடங்கியது. தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி, பணத்தை வைப்பிலிட்டு சம்பிரதாய பூர்வமாகக் கணக்கைத் தொடங்கிவைத்தார். இதைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான பொதுமக்களும், வர்த்தகர்களும் பணத்தை தமிழீழ வைப்பகத்தில் வைப்புச் செய்தனர்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இத்தமிழீழ வைப்பகத் திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்ட விடுதலைப் புலிகள் நிதித்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழேந்தி அவர்கள், மாணவர்கள் எழுச்சிக் கீதம் இசைக்க தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

மங்கள விளக்கை தமிழீழ அரசியல் துறைத் துணைப்பொறுப்பாளர் திரு. கரிகாலன், காவல் துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

விடுதலைப் போரில் இன்னுயிர் ஈந்த மாவீரர்களுக்கும் பொதுமக்களுக்கும் இருநிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து, தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் தமிழீழ வைப்பகப் பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்தும் நாடாவை வெட்டி

தொடர்ச்சி 7ம் பக்கம் ....

# இனப்பிரச்சினை இருந்தது உண்மைதான் ஆனால் இப்போது இருப்பது பயங்கரவாதம்

■ *சிறீலங்கா ஜனாதிபதி தனக்குத் தானே போடும் திருத்தம்*

சிறீலங்கா ஜனாதிபதி டிங்கிரி பண்டா விஜேதுங்கா 'இனப்பிரச்சினையல்ல பயங்கரவாதமே' என்ற புதிய அரசியல் தத்துவத்திற்கு அநுராதபுரத்தில் வைத்து திருத்தப் பிரேரணை ஒன்றை தானே கொண்டு வந்துள்ளார். அதன்படி "இனப்பிரச்சினை ஒன்று முன்னர் இருந்தது நிச்சயமாக உண்மைதான். ஆனால் இப்போது அப்படி எதுவுமே இல்லை. வடக்கு கிழக்கில் இன்று இருப்பது ஒரு இனப்பிரச்சினையல்ல. இது ஒரு பயங்கரவாதப் பிரச்சினையே" என்பது அவரின் திருத்தம்.

"இந்த நாட்டின் சகல பகுதிகளிலும் தமிழர்கள் நிம்மதியாக வாழக்கூடிய நிலை காணப்படுகிறது. அதேவேளை சிங்களவர்களும் முஸ்லீம்களும்தான் நிம்ம

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

# ஒன்றிணைந்துள்ள வடக்கு-கிழக்கை உடைக்க முஸ்லீம்கள் ஒரு போதும் இடமளிக்கக் கூடாது

■ எம்.ஐ.எம். முகையதீன் மீண்டும் பகிரங்க வேண்டுகோள்

"தமிழர் நடாத்தும் உரிமைப் போராட்டத்தின் பயனாக பெற்றெடுத்த ஒன்றிணைந்த வடக்கு-கிழக்கு மாநிலத்தை இரண்டு துண்டாக உடைத்துவிட முஸ்லீம்களைப் பாவித்து, வடக்கு கிழக்கில் தமிழர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையில் நிரந்தரமான பகைமையை ஏற்படுத்துவதே சிங்கள அரசாங்கத்தின் திட்டம். இத்திட்டம் வெற்றிபெற்றவுடன் முஸ்லீம்களின் வசிப்பிடங்களுக்கூடாக உடனடியாகச் சிங்களவர்களைக் குடியேற்றிக் கிழக்கு மாகாணத்தை முற்றாக அபகரிப்பதே பேரினவாத சிங்கள ஆட்சியாளரின் அடுத்த நடவடிக்கை.

இவ்வாறு புதிதாக சிறீலங்காப் பாராளுமன்றத்தின் திகாமடுல்ல (அம்பாறை) பாராளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்றுள்ள முஸ்லீம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஐ. எம். முகையதீன் முஸ்லீம் மக்களுக்கு மீண்டும் பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவ்வேண்டுகோளில்; "கிழக்கு மாகாணம் தனித்து நிற்குமாயின் சிங்கள ஆட்சியாளர் செய்து வந்த அடாவடித்தனமான செய்கைகள் யாவும் மேலும் தொடர்ந்து நடைபெறும். அதைத் தடுத்து நிறுத்த அரசாங்கத்திலுள்ள முஸ்லீம் பிரதிநிதிகளால் முடியவே முடியாது. அடிமட்டத்தில் பிரதேச சபைகள் அமைத்தபோது கூட இவர்களால் முஸ்லீம்களின் உரிமைகளைப் பெற்றெடுக்க முடியவில்லை. முஸ்லீம் எம். பிக்களின் அரசியல் சாணக்கியத்துக்கும் சாதனைக்கும் தகுந்த உரைகல், அம்பாறை மாவட்ட முஸ்லீம்களின் இன்றைய அவல நிலை. தங்கள் 'பம்பரம் இதற்கு மேல் ஆடாது' என்று அவர்கள் பகிரங்கமாகக் கூறியபின்னரும் இவர்களிடம் கிழக்கு மாகாண முஸ்லீம்களின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் பொறுப்பை முற்றாக விட்டு வைப்பது மிக மிக ஆபத்தானதாகும்" எனத் தெரிவித்துள்ளார். ■

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்



# மீண்டும் மீண்டும்

தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் மீண்டும் சமாதானத்தின் மேல் தமக்குள்ள அக்கறையை, நிபந்தனையற்ற சமாதானப் பேச்சு வார்த்தைக்கு தயார் என வெளிப்படுத்துவதும், அதனை சிறிலங்கா மீண்டும் மீண்டும் அலட்சியம் செய்து இராணுவத் தீர்வு மூலம் தேசிய இனங்களுக்கிடையிலான முரண்பாட்டுக்கு முற்றுப்புள்ளி வைக்க முயற்சிப்பதும் இதனால் யுத்தம் தொடர்கதையின் அத்தியாயங்களாக நீண்டு செல்வதும் வழமையாகிவிட்டது.

இந்தவகையில், யாழ் குடாநாடு சென்று திரும்பிய இரு சர்வதேச தொடர்பு சாதன முகவர்கள் விடுதலைப் புலிகளின் சார்பாக 'ஒலிவ் இலை'யை ஏந்திவந்துள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும், அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனும் நிபந்தனையற்ற பேச்சு வார்த்தையை ஆரம்பித்து, சமாதானப் பேச்சுவார்த்தைக்கான சூழலை உருவாக்க வேண்டிய பொறுப்பு சிறிலங்கா அரசாங்கத்தினுடையது என்பதையும், தாம் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு தயார் என்பதையும், இவர்கள் மூலமாக மீண்டும் வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்நிலையில் சசெக்ஸ் பல்கலைக்கழக ஆய்வாளர்களில் ஒருவரான மைக் மூர், பொதுநலவாய நாடுகளின் ஒப்பீட்டு அரசியல் சஞ்சிகையில் 'சிறிலங்காவின் ஜனநாயகத்துக்கு ஏற்பட்டுள்ள சிக்கல்கள்' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில், பிரேமதாசா காலத்துப் பேச்சு வார்த்தைகள் பற்றி வெளியிட்டுள்ள கருத்துக்கள் அதிமுக்கியமானவை. பிரேமதாசா, விடுதலைப் புலிகளை ஒரு அரசு நோக்கிய அரசாகவே கருதி கூட்டு ஏற்படுத்த முயற்சித்தார் என்று இவர் கூறுகின்றார். தமிழ்ப் பிரதேசங்களில் கொள்ளையடிப்பதும், போக்குவரத்துக் கட்டணங்கள் விதிப்பதும், பொருட்களை வாங்குவதற்கு வரி அறவிடுதலும் போன்ற பல செயல்களினால் தமக்கு உழைப்பைத் தேடிக் கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர், சிங்களப் பேரினவாதத்தைத் தூண்டி இராணுவத் தீர்வை வலியுறுத்தியதால், பிரேமதாசாவின் இந்த முயற்சி சீர்குலைப்பட்டது என்பது இவரின் கருத்து.

மைக் மூரின் இந்தக் கருத்தில் கூறப்பட்டதுபோல், பிரேமதாசா உட்பட இன்று சிறிலங்கா ஜனாதிபதியாக உள்ள விஜேதுங்கா வரை தமிழீழப் பிரேதேசத்தின் அரசு நோக்கிய அரசின் இருக்கை நிலையை நன்கு அறிவர். அன்று போலவே இன்றும் இராணுவ நலன்கள் மூலம் தமது சொந்த நலன்களை வளர்க்க விரும்பும் இராணுவ அதிகாரிகள், அரசியல்வாதிகள், ஆயுதத் தரகர்கள் போன்றோர் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரவிடாமல் இராணுவத் தீர்வையே வலியுறுத்தி வருகின்றனர். இத்தகையோருக்குத் துணையாக இருப்பது பௌத்த சிங்களப் பேரினவாதமே.

ஆயினும், யுத்தத்தின் விளைவுகள் தமிழர்களை மட்டுமல்ல முழு இலங்கைத் தீவையுமே பாதிக்கின்றது. தமிழீழ மண்மீட்பு யுத்தம் -I (1983 -1988) மட்டும் 138. 6 பில்லியன் ரூபாக்கள் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது என்று ஒரு மதிப்பீடு கூறுகின்றது. இதைவிட உயிர் உடல் சேதங்கள் கணக்கிட முடியாத அளவில் உள்ளது. தமிழீழ மண்மீட்பு யுத்தம் --II, யுத்தம் --I யை விட பல மடங்கு சேதங்களை ஏற்படுத்தியுள்ளது என்பது மதிப்பிடாமலேயே உய்த்தறியக் கூடிய தொன்று. இந்நிலையில் சிறிலங்காவால் நீண்டகாலத்திற்கு யுத்தத்தை தொடர முடியாத பொருளாதார நிலை காணப்படுகிறது.

அதேநேரம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் அதன் தலைவர் பிரபாகரனும் சர்வதேச நன்மதிப்பில் வளர்ச்சி பெற்று வருகின்றனர். கனேடிய சட்ட நிபுணரான மார்க்ஸ் பேகர் கூறுவதுபோல், "இலங்கை அரசாங்கத்துடனான இந்த மோதலில் யாழ் குடாநாட்டையும் கிழக்கு மாகாணத்தையும் சார்ந்த தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான மனஉறுதியும், சக்தியும் விடுதலைப் புலிகளுக்கு மாத்திரமே இருக்கின்றது என்பதை உலகம் ஏற்றுக் கொள்கிறது".

ஆகவே இதனை மாற்றியமைப்பதற்கு போலியான தேர்தல் ஒன்றை நடாத்தி அதில் தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட சிறிலங்கா அரசாங்கத்தின் பாராளுமன்ற ஆசனத்துக்கு ஆசைப்பட்டு தம் இனத்தையே விற்கும் சில தமிழின விரோதிகளை அதில் ஈடுபடுத்தி, போலியான தமிழ்த் தலைமைத்துவம் ஒன்றை உருவாக்குவது சிறிலங்காவின் ஒரு நோக்கு. அத்துடன் ஜனாதிபதித் தேர்தலை நடாத்தி இலங்கைத் தீவு முழுவதும் சிறிலங்காவின் இறைமை தொடர்கிறது என்பதைக் காட்டுவது மறுநோக்கு. இது நடைமுறைச் சாத்தியமற்றது என்பதையே "அரசியல் தீர்வு காணப்படும்வரை வடக்கு கிழக்கில் தேர்தலை நடாத்த அனுமதிக்க முடியாது" என்ற அன்ரன் பாலசிங்கத்தினதும், தமிழ்ச்செல்வனதும் கருத்துக்கள் வலியுறுத்துகின்றன.

இந்நிலையில் அமைதியை ஏற்படுத்துவதற்கு சர்வதேச சமூகத்து இராஜதந்திரிகள் நேரடியாக தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாகின்றது. அதனைத் தடை செய்வதற்காகவே அமெரிக்க, அவுஸ்திரேலிய தூதரக அதிகாரிகள் குடாநாடு செல்வதை சிறிலங்கா தடுத்து வருகின்றது. இந்நிலையில் வேர்னன் மார்ஸ்டன் கீவிட் சொல்வதுபோல, "1971 இல் கிழக்குப் பாகிஸ்தானில் காணப்பட்டதுபோல் சிறிலங்கா அரசாங்கம் எனும் சட்டகத்துள் தீர்வு காணக்கூடிய சூழ்நிலை போய்விட்டது". எனவே சர்வதேச சமூகத்தை நேரடியாகத் தலையிட்டு தீர்வுக்கு உதவுமாறு கோரவேண்டியது நம் ஒவ்வொருவரதும் இன்றைய கடமை. இல்லையேல் மீண்டும் மீண்டும் இதே கதைதான் தொடரும். ■

# வடக்கு-கிழக்கின் முன்னேற்றத்திற்கு வெளிநாடுகள் நிதியைக் கொட்டிக் குவிக்கத் தயார்

## ஆயர் கென்னத் பெர்னாண்டோ

"வடக்கு - கிழக்கில் அமைதி திரும்புவதற்கு சிறிலங்கா பாதை விட்டால் வடக்கு கிழக்கின் முன்னேற்றத்திற்கு வெளிநாடுகள் நிதியைக் கொட்டிக் குவிக்கத் தயாராக உள்ளன" என கொழும்பு அங்கிலிக்கன் திருச்சபையின் ஆயர் கென்னத் பெர்னாண்டோ அவர்கள் மட்டக்களப்பில் வைத்துக் கூறியுள்ளார்.

"பிரச்சினைக்குத் தீர்வு கண்டு அதன் மூலம் சமாதானமும் சகஜ வாழ்வும் ஏற்பட நாம் முயற்சி செய்ய வேண்டும். எந்த அரசு சிறிலங்காவில் பதவிக்கு வந்தாலும் மக்களுக்குத் தேவையான நிலைப்பாட்டைச் சீர்செய்யப் போவதில்லை. இந்நிலையில் வேலை வாய்ப்பு, வருமான அதிகரிப்பு, மனித மேம்பாட்டுத் திட்டங்களை அரசாங்கம் செயற்படுத்தலாமென நாம் நம்பிக்கை வைப்பதில் எவ்வித பலனுமில்லை.

எனவே இப் பிரதேசங்களில் உள்ள மூலவளங்களைக் கொண்டு ஆக்க பூர்வமான அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள ஆவன செய்ய வேண்டும். மக்களின் பங்களிப்பு இதில் செலுத்தப்பட வேண்டும். அப்போதுதான் இப்பிரதேச மக்கள் வாழ்வு வளம்பெறும்.

நான் இம்மாவட்டத்தில் ஐந்து நாட்கள் தங்கியிருந்து கொக்கட்டிச்சோலை, மகிழடித்தீவு ஆகிய இடங்களுக்குச் சென்றேன். சாதாரண மக்களைச் சந்தித்து அவர்களின் பிரச்சினையை அறிந்துகொண்டேன். இறால் வளர்ப்பில் கூடிய கவனம் செலுத்தப்பட்டால் அதிக வருமானத்தைப் பெறலாம். இதில் கணவனை இழந்தோர், ஆதரவு தேடும் குழந்தைகள் போன்றோரை ஈடுபடுத்தலாம்" என்றார்.

ஆயர் கென்னத் பெர்னாண்டோ விடம் மட்டக்களப்பு மாவட்டத்தில் 4 ஆயிரம் இளைஞர்கள் வேலை வாய்ப்பு இன்றித் தவிப்பதாகவும், 8 ஆயிரம் கணவனை இழந்தோரும், 17 ஆயிரம் ஆதரவு தேடும் தாய் தந்தையர் இல்லாத குழந்தைகளும் உள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ■

# கத்தோலிக்க பாப்பரசர் வருகைக்கு பௌத்த பிக்குகள் கடும் எதிர்ப்பு

## ■ கண்டியில் கண்டனச் சுவரொட்டிகள்

"இது பௌத்த சிங்களவர்களின் புண்ணிய பூமி. இதில் வேறு மதத்தைச் சேர்ந்தவர்கள் தரிசித்துச் செல்வதை நாம் விரும்பவில்லை" என்ற சுவரொட்டிகள் கண்டி நகரம் எங்கும் ஒட்டப்பட்டு இருப்பதாக தெரியவருகிறது.

கத்தோலிக்க பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர், அடுத்த வருட ஆரம்பத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள இருக்கின்றார். இவரின் வருகையின்போது, இவர் கண்டிக்கு விஜயம் மேற்கொள்ளுவார் எனக் கருதப்பட்டதைத் தொடர்ந்தே சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன எனத் தெரியவருகிறது.

இச்சுவரொட்டிகள் பௌத்த பிக்குகளின் தலைமையிலேயே ஒட்டப்பட்டு வருவதாகவும், சில பௌத்த விகாரைகளில் பாப்பரசரின் விஜயத்துக்கு ஒத்துழைப்பு நல்குவதைத் தவிர்க்குமாறு ஆலோசனை வழங்குமாறு தெரிவிக்கப்படுவதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை மேற்படி சுவரொட்டிகள் பொலிசாரினால் அகற்றப்பட்டு வருவதாகவும் இதனைத் தொடர்ந்து கற்பாறைகள் மீது வர்ணங்களினால் எழுதப்படுவதாகவும் மேலும் தெரியவருகிறது. ■

# பௌத்த மதத் தலைவர்கள் கட்சி அரசியலில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும்

## ■ சந்திரிக்கா குமாரணதுங்க தெரிவிப்பு

மத்திய அரசுக்கும் வட-கிழக்கு மாகாண சபைகளுக்கும் இடையிலான உறவு முறிவடைந்தமைக்கு பிரதான காரணம் இவர்களிடையிலான தொடர்பின்மையாகும்.

பேச்சுவார்த்தைகள் தொடர வேண்டும். புதிய அமைப்புகளை உருவாக்கியிருக்க வேண்டும். இதை வடக்கு -கிழக்கு மக்களுடனும், தலைவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தக் கூடியதாக உருவாக்கியிருக்க வேண்டும் என மேல் மாகாண முதலமைச்சர் சந்திரிக்கா குமாரணதுங்க கொழும்பு தினசரிக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

இப்பேட்டியின் ஒருபகுதியை இங்கே தருகிறோம்.

**கேள்வி:-** மத்திய மாநில அரசாங்கங்களுக்கிடையேயுள்ள பிரச்சினைகளை சிறப்பான முறையில் தீர்த்து வைப்பதற்கு உங்களிடம் யோசனைகள் ஏதாவது உள்ளதா?

**பதில்:-** இதனையே நான் சற்றுமுன்னர் குறிப்பிட்டேன்: புதிய அமைப்புக்கள் உருவாக்கப்படல் வேண்டும். அவை மத்திய அரசிற்கும் மாகாண சபைகளுக்கும் இடையே தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளை ஊக்குவிப்பனவாக அமைந்திருத்தல் வேண்டும். அத்துடன் பேச்சுவார்த்தைகள் முறிவதை தடுப்பதாகவும் இது அமைந்திருத்தல் வேண்டும். அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட அமைப்புக்களிடையே மத்திய அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கான அமைப்புகள் ரீதியான ஒழுங்குகள் அவசியம்.

**கேள்வி:-** ஜனாதிபதி அமைப்பு முறை தொடர்பான உங்களது அபிப்பிராயம் என்ன? இதனை மாற்றியமைக்கக் கூடிய மூன்றில் இரண்டு பெரும்பான்மையை நீங்கள் பெறுவீர்களா? தற்போதைய அரசியலமைப்பிற்கு பதிலாக

தொடர்ச்சி 12ம் பக்கம் ....

# குண்டு வீச்சுப் பாதிப்புக்கள் பற்றி செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு பேச்சுவார்த்தை

யாழ் மாவட்டத்தில் நடத்தப்படும் கண்மூடித்தனமான சுப்பர் சோனிக் விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல்களால் அப்பாவிப் பொதுமக்கள் அடையும் பாதிப்புக்கள், துன்பங்கள் பற்றி செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரி செற்றிக் பிர்பா, வடபகுதி சிறீலங்கா இராணுவ அதிகாரி பிரிகேடியர் ஜெயவர்த்தனாவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

யாழ் அரசாங்க வைத்தியசாலைப் பகுதி யுத்த சூனியப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட போதிலும் இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் சிறீலங்காப் பாதுகாப்புப் படைகளின் செல் வீச்சுக்கள், குண்டு வீச்சுக்கள் குறித்தும் செற்றிக் பிர்பா எடுத்துக் கூறியிருந்ததாகத் தெரிகிறது.

அப்பாவிப் பொதுமக்கள் பலரின் இறப்புக்கும், சாதாரண பொதுமக்களின் உடல், உயிர், பொருளாதார அழிவுகளுக்கும் இக்குண்டு வீச்சுக்கள், செல் அடிகளே காரணங்களாக உள்ளன. ■

# இராணுவம் பள்ளிக்கூடத்தில்! மாணவர்கள் மரநிழலில்!!

தென்தமிழீழத்தில் ஆக்கிரமிப்புச் செய்யும் சிறீலங்கா இராணுவத்தினர் தமிழ் மாணவர்களின் கல்வியைச் சிதைக்கும் வகையில் பள்ளிக்கூடங்களிலேயே முகாமிட்டுள்ளனர்.

முறக்கொட்டாஞ்சேனை இராமகிருஸ்ணன் மிசன் வித்தியாலயம் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலையில் மாணவர்கள் மரநிழலில் கல்வியைத் தொடர வேண்டிய நிலை உள்ளதாக தெரிகிறது. முறக்கொட்டாஞ்சேனை இராமகிருஸ்ண மிசன் பாடசாலைக் கட்டடங்களை மீளப்பெற எத்தனையோ முறை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவற்றைத் திருப்பிக் கொடுக்க மறுத்துவிட்டனராம்.

வேறு இடத்தில் பாடசாலைக் கட்டடம் அமைக்க பணம் திரட்டப்பட்ட போதிலும் காணியை வழங்க சிறீலங்கா அரசு மறுத்துவருவதனால் அதுவும் கைகூடாத நிலையில் மாணவர்கள் கல்விச்சீரழிவுக்கு ஆளாகிவருவதாகக் கூறப்படுகிறது. அதேநேரம், தான் ஆக்கிரமித்துள்ள பகுதிகளில் மக்களது வாழ்வு வழமைக்குத் திரும்பிவிட்டதாக சிறீலங்கா அரசு பிரச்சாரம் செய்துவருகிறது. ■

# நாடு திரும்பும் அகதிகளுக்கு அரசா பாதுகாப்பு ?

## ■ கத்தோலிக்க தேவாலய கவுன்சில் கண்டனம் !
## ■ தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பும் சுவிஸ் அரசின் முடிவுக்கும் எதிர்ப்பு!

"இலங்கை - சுவிற்சலாந்து அரசுகள் செய்துகொண்ட உடன்படிக்கைக்கிணங்க இலங்கை அகதிகளுக்கு சுவிற்சலாந்து அரசு புகலிடம் அளிக்க மறுப்பதும், அவர்களை நாடு கடத்தும் நடவடிக்கையும் கண்டிக்கப்பட வேண்டியவையாகும்.

வட - கிழக்கில் தமிழர்களுக்கு எதிராக நடைபெறும் இராணுவ நடவடிக்கை, மனித உரிமை மீறல் செயல்கள் ஆகியவற்றுக்கிடையில் தாயகம் திரும்பும் அகதிகளுக்கு பாதுகாப்பு வழங்கப்படுமென இலங்கை அரசு அளித்துள்ள வாக்குறுதி அர்த்தமற்றதாகும்".

இவ்வாறு, கொழும்பிலுள்ள சர்வதேச விவகாரங்களுக்குப் பொறுப்பான கத்தோலிக்க தேவாலயங்களின் கவுன்சில், இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை சம்பந்தமாக ஐ. நா. மனித உரிமைக் கவுன்சிலுக்கு அனுப்பி வைத்துள்ள அதன் வருடாந்த மாநாட்டு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையில், மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: இலங்கையில் நீண்டகாலமாக தீர்வு காணப்படாமலிருக்கும் இனப்பிரச்சினை, வட -கிழக்கு மக்களுக்கு எல்லையற்ற துன்பத்தையும் ஏழ்மையையும் ஏற்படுத்தியுள்ளது.

நாடு அவசரகாலச் சட்டவிதிகளின் கீழ் ஆளப்படுவதால், அரசியல் அமைப்பு வழங்கியுள்ள அடிப்படை பாதுகாப்பு மக்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் படையினரால் மக்கள் கொல்லப்படுவதும், காணாமல் போவதும், வட - கிழக்கில் வான், மோட்டார்செல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதும் அடிக்கடி நடைபெறும் சாதாரண நிகழ்ச்சியாக இருக்கின்றது. வட -கிழக்கில் மின்சாரம், வீட்டு வசதி, மருத்துவ வசதி ஆகியன இன்றி மக்கள் துன்பப்படுவதோடு, அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கும் பெரும் தட்டுப்பாட்டு நிலையை எதிர்நோக்குகின்றனர்.

"இனப்பிரச்சினை இல்லை; வட -கிழக்கில் இருப்பது பயங்கரவாதம், இதை இராணுவ நடவடிக்கைகள் மூலமாகவே தீர்க்கப்பட வேண்டும்" என்ற அரசின் வாதம் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பெரும் தடையாக உள்ளது.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் மக்கள் அடிக்கடி காணாமல் போதல், கைது செய்தல், தடுப்புக் காவலில் வைத்தல் முதலிய மனித உரிமை மீறல் செயல்களை சர்வதேச சமூகம் கவனத்தில் மேற்கொள்ள வேண்டும்.

இந்நாட்டில் சமாதானம் ஏற்பட்டு அரசியல் அமைப்பில் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடிப்படை பாதுகாப்பு, நிலைநிறுத்தப்படும் வரை இலங்கையில் சகஜ நிலை நிலவுவதாகக் கருதுதல் தவறாகும்.

தற்போதைய நிலையில் ஐரோப்பிய நாடுகளின் தவறான கருத்தின்படி இலங்கை -சுவிற்சலாந்து அரசுகள் செய்துகொண்ட உடன்படிக்கைக்கு இணங்க, இலங்கை அகதிகளுக்கு சுவிற்சலாந்து புகலிடம் அளிக்க மறுப்பதும், அவர்களை நாடு கடத்தும் நடவடிக்கையும் கண்டிக்கப்பட வேண்டிய செயல்களாகும். ■

# காஞ்சிரங்குடா மக்களை வெளியேறுமாறு படையினர் உத்தரவு

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலையிலுள்ள காஞ்சிரங்குடாப் பகுதியில் இருந்து மக்களை வெளியேறுமாறு சிறீலங்கா அதிரடிப்படையினர் அச்சுறுத்தியுள்ளனர்.

அண்மையில் அப்பகுதியைச் சுற்றி வளைத்த அதிரடிப்படையினர் பல பொதுமக்களைக் கைது செய்து சோதனை செய்து அவர்களைக் கடுமையாகத் தாக்கினார்கள். இதன்பின் அவர்களை உடனடியாகக் கிராமத்தை விட்டு வெளியேறுமாறு எச்சரிக்கை செய்துள்ளனர். ■

# சிறீலங்காவின் அபிவிருத்திக் கொள்கையில் உறுதி இல்லை

## ■ இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் கண்டனம்

"சிறீலங்கா அரசின் அபிவிருத்திக் கொள்கைகளில் உறுதிப்பாடு இல்லை. இலங்கைக்கு ஜப்பான் தொடர்ச்சியாக வழங்கும் உதவிகள் நிபந்தனைக்கு உட்பட்டவை. இலங்கை அரசு, முழுமையாக சிநேகித மனோபாவத்தில் ஜப்பானை நம்பியிருக்க முடியாது" இவ்வாறு கொழும்பிலுள்ள ஜப்பானிய தூதரகம் சிறீலங்கா அரசுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் மசாக்கிகுனியாசு, கொழும்பில் பத்திரிகையாளர் மகாநாடொன்றை நடத்தியுள்ளார்.

மேலும் அவர் அப்பத்திரிகையாளர் மகாநாட்டில், "சிறீலங்கா அரசும் அதன் மக்களும் சிறீலங்காவின் பொருளாதார நடவடிக்கைகளில் இருந்து விலகியுள்ளதோடு இவ்விடயத்தில் முழுமனதுடனான முயற்சிகளில் ஈடுபடுவதில்லை.

இலங்கைக்கு நிதி வழங்கும் நாடுகள் இலங்கையினின்றும் பின்வாங்குவதால் இந்நாட்டுக்கு வழங்கப்படும் நிதிஉதவியின் அளவு உறுதியாகக் குறைந்துவருகின்றது. இவ்விடயத்தில் ஜப்பானின் பங்கு முக்கியமாக உள்ளது.

இலங்கை அரசு, முழுமையாக சிநேகித மனோபாவத்தில் ஜப்பானை நம்பியிருக்க முடியாது. இலங்கை அரசிடம் அபிவிருத்தி தொடர்பாக கடுமையான முயற்சியை எதிர்பார்க்கின்றோம். ஏனெனில் இலங்கை அரசின் அபிவிருத்திக் கொள்கையில் உறுதி இல்லை. எம்மால் இலங்கைக்கு வழங்கும் தொடர்ச்சியான நிதி உதவி நிபந்தனைக்கு உட்பட்டது.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி, தொடர்ச்சியான முயற்சியையும், உறுதியான கொள்கையையும் கொண்டிருத்தல் வேண்டும்.

அதிகமான விடுதலை நாட்களை வழங்கும் இலங்கையின் கொள்கை இந்நாட்டிற்கு நன்மை பயக்காது. அடுத்த பிரச்சினை மூளைசாலிகளின் வெளியேற்றம். அதிருப்தி அடைந்த அதிதிறமை வாய்ந்த இலங்கையர்கள் வெளிநாடு செல்கின்றார்கள். வெளிநாடு சென்றவர்களை நாட்டுக்கு அழைப்பது தொடர்பாக இலங்கை அரசு என்ன செய்கின்றது. மனிதவள அபிவிருத்தியை மாறுபடும் சூழ்நிலைக்கு ஏற்ப இலங்கை திருத்தி அமைக்கவேண்டும்.

இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்படும் நிலையிலும், ஜப்பானின் நிதி உதவியினது உபயோகம் இந்நாட்டின் அபிவிருத்தியை எடுத்துக்காட்டுவதாக இருக்குமாயின் எமது நிதி இலங்கைக்குக் கிடைக்கும்" எனக் குறிப்பிட்டார். ■

# 7 வருடமாக பலாலியில் கடமையாற்றிய சிறீலங்கா இராணுவத்தினர் நஞ்சருந்தி மரணம்

சிறீலங்கா இராணுவத்தினரிடை மனவிரக்தியும் மனப்பீதியும் உச்சக்கட்டத்தை எய்தியுள்ளதை தனிப்பட்ட இராணுவத்தினரின் நடவடிக்கைகள் தெளிவுபடுத்துகின்றன.

ஏழு வருடங்களாக பலாலி இராணுவ முகாமில் கடமையாற்றிய யக்கள பொல்கேன என்ற இடத்தைச் சேர்ந்த அமுனுகொட ருபசிங்க ஆராய்ச்சிகே பெரேரா என்ற 29 வயது இராணுவத்தினன் பலாலி இராணுவ முகாமில் இருந்து தப்பியோடி வீடு போய்ச் சேர்ந்தான். இவரைத் தேடி இருமுறை சிறீலங்காப் பொலிசார் அங்கு சென்றுள்ளனர். இருமுறையும் ஒழிந்துகொண்ட இவர் தனது சகோதரியிடம் தன்னால் இனி இராணுவத்தில் வடபகுதிக்குச் செல்ல முடியாது எனக் கூறியதாகவும், அதே வேளை பிடிபட்டால் சிறீலங்கா இராணுவம் தனக்கு என்ன தண்டனை தரும் என நினைக்கத் தனக்குப் பயமாக இருப்பதாகவும் கூறியுள்ளார். இதன் பின்னர் சாராயத்தில் நஞ்சைக் கலந்து அருந்தி தற்கொலை செய்து கொண்டார் என இவரது மூத்த சகோதரி ஜே. ஏ. ரத்னசீலி சாட்சியமளித்துள்ளார். ■

# இலங்கை அகதிகளை திருப்பி அனுப்பும் முடிவை மறுபரிசீலனை செய்க !

## ■ சுவிற்சலாந்து அரசிடம் கனடிய சட்டவல்லுனர் மார்க்ஸ் மேஜர் கோரிக்கை

இலங்கைத் தமிழ் அகதிகளை நாடு கடத்த சுவிற்சலாந்து அரசு எடுக்கும் நடவடிக்கைகளை, கனடிய சட்டவல்லுனர் மார்க்ஸ் மேஜர் கண்டித்துள்ளார். இதுதொடர்பாக சுவிற்சலாந்தின் அகதிகள் திணைக்களத்தின் தலைமையுடன் அவர் கடிதமூலம் தொடர்பு கொண்டுள்ளார். அக்கடிதத்தில் வேறு நாடுகளிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் நாடு திரும்புவதற்குரிய சாதகமான சூழ்நிலை இல்லை எனக்கூறும், சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கையை அவர் மேற்கோள் காட்டியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

இலங்கையில் தமிழர்களின் நிலை குறித்து இலங்கைக்கான சுவிற்சலாந்து தூதுவரால் உங்களது அரசுக்கு கொடுக்கப்பட்ட தகவல் பிழையானது. இலங்கைத் தமிழர்களின் நிலையை நன்கறிந்த கனடா, அங்கு தஞ்சம் கோரிய தொண்ணூறு வீதமான இலங்கைத் தமிழர்களுக்கு அரசியல் புகலிடம் வழங்கியுள்ளது.

இலங்கைத் தமிழ் அகதிகள் தொடர்பாக ஜேர்மன், பிரான்ஸ் நாடுகளின் அணுகுமுறையை சுவிற்சலாந்து பின்பற்றுவது கவலையளிக்கக் கூடிய விடயம். இவ்விடயத்தை சுவிற்சலாந்து மனிதாபிமான அடிப்படையில் மறுபரிசீலனை செய்ய வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

திரு. மார்க்ஸ் மேஜர், இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு கனடாவிற்கு வருமாறு அமைச்சர் தொண்டமானுக்கு அழைப்பு விடுத்திருந்தமையும், அவரது முயற்சியை சிறீலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா நிராகரித்திருந்தமையும் தெரிந்ததே. ■

# பற்றைகள் வெட்ட 1500 தமிழர் தேவையாம்

## ■ உதவி அரசாங்க அதிபருக்கு சிறீலங்காப் படையினர் உத்தரவு

மட்டக்களப்பு மாவட்டத்தில்பட்டிப்பளைப் பிரதேசத்தில் உள்ள சிறீலங்காப் பொலிஸ் அதிரடிப் படையினர், தமது பாதுகாப்பு தொடர்பான வேலைகளைச் செய்வதற்கு 1500 தமிழர்களைத் திரட்டித் தருமாறு பட்டிப்பளை உதவி அரசாங்க அதிபருக்கு உத்தரவிட்டுள்ளனர்.

படைகளால் திரட்டப்படும் தமிழர்கள் மண்முனைத்துறையில் கண்ணாபற்றைகளையும், பண்டாலியாவெரிளியில் உள்ள கண்ணா காடுகளையும் வெட்டுவதற்காக பயன்படுத்தப்படவுள்ளனர்.

இதேவேளை தும்பங்கேணிப் பகுதியில் உள்ள பொலிஸ் அதிரடிப்படையினர் அப்பிரதேசத்தில் உள்ள தென்னை, பனை, தேக்கு போன்ற மரங்களை வெட்டி தமது தேவைகளுக்கு பயன்படுத்தி வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. ■

# சிறீலங்கா புலனாய்வுப் பிரிவின் முடிவில் அதிருப்தி பிரேமா கொலை பற்றி சந்தேகம்

## ■ மீண்டும் விசாரணை செய்ய பிரேமதாசாவின் மகள் கோரிக்கை

முன்னாள் சிறீலங்கா ஜனாதிபதி திரு. பிரேமதாசா கொலை செய்யப்பட்ட சம்பவம் பற்றி இதுவரை நடைபெற்ற விசாரணைகள் திருப்திகரமானதாக இல்லையெனவும், இது தொடர்பாக புதியதொரு விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டு மீண்டும் பூரண விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் திரு. பிரேமதாசாவின் மகளான திருமதி. துலாஞ்சலி ஜெயக்கொடி, தற்போதைய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த வருடம் மே தின ஊர்வலத்தின்போது முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா குண்டு வெடிப்பு ஒன்றில் கொல்லப்பட்டார். இக்கொலை தொடர்பாக சிறீலங்கா புலனாய்வுப் பிரிவினர், இது தற்கொலைக் குண்டு நபர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்டதாகவும், இவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர் எனவும் தெரிவித்து வந்தனர்.

இக்கொலை தொடர்பாக திருமதி. கேமா பிரேமதாசா ஏற்கனவே சந்தேகம் தெரிவித்துள்ளார். தற்சமயம் திரு. பிரேமதாசாவின் மகளான திருமதி. துலாஞ்சலி ஜெயக்கொடி தனது தந்தையாரின் கொலை சம்பந்தமாக நடத்தப்பட்ட விசாரணைகள் திருப்திகரமற்றவை எனவும், இதுபற்றி விசாரணை நடத்த ஒரு சுதந்திரமான விசாரணைக்குழுவொன்று அமைக்கப்பட வேண்டும் எனவும் கோரியுள்ளார்.

இது சம்பந்தமாக திரு. டி. பி. விஜேதுங்கா, திருமதி ஜெயக்கொடிக்குப் பதில் அனுப்பியுள்ளதாகவும் அதில் உள்ள விபரங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை எனவும் செய்தி ஒன்று கூறுகிறது.

திரு. பிரேமதாசாவின் அரசியல் எதிரிகளை கட்சிக்குள்ளும், அரசாங்கத்திற்குள்ளும் கொண்டுவர எடுக்கப்படும் அவசர முயற்சிகளும் அவரது தீவிர ஆதரவாளர்கள் பொறுப்புக்களில் இருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்படுவதுமே இச்சந்தேகம் எழக்காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. ■

# சிறீலங்கா கடற்படை, விமானப்படைக்கு ஓய்வு பெற்றவர்கள் மீண்டும் நியமனம்

சிறீலங்கா கடற்படை விமானப் படைகளில் படித்த சிங்கள இளைஞர்கள் சேர ஆர்வம் காட்டாமையினால் ஆளணிப் பற்றாக்குறை தோன்றியுள்ளது. இதனை ஈடு செய்வதற்கு வடக்கு கிழக்கில் பணிபுரிவதற்கென ஓய்வு பெற்ற கடற்படை விமானப்படையினர் மீண்டும் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கு மீண்டும் சேவையாற்றும் காலத்தைச் சேர்த்து ஓய்வூதியமும் பணிக்கொடையும் வழங்குவதாக பாதுகாப்பு அமைச்சு ஆசை காட்டியுள்ளது. ■

# அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தின் தாமதமான மதிப்பீடு

தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கையை இந்தியா நிறுத்த வேண்டும் என, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் விடுத்துள்ள வேண்டுகோளானது, காலம் தாழ்த்தியாயினும் யதார்த்த நிலையை அவ்வமைப்பு புரிந்துகொண்டுள்ளதைக் காட்டுகிறது. இது இலங்கைத் தமிழ் அகதிகளைப் பொறுத்தும், ஏனைய தமிழர்களைப் பொறுத்தும் இன்றைய நிலையில் முக்கியமானதாகும்.

இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை. இலங்கையில் தமிழர்கள் பாதுகாப்புடன் சுதந்திரமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என சிறீலங்கா அரசாங்கம் கூறலாம். அதனைப் பொறுத்து அவ்வாறு கூறுவது அவசியமானதாகும். ஆனால் யதார்த்த நிலை வேறுவிதமாக உள்ளது. இலங்கையில் தமிழர்களின் சுதந்திரம், பாதுகாப்பு என்பன எப்பொழுதும், எங்கும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுக்கொண்டே இருக்கின்றது. தென்னிலங்கையில் தமிழர்கள் சிங்களவர்களோடு சகோதரர்கள் போல் வாழ்கிறார்கள் என அரசு கூறுகின்றது. ஆனால் எப்பொழுது கைது செய்யப்படுவோம், எப்பொழுது சிறையில் அடைக்கப்படுவோம் என அஞ்சி நடுங்குவதே அங்குள்ள தமிழர்களின் வாழ்வாக உள்ளது. இதனால் வெளியில் நடமாடுவதையும் பொதுவைபவங்களுக்குச் செல்வதையும் எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவிற்கு தமிழர்கள் குறைத்துக்கொண்டுமுள்ளனர்.

இதேபோன்றே, "கிழக்கை தாம் விடுவித்துவிட்டதாக" சிங்கள அரசு கூறுகிறது. ஆனால் அங்கு இராணுவ ஆட்சியே நடைபெறுகின்றது. இதனை அங்குள்ள அரச சார்புக் குழுக்களே கூறுகின்றன. விரும்பிய நேரத்தில் கைது, சித்திரவதை, சிறை என்பன வழக்கமான சம்பவங்கள் ஆகும். அண்மையில்கூட பனிச்சங்கேணியில் 56 வீடுகளை தீயிட்டுக் கொளுத்திய இராணுவம், ஒருவரைச் சுட்டுக் கொன்றதோடு பலரை வன்மையாகத் தாக்கியும் உள்ளது.

இதேசமயம் வடக்கில் விமானத் தாக்குதல், எறிகணைத் தாக்குதல், துப்பாக்கிச் சூடு என மக்கள் மீது தொடர் தாக்குதல்கள் நடாத்தப்பட்டுக்கொண்டே இருக்கின்றது. அத்தோடு பல்லாயிரக் கணக்கான துருப்புக்கள், நவீன ஆயுதங்கள் சகிதம் பெரும் தாக்குதல் ஒன்றுக்கும் தயாராக உள்ளனர். ஆனால், இந்நிலையானது கடந்த நான்கு ஆண்டுகாலப் பகுதியில் புதியதொரு சூழ்நிலை அல்ல. இரண்டாம் ஈழப்போர் ஆரம்பத்தில் இருந்தே இந்நிலை இருந்துவருகின்றது. போர் எப்பொழுதும் ஓயவுமில்லை. அதன் அச்சுறுத்தல் நிற்கவுமில்லை. இந்நிலையில் தமிழகத்தில் இருந்து அகதிகளைத் திருப்பி அனுப்புவதென அப்பொழுது எடுத்த முடிவே தவறானதும், மனிதாபிமானமற்றதாகவும் இருந்தது. ராஜீவ் காந்தி கொலையினால் அரசியல் இலாபம் தேடமுயன்ற இந்திய அரசியற் கட்சிகள், குறிப்பாக தமிழகக் கட்சிகள் இவ்விவகாரத்தில் தீவிரமாக இருந்தன வென்றால் அதற்கு ஒத்துழைப்பு வழங்க அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் தயாராக இருந்தமை இவர்களின் தவறேயாகும். இது இலங்கையின் அரசியல் சூழ்நிலை பற்றிய தவறான கணிப்பீட்டாலோ அன்றி வேறு இலாப நோக்கினாலோ ஏற்பட்டதாக இருக்கலாம்.

இத்தவறான நடவடிக்கை காரணமாக, இலங்கையின் அரசியல் சூழ்நிலை பற்றி உலகில் தவறான ஒரு கணிப்பீடு எழுந்தது. இப்பாதிப்பு மேற்குலகிலும் இருந்தது. இதன் வெளிப்பாடாகவே அங்குள்ள தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவது தொடர்பாக மேற்கு நாடுகள் சிந்திக்கத் தொடங்கின. இதனால் சிறீலங்கா அரசாங்கத்தின் பிரசாரத்தை ஏற்று அகதிகளைத் திருப்பி அனுப்புவது தொடர்பாக பேச்சுவார்த்தைகளை நடத்தியதோடு திருப்பி அனுப்புவதில் தீவிர கவனமும் செலுத்துகின்றனர்.

இந்நிலையில் தற்பொழுதாவது அ. ஐ. நா. உயர்ஸ்தானிகராலயம் கள நிலவரத்தை சரியாக மதிப்பீடு செய்தமை யதார்த்த நிலையை உலகிற்கு வெளிக்காட்ட உதவக்கூடியதாகும். இருப்பினும் சில நாடுகள் தாம் முன்வைத்த காலை இனிப் பின் வைக்குமா என்பது பற்றி எதையும் கூறிவிடமுடியாது. ஆனால் அவை தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளாதுவிட்டால் அவற்றின் இம்முடிவிற்கான பொறுப்பில் கணிசமான பங்கை அ. ஐ. நா. உயர்ஸ்தானிகராலயம் ஏற்கத்தான் வேண்டும். ■

# வெளிநாட்டு சிறீலங்கா அமைப்புக்களும் சிறீலங்கா பாதுகாப்புப் படைகளுக்கு உதவி

வெளிநாடுகளிலுள்ள சிறீலங்காவின் தூதரகங்களும், வெளிநாடுகளிலுள்ள சிறீலங்காவின் வர்த்தக அமைப்புக்களும் சிறீலங்காவின் தூதரகத்தின் ஆதரவுடன் இயங்கும் கலை,கலாச்சார விளையாட்டுச் சங்கங்களும், பொதுநிகழ்ச்சிகள் மூலம் திரட்டும் பணமும் சிறீலங்கா பாதுகாப்புப் படைகளுக்கு உதவியாக அனுப்பி வைக்கப்படுகிறது. இந்த உண்மையை உணராமல் வெளிநாடுகளில் வாழும் தமிழர்களும் விளையாட்டு எனவும், கலைநிகழ்ச்சி, நடனநிகழ்ச்சி எனவும் இவைகளை நம்பி தாமும் பங்குபற்றி சிறீலங்காவின் ஆக்கிரமிப்பு படைகளுக்கு தம்மையறியாமலேயே நிதிஉதவி செய்து வருகின்றனர். ■



இப்படத்தில் பிரான்ஸ்,அமெரிக்கா ஆகிய நாடுகளில் வதியும் இலங்கையர்களும், மற்றும் அமைப்புக்களும் வழங்கிய ஊன்று கோல்கள், அம்புலன்ஸ் வாகனம் ஆகியவற்றை, சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமில்டன் வணசிங்க பெற்றுக்கொள்வதை காணலாம்.

# பிரேமதாசா கொலைபற்றி மகள் கேட்ட சுயாதீன ஆணைக்குழு அமைக்கப்படமாட்டாது

□ சிறீலங்கா அமைச்சர் விமல் விக்கிரமசிங்க தகவல்

சிறீலங்காவின் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா கொலை குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட விதம் பற்றியும், கொலை நடந்த இடம் உடனடியாக கழுவித் துப்பரவு செய்யப்பட்டது பற்றியும் விசாரணை நடத்துவதற்குச் சுயாதீன ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என பிரேமதாசாவின் மகள் துலாஞ்சலி ஜெயக்கொடி கேட்டிருந்தார். இவர் சிறீலங்காவின் ஆளும் கட்சி மீது குற்றச்சாட்டுக்களாக இதனை சுமத்தியுள்ளதுடன் அதிருப்தியும் தெரிவித்திருந்தார்.

இதுகுறித்து சிறீலங்காவின் கொழும்பு மாவட்டப் பிரதிநிதி நிமால் சிறிபால டிசில்வா, சிறீலங்காப் பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு விடையளித்த சிறீலங்கா அமைச்சர் விமல் விக்கிரமசிங்க, "அப்படியான ஆணைக்குழு அமைப்பது பற்றி தீர்மானம் ஏதும் இல்லை" எனக் கூறியுள்ளார்.

இதற்கிடையில் திருமதி கேமா பிரேமதாசா சிறீலங்காப் பொலிஸ் மாஅதிபரைச் சந்தித்து தனது கணவன் ஏன், யாரால், கொல்லப்பட்டார் என வினவியுள்ளதாக அறிவித்துள்ளார். ■

# யுத்தம் நடத்துவதில் சிறீலங்கா அரசாங்கம் வறுமையால் சிங்களவர் தற்கொலை

பொலநறுவை மாவட்டத்தில் வறுமை காரணமாக விவசாயக் கடனை திருப்பிச் செலுத்த முடியாத சிங்கள விவசாயிகள் பலர், தற்கொலை செய்துவருவதாக தனிநபர் ஆணைக்குழு அறிக்கை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

1994 ஜனவரி முதலாம் திகதிக்குப் பின்னர் எதிர்பாராத அளவுக்கு பொலநறுவை மாவட்டத்தில் தற்கொலைகள் அதிகரித்துள்ளன. இதுபற்றி ஆராய்ந்த போதே இந்த உண்மை வெளியாகியுள்ளது.

ஆனால் சிறீலங்கா அரசாங்கமோ யுத்தத்தை நடத்துவதில் சிறீலங்காவின் தேசிய வருமானத்தில் 25 வீதத்தை செலவிடுவதுடன், இலங்கைத் தீவில் வாழும் எல்லா மக்களிடம் இருந்தும் மூன்றரை வீத ஊதியத்தை பாதுகாப்பு வரி என்ற பெயரில் கொள்ளையடித்து வருகிறது. அத்துடன், தான் நினைத்தவாறு தனது ஆட்சியை நிலைநிறுத்த பணத்தை பலவாறாக விரயம் செய்துவருகிறது. இறந்த கொப்பேக்கடுவவின் மனைவிக்கு எழுபத்தையாயிரம் ரூபா வழங்கப்பட்டது எனவும், தற்போது காமினி திசநாயக்கா பதவியேற்பதற்காக இராஜினாமாச் செய்தவரின் மனைவிக்கு மாதம் 25 ஆயிரம் ரூபா ஊதியத்தில் வேலை வழங்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. அரசாங்கத்தின் இத்தகைய போக்கையிட்டு சிங்கள மக்கள் வெளிப்படையாகவே அதிருப்தி தெரிவித்து வருகின்றனர். ■

# அரசியல் படுகொலைகளில் சிறீலங்கா உலக சாதனை

□ ஐ.நா. அறிக்கை கூறுவதாக சந்திரிகா தகவல்

"உலகில் அரசியல் படுகொலைகள் நடக்கும் நாடுகளில் சிறீலங்கா இரண்டாவது இடத்தைப் பெற்று அபாரமான உலக சாதனை செய்துவருகிறது" என சிறீலங்காவின் மேல் மாகாண முதலமைச்சர் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா தெரிவித்துள்ளார். அவர் மேலும் பேசுகையில், "வியட்நாமுக்கு அடுத்தபடியாக அரசியல் கொலைகள் மலிந்துள்ள நாடாக இலங்கை உலகில் விளங்குகிறது என ஐ. நாடுகள் சபையின் அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது. தமது கருத்துக்களை ஏனையோருக்கு பலாத்காரமாகத் திணிக்க முற்பட்டதாலேயே கடந்த காலத்தில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான இளைஞர்களின் உயிர்கள் அநியாயமாக பலியாகியுள்ளன. இந்த அநியாயமான உயிர்ப்பலிகளுக்கு இந்நாட்டிலுள்ள அனைத்து அரசியல் தலைவர்களும் பொறுப்பேற்க வேண்டும். ஒருவரை ஒருவர் கொலை செய்துகொண்டு நடத்தப்படும் இந்த அரசியலை இனியும் தொடர விடக்கூடாது. மக்கள் அச்சமின்றி சந்தேகமின்றி வாழக்கூடிய சூழலை ஏற்படுத்த வேண்டும். மிருகங்களைப்போல் நடந்துகொள்ளாது ஒவ்வொருவரது உரிமைகளையும் கௌரவித்து நடந்து கொள்ளக்கூடிய வகையில் தற்போதுள்ள கல்விப் போதனையை மாற்றியமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது" எனக் கூறினார். ■

# தங்களைப் பாதுகாக்கவே தமிழர் ஆயுதமேந்தியுள்ளனர்

## இனப்பிரச்சினையில்லை என்பவர்களிடம் தீர்வு கோருவதும் பிரச்சினையே

■ முன்னாள் இராஜதந்திரி இஸாத் குசைன்

"1977ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கம் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிட்ட வன்முறைகள் காரணமாகத்தான் தமிழ்மக்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ள ஆயுதம் ஏந்தி நிற்கின்றார்கள். ஐ. தே. க. அரசாங்கம் முஸ்லீம்களுக்கு எதிராகவும் செயற்பட்டு வந்துள்ளது. விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் ஆயுதமேந்திப் போராடத் தொடங்கியதால்தான் அந்த இயக்கத்தின் பலம் அதிகரித்துள்ளது. "

இவ்வாறு "அரசும் இனப்பிரச்சினையும்" என்ற தலைப்பில் உரை நிகழ்த்திய முன்னாள் இராஜதந்திரி இஸாத் குசைன் கூறினார். அவர் மேலும் பேசுகையில்,

"1983 இனக்கலவரம் அரசாங்கத்தின் திட்டமிட்ட சதி. கொழும்புக்கு விடுதலைப் புலிகள் வருகின்றனர் என வதந்தியை பரப்பியே கலவரத்தை அரசாங்கம் தூண்டியது.

அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகளை உரியமுறையில் அமுல் நடத்தாமல் பின்வாங்குவதால் விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கைவிட்டுப் பேச்சு வார்த்தையில் கலந்து கொள்வது சாத்தியமில்லை. பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஒருவர்மீது ஒருவர் நம்பிக்கை கொள்ளவேண்டும்.

நாட்டின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்விற்கு சமஷ்டி ஆட்சி முறையே சிறந்தது. ஆனால் மத்திய அரசாங்கத்தின் தலையீடுகளை கட்டுப்படுத்தக் கூடியவகையில் அது அமைய வேண்டும்.

அதிகாரத்தைத் தொடர்ந்தும் தன்னிடம் வைத்துக்கொள்ளும் நோக்கத்தினால்தான் மங்கள முனசிங்கா தலைமையிலான தெரிவுக்குழுவிற்கு அரசாங்கம் இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்கவில்லை. தீர்வை முன்வைத்தால் வாக்குகளை இழக்கவேண்டிவரும் என்ற சுயநலத்தினால் சிறீலங்கா சுதந்திரக்கட்சியும் பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்கவில்லை.

இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண சுதந்திரக்கட்சியும் ஐக்கிய தேசியக்கட்சியும் ஒன்றிணைந்து தீர்வை முன்வைக்க வேண்டும் என்பது அவசியமில்லை. பிரச்சினைக்குத் தீர்வு அவசியம் என, பிலிப்பைன்ஸ் நாட்டில் அக்கினோவுக்கு எதிராக மக்களை ஒன்று திரட்டியது போல் மக்களை ஒன்று திரட்டுவதன் மூலமே பிரச்சினைக்கு மக்கள் விரும்பும் தீர்வு ஏற்படலாம்" என அவர் கூறினார். ■

# கேடீஸ் தும்புத் தொழிற்சாலை; சுயசார்பு பொருண்மியத்தின் முன்மாதிரி

தமிழீழத்தில், சுயசார்பு பொருண்மியத்தை நிலை நிறுத்தும் நோக்கமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளில், "கேடீஸ்" தும்புக் கைத்தொழில் நிறுவனமும் குறிப்பிடத்தக்கது. 6 தொழிலாளர்களை மட்டும் வைத்துக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம் இன்று 18 கிளைகளைப் பெற்றுள்ளது. 450றக்கு மேற்பட்ட மக்கள் தொழில் வாய்ப்புக்களை பெறுமளவிற்கு பெரும் நிறுவனமாக வளர்ந்துள்ளது. தமிழீழத்தில் கிடைக்கக்கூடிய வளங்களைக் கொண்டு சுயசார்புப் பொருண்மியத்தை கட்டியெழுப்ப முடியுமென்ற நம்பிக்கைக்கு இவ் நிறுவனம் கோடி காட்டுகின்றது.

சிறீலங்கா அரசின் நிர்த்தாட்சண்ய பொருளாதாரக் கொள்கை தமிழீழப் பிரதேசத்தில் தொழிலாளரின் வேலை வாய்ப்புக்களைப் பெருமளவு குறைத்துள்ளது. இதனை ஈடுசெய்யும் வகையில் தமிழீழத்தில் சுயசார்பு பொருண்மியத்தை நிலை நிறுத்தும் பல தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. தொழிற்துறையில், யாழ். மாவட்டத்தின் தென்மராட்சிப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட கேடீஸ் தும்புத் கைத்தொழில் நிறுவனம் நெஞ்சில் பால் வார்த்திருக்கிறது. கைத்தொழிலிலும் குடிசைக் கைத்தொழிலிலும் வேலை இழந்தவர்களுக்கு இந்தத் தொழில் நிறுவனம் வேலை வழங்கியுள்ளது. மனித உழைப்பைச் சார்ந்திருக்கும் கேடீஸ் தும்புக் கைத்தொழில் நிறுவனம் பதினெட்டுக்கும் மேற்பட்ட கிளைகளைக் கொண்டு இயங்குகின்றது. இது தென்மராட்சி மக்களின் எதிர்காலம்.

மணல்பரப்பு. தென்னந்தோப்பினால் நிழலாக்கப்பட்ட காற்றை அனுபவித்துக்கொண்டு கேடீஸ் தும்புக்கைத்தொழில் நிறுவனத்தைச் சுற்றிப் பார்த்தோம். இந்த நிறுவனம் மூன்றாண்டினைப் பூர்த்தி செய்துள்ளது. பொருளாதார ஆதாயத்தை மாத்திரம் கருத்திற்கொண்டு நிறுவனம் இயங்கவில்லை. சமூக. நலனைக் கணக்கில் எடுத்துக் கொண்டு இந்த நிறுவனம் இயங்குவது நம்பிக்கை ஊட்டுகிறது.

1991 ஆம் ஆண்டு முற்பகுதியில் இந்த நிறுவனத்தை ஆரம்பிப்பதற்கான முன்வரைவு ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. போர்ச் சூழ்நிலையிலும், கஸ்டங்களின் மத்தியிலும், அதே ஆண்டு ஆவணி மாதத்தில் நிறுவனம் உற்பத்தியை ஆரம்பித்தது. இந்த நிறுவனம் நுகர்ச்சிப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான மூலப் பொருட்களை உள்ளூரிலேயே பெற்றுக்கொள்கிறது. முடிவுப் பொருட்கள் தமிழீழப் பிரதேசத்திலேயே சந்தைப்படுத்தப்படுகின்றன. ஒருவராவது தொழில் வாய்ப்பின்றி இருக்கக்கூடாது என்றும், அதே நேரத்தில் சுயசார்பு பொருள் உற்பத்தியைப் பெருக்குவதும் கேடீஸ் தும்புக் கைத்தொழில் நிறுவனத்தின் நோக்கங்களாகும். அத்துடன் பொருட்களை உற்பத்தி செய்வதற்காக மட்டை, ஈர்க்கு ஆகிய பொருட்களை கொள்வனவு செய்வதன்மூலம் பல கோடி ரூபா பணம் தென்னிலங்கைக்குப் போய்ச் சேர்வது தடுக்கப்படுகிறது. ஆரம்பத்தில் ஆறு தொழிலாளர்களை வைத்துக்கொண்டு நடத்தப்பட்ட இந்தத் தொழில், இன்று பெரும் நிறுவனமாக வளர்ந்து பதினெட்டுக் கிளைகளுடன் இயங்குகிறது. போர்க் காலச்சூழ்நிலையிலும், உள்ளூர் மூலப் பொருட்களுடன் ஒரு நிறுவனம் வளரமுடியும் என்பதற்கு கேடீஸ் தும்புக் கைத்தொழில் நிறுவனம் உயர்ந்த உதாரணமாகும்.

பதினெட்டுக் கிளைகளிலும் 450 இற்கும் அதிகமான தொழிலாளர்கள் இந்த நிறுவனத்தில் தொழில் செய்கிறார்கள். இதில் விசேடம் என்னவென்றால், இந்த நிறுவனத்தில் தொழில் செய்பவர்களில் 98 சதவீதமானோர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்கள், தொழிலினை இழந்தவர்கள். மற்றும் இடம் பெயர்ந்தவர்களும் இதில் அடங்குவர்.

இந்த நிறுவனத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு நிறுவனத்தை விரிவு



படுத்தியுள்ளார்கள். கேடீஸ் தும்புக் கைத்தொழில் நிறுவனம் தும்பினைப் பதினெட்டுக் கிளைகளுக்கும் அனுப்பி வைக்கிறது. மூலப்பொருளாக தும்பு கேடீஸ் நிறுவனத்திலேயே அடிக்கப்படுகிறது. தும்பு கயிறாகவும், கால்மிதியாகவும், மெத்தையாகவும், தும்புக்கட்டையாகவும் கிளைகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன. அத்தோடு பன்னவேலைப் பொருட்கள் மற்றும் கிடுகும் உற்பத்தி செய்யப்படுகின்றது.

உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் சில கிளைகளில் புற்பாய் உற்பத்தியும் மேற்கொள்ளப்படுகிறது. நாகர்கோவில், வரணி, முள்ளிவெளி ஆகிய கிராமங்களில் புல் கணிசமான அளவு கிடைப்பதால், சில கிளைகள் புற்பாய் இழைக்கும் தொழிலிலும் காலடி எடுத்து வைத்துள்ளன.

1991 ஆனி மாதத்திலிருந்து இயங்கத் தொடங்கிய இந்த நிறுவனம், சுமார் ஓராண்டு காலமளவு தேக்கமுற்றுக் கிடந்தது. போதிய உற்பத்தியை எட்டவில்லை. 1992 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் மறுசீரமைப்புடன் ஒரு புதிய இயந்திரத்தைப் பொருத்தியதின் காரணமாக, கேடீஸ் தும்புக் கைத்தொழில் நிறுவனம் புத்துயிர் பெற்றுள்ளதைக் கண்ஊடாகக் காணலாம். முன்னைய உற்பத்தியை விட இரண்டு மடங்கான உற்பத்தியினைச் செய்து நிறுவனத்தை ஸ்திரப்படுத்தியுள்ளார்கள். இதனால் இந்த நிறுவனத்தின் உற்பத்தி இலக்கு முற்றுமுழுதாக நிறைவேறியுள்ளது.

கேடீஸ் தும்புக் கைத்தொழில் நிறுவனத்தின் ஒரு கிளையாக சாவகச்சேரியிலும் ஒரு தொழிலகம் தொடங்கப்பெற்றது. இவ்வகையான கிளை நிறுவனங்களில் இருந்து பெறப்படும் 90 சதவிகிதமான தும்பிலிருந்து தும்புத்தடி, தூரிகை போன்ற பொருட்களே உற்பத்தி செய்யப்படுகின்றன. இன்று கேடீஸ் தும்புக் கைத்தொழில் நிறுவனமும் கிளைகளுமாக யாழ். மாவட்ட கயிற்றுத் தேவையில் 60 சதவிகிதத்தினையும், பாய்த் தேவையில் 30 சதவிகிதத்தினையும், கிடுகுத் தேவையில் 50 சதவிகிதத்தினையும் உற்பத்தி செய்து ஒரு பெரும் நிறுவனமாகச் செயற்பட்டுவருகிறது.

இந்த நிறுவனத்தில், அதன் ஆரம்ப காலம் முதல் தொழில் செய்யும் திருமதி இராமசாமி அருள் ஜெயந்தியைச் சந்தித்த போது, தனி உற்சாகத்துடன் அவர் பின்வருமாறு கூறினார்:

"எனது கணவன் தோட்ட வேலைக்குப் போவார். எங்களுக்கு மூன்று பிள்ளைகள். இந்த நிறுவனம் தொடங்கிய காலத்திலிருந்தே இங்கு தொழில் செய்கிறேன். தும்பு வேலைகளைச் செய்வது எமக்கும் இங்குள்ளவர்களுக்கும் பழக்கமாகிவிட்டது. பயிற்சியால் வேலை சுகமாகவே இருக்கிறது. கஸ்டமான வேலை என்று நாம் கருதவில்லை. இப்படியொரு தெங்குப் பொருள் தொழிற்சாலையை அமைத்துள்ளது பெருமைக்குரிய விடயம்.

எட்டு மணித்தியால வேலை. நாளொன்றுக்கு 75 ரூபா சம்பளம் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு நாளும் 4 மணித்தியாலம் மேலதிக வேலை செய்யலாம். மேலதிக வேலைக்கு சம்பளம் தரப்படுகின்றது. மாதத்தில் குறைந்தது 22 நாட்கள் வேலை கிடைக்கும். நாள் சம்பளம்தான் வழங்கப்படுகிறது. மேலதிக வேலையையும் சேர்த்து மாதாந்தம் 2000 ரூபாவுக்கு குறைவில்லாத வருமானம் கிடைக்கும்".

கணவனை இழந்த திருமதி நா. சோதிப்பிள்ளை "-கணவனை இழந்து மூன்று வருடங்கள். எனக்கு ஐந்து பிள்ளைகள். நான்தான் இந்த நிறுவனத்தில் தொழில் செய்து குடும்பத்தினை நடாத்தி வருகின்றேன்" என்றார். கேடீஸ் தும்புக் கைத்தொழில் நிறுவனத்தின் மேற்பார்வையாளர் திரு. யசோவை நாங்கள் சந்தித்தபோது தொழில்நுட்பம், நிர்வாகம் செயற்திட்டங்கள் பற்றி விளக்கங்கள் தந்தார்.

இத்தொழிற்சாலையில் ஆறு அடி ஆழத்தில் சதுரவடிவமான தொட்டி ஒன்று உள்ளது. நான்கு லோட் பொச்சு மட்டையை இந்தத் தொட்டியில் நான்கு நாட்கள் ஊறவிட்டுப் பின்னர் இயந்திரத்தால் தும்பாக்கப்படுகின்றது. அடுத்து தும்பு தரம் பிரிக்கப்படுகின்றது. தரம் ஒன்று தும்புக் கயிறு பிரிப்பதற்கும், தரம் இரண்டு தும்பு மெத்தை, தும்புத் தடி, கால்மிதி செய்வதற்கும், தரம் மூன்று கழிவுத் தும்பு தென்னை மரங்களுக்குப் பசளையாகவும் இடப்பகின்றது. பசளை ஒரு பரீட்சார்த்த முயற்சியாகவே செய்யப்படுகிறது. தும்புப் பசளை பயன்தருமா என்பதை பொறுத்திருந்துதான் ப்ார்க்க வேண்டும். காயவிடப்பட்ட தும்பு நிறுத்துக் கட்டப்பட்டுக் கிளைகளுக்கு அனுப்பப்படுகின்றது.

இந்நிறுவனத்தில் ஆண்களும், பெண்களும் வேலை செய்கிறார்கள். பெண்கள்தான் கூடிய அளவு தும்பு அடிக்கும் இயந்திரத்தை இயக்கி வருகிறார்கள். ஆண்கள் அதிகமாக வெளிவேலைகளில் மட்டை சேகரித்தல். தரம் பிரித்தல் வேலைகளில் ஈடுபடுகிறார்கள்.

இங்கு வேலை செய்யும் தொழிலாளர்கள் எல்லோருக்கும் தும்பு சம்பந்தப்பட்ட எல்லா வேலைகளும் தெரியவேண்டும் என்பதே இந்நிறுவனத்தின் நோக்கம்.

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

## வட தமிழீழ தெங்கு வளமும் அதன் உற்பத்தித் தேவைகளுக்காக வெளியேறும் பணமும்

| வடதமிழீழக் குடிசனம் | தென்னைகளின் தொகை | தேங்காய் உற்பத்தி (அண்ணளவாக) |
|---|---|---|
| 12,13,246 | 13,12,480 | 7,87,48,800 |

| தேவையான தெங்கு உற்பத்தி | வெளியேறும் பணம் |
|---|---|
| தும்புத்தடி . விளக்குமாறு | 1.5 கோடி ரூபா |
| கயிறு . ஏனையவை | 18.0 கோடி ரூபா |
| மீதப்படுத்தக்கூடிய தொகை | 19.5 கோடி ரூபா |

*அண்மைக் காலத்தில் எடுக்கப்பட்ட தரவுகளையே இவ் அட்டவணை விளக்குகின்றது. இம்மதிப்பீட்டின் படி தெங்கு உற்பத்தியின் சுய சார்பு உற்பத்திக் குறிக்கோள் பூர்த்தியாகுமிடத்து வருடாந்தம் 19.5 கோடி ரூபாக்களை நாம் மீதப்படுத்த முடியும்.*

# தமிழீழச் சட்டக் கோவை

## பெண்களின் உரிமைகளை எப்படிப் பாதுகாக்கின்றது

தமிழீழ மக்களுக்குச் சரியான முறையில் நீதி வழங்கும் முகமாக, தலைவரின் பணிப்புரையின் பேரில் தமிழீழ நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

நீதி கோரும் மக்கள் சுரண்டப்படுவது இங்கே தவிர்க்கப்படும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியானது விரைவாகவும், எளிதாகவும் கிடைப்பது இங்கே உறுதிப்படுத்தப்படும். இந் நீதிமன்றங்களில் ஏழை, பணக்காரன் வேறுபாடுகளோ, பால் வேறுபாடுகளோ பார்க்கப்படுவது கிடையாது. இதுவரை காலமும் இங்கே சிவில் நிர்வாகம் சீர்குலைந்து போயிருந்ததால் தமது பிணக்குகள் தீர வழியின்றித் தவித்த மக்களுக்கு இந்நீதிமன்றங்கள் கொடையாக அமைந்துள்ளன. அதேநேரம் ஒட்டுமொத்தமாக தேசிய ஒடுக்குமுறையை அனுபவித்தாலும் பிரத்தியேகமாக சமூக, ஆணாதிக்க ஒடுக்குமுறைகளுக்குள்ளும் உட்படும் தமிழீழப் பெண்களுக்கு இந்நீதிமன்றங்கள் பெரும் கொடைதான்.

ஏனெனில், தமிழீழ மண் விடுதலை பெறும்போது, தமிழீழப் பெண்ணினமும் விடுதலை பெற்றிருக்க வேண்டும் என்ற நோக்கம் கொண்ட தலைவர் திரு.-வே. பிரபாகரன் அவர்களின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இந்நீதிமன்றங்கள் இயங்குகின்றன. எனவே தமது பிணக்குகளை நீதிமன்றங்களுக்குக் கொண்டு போனால் சரியான தீர்வு கிடைக்குமா, அல்லது அங்கும் தாம் ஏமாற்றப்படுவோமா என்று பெண்கள் எவரும் பின்வாங்க வேண்டியதில்லை. இங்கே பெண்களின் பிரச்சினைகள் ஆழமாக நோக்கப்படும்; சரியான முறையில் அணுகப்பட்டு நீதி வழங்கப்படும்.

எமது இயக்கத்தின் நீதி நிர்வாகத்துறையால் 1993 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தமிழீழச் சட்டக் கோவையில், பெண்களின் உரிமைகளை நிலைநாட்டும் முகமாக சில சட்டங்கள் எழுதப்பட்டுள்ளன.

உதாரணமாக....

'ஒரு பெண்ணைத் திருமணம் செய்வதாக நம்பிக்கையூட்டி, வாக்குறுதி கொடுத்து அதன் மூலம் அப்பெண்ணுடன் 'சட்ட ரீதியாக திருமணம் செய்யாமலே' குடும்பமாக வாழ்ந்தவர், அல்லது அவர் அவ்வாறு வாழ்வதாக மற்றவர்கள் நம்பும்படி நடந்தவர் தொடர்பாக, அப்பெண் நீதிமன்றம் சென்று அவரைத் தனக்கு திருமணம் செய்து வைக்கும்படி கோரினால், இருவரையும் திருமணம் செய்து கொள்ளுமாறு நீதிமன்றம் கட்டளையிடலாம். அல்லது அவருக்கு ஏற்கனவே ஒரு மனைவி இருப்பதாக நீதிமன்றம் கருதினால் ரூபா 50,000.00 க்கு மேற்படாத இழப்பீடு செலுத்துமாறு கட்டளையிடலாம். அத்துடன் நீதிமன்றம் நியாயமெனக் கருதினால் மாதந்தோறும் ஜீவனாம்சம் செலுத்தும்படி கட்டளையிடலாம்.' என்ற இடத்தைக் குறிப்பிடலாம்.

இது ஒரு ஆணிடம் தனது அறியாமை காரணமாக உறவு வைத்துக் கொண்ட ஒரு பெண்ணுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காக அமைக்கப்பட்டது. ஆனால் இப்படி ஒரு சட்டம் எழுத்தில் இருக்கிறது என்பதால் ஆண்கள் ஏமாற்றாமலோ அல்லது பெண்கள் ஆண்கள் மீது அதிகளவு நம்பிக்கை வைத்து உறவு கொண்டபின் ஏமாறாமலோ இருக்கப் போவதில்லை. எனவே இச்சட்டத்தின் வெற்றி பெண்களின் புத்திசாலித்தனமான நட்வடிக்கைகளில்தான் தங்கியிருக்கிறது.

நீண்டகாலமாக ஒடுக்குமுறைப் பிடிக்குள் இறுகிப் போயிருந்து, இப்போதுதான் மெதுமெதுவாக நிமிர்ந்து கொண்டிருக்கும் பெண்களில் எல்லோரிடமுமே எல்லா விடயங்களையும் சீர்தூக்கி ஆராய்ந்து முடிவெடுக்கும் திறன் இல்லை என்பது பெரும்பாலும் உண்மையே. ஆராய்ந்து முடிவெடுக்கும் பெண் நிமிர்ந்து நிற்கின்றாள். ஆராயாது நம்பிக்கை வைக்கும் பெண் நிமிர முடியாமல் விழுந்து போகின்றாள். இதுதான் தமிழீழத்தில் நீண்டகாலமாக நடந்து வருகின்றது. 'பாலியல் உறவு நடந்ததன் பின்னர் நான் ஏமாற்றப்பட்டேன்' என்று தமிழீழ நீதிமன்றத்தில் வந்து நீதி கேட்பதற்குப் பல பெண்கள் தயங்குகிறார்கள். நீதி பெறவும் வழியில்லாமல், தமக்கு நேர்ந்த அநீதியைச் சகித்துக் கொள்ள வும் முடியாமல் தமக்குள்ளேயே புகைந்து கொள்கின்றார்கள்.

ஏனெனில், இவர்களை ஆணாதிக்க கருத்துலகம் சிறைப்படுத்தி வைத்திருக்கின்றது. தனக்கு நேர்ந்த அநீதியை எதிர்த்து, நீதி கேட்கும் பெண்ணை 'ஒழுக்கம் கேட்டவள்' என்று குற்றம் சாட்டியிருக்கின்றது. நடந்து முடிந்த உறவுக்கு அப்பெண்ணின் நடை, உடை, பாவனைகளே காரணம் என்று பொய்க் காரணங்களைக் கூறி பலவந்தமாக நியாயப்படுத்தி இருக்கிறது. இது பெண்களுக்கு மேல் போடப்பட்டுள்ள மிகப் பலமான அழுத்தம். நிமிர முடியாவண்ணம் விழுந்த மிகப் பெரிய அடி.

இதைவிட காலங்காலமாக 'ஆண்கள் உயர்ந்தவர்கள்; வீரர்கள் ;நம்பினால் கைவிட மாட்டார்கள்' என்ற கருத்தும் இவர்களிடம் திணிக்கப்பட்டிருக்கிறது. இதனால் உண்மையான அன்புடன் தன்னிடம் பழகும் ஆண் யார், ஏமாற்றும் நோக்கில் பழகும் ஆண் யார் என்பதைப் பெரும்பாலான பெண்கள் அறிந்து கொள்ள முயல்வதில்லை.

அண்மையில் தமிழீழ நீதிமன்றத்திற்கு வந்த வழக்கொன்றை இவ்விடத்தில் குறிப்பிடலாம் என நினைக்கின்றோம்.

வழக்குத் தாக்கல் செய்த பெண்ணின் வாக்குமூலத்தின்படி

The Virakesari reported on 24 April that according to very reliable information the major assault by the Sri Lanka Armed forces planned originally for the end of April, on the North and particularly in the Jaffna peninsula has been postponed by a month. The embarrassing defeat of the ruling United National Party in the recently concluded Provincial Council elections in the Southern Province is thought to be the main reason for the postponement of the onslaught.

Later reports from Sri Lankan Army sources indicated that President Wijetunga has given the go ahead to the Security Forces to launch a major offensive on the Jaffna peninsula by the end of May. The Sri Lanka government planned to increase the number of the armed forces personnel in the Jaffna peninsula from the present 75,000 to a minimum of 100,000 before the assault begins. In the first two weeks of April, 12,000 personnel from various army camps in the East were air lifted to the Palaly Army Camp. Virakesari also reported that Lt.General Hamilton Wanasinghe has ordered the Sri Lanka airforce to carry out raids in the North before the planned onslaught begins.

**But it appears that internal divisions within the ruling Sinhala establishment and the fear that any offensive may well suffer the fate of last year's disastrous Operation Yal Devi, with hundreds of Sinhala deaths, has forced President D.B.Wijetunga to pause and reflect on the consequences of hasty action, particularly in an election year.**

## Medicines for Jaffna from UNICEF

The UNICEF in response to a request for essential medical supplies from the Medical Division of the Jaffna Municipal Council, has agreed to send medicines valued at Rs.2 million.

## Anonymous letter writers wreck lives of innocent Tamils

Innocent Tamils from other districts, who attend births, weddings and deaths of relatives in Matale are being arrested by the Matale police on information provided in anonymous letters sent to them. Some are interrogated and then released after a few days, whereas many are detained for weeks on end with no charges made against them

## Sudden interest in Thirukovil

During the second week of April, the Sri Lanka army cordoned and searched the town of Thirukovil in the Batticaloa District. A large number of youths were rounded up and taken to the army camp for interrogation. After a while they were all released. The Security forces are busy collecting details of all who travel from Thirukovil and surrounding areas to Colombo. Those taken into custody are questioned on details of their bio-data, the reasons for their travel, place at which they would stay and details of people they would visit in Colombo.

## Sri Lanka Army commits arson

A landmine explosion at Panichangkerni in the Vaharai Division of Batticaloa District damaged one Sri Lankan army vehicle and injured a few army men in mid April. Following this incident, a number of Sri Lankan soldiers went on a rampage in Murugankovilady area in Panichangkerni, setting fire to most of the houses. Fifty of the sixty houses were completely burnt, over ten civilians suffered serious injuries and Mr. Vairamuttu, a fifty year old father of five children was burnt to death. The Sri Lanka Army continues to violate with impunity the humanitarian laws of armed conflict whilst Amnesty International continues to report endlessly on the Sri Lanka situation and continues to make pious pleas to the Sri Lanka government to reform itself!

## Referendum postponed yet again

According to a Gazette notification issued by President Wijetunga, the referendum to decide the permanent merger or otherwise of the North and East has been postponed yet again for the eighth time in the last six years. The Referendum is now scheduled to take place on 26 May in the East and 14 June in the North.

## Ashraff supports merger of North-East

On 9 April at the annual conference of the Sri Lanka Muslim Congress, the SLMC leader Mr.Ashraf said that should the North and East be de-merged, it will spell disaster not only for the Tamils but for the Muslims as well. He said that the de-linking of the two provinces will strengthen the hand of the Sinhala community to the detriment of the Tamils and the Muslims and this will enable the Sinhala chauvinists to accelerate the planned process of state aided colonisation in the North-East.

He said that if Tamils are denied their rights, it will not be long before the Muslims suffer the same fate. The majority Sinhalese are out to create a dictatorship by denying the legitimate rights of the Tamils and Muslims.

## Thonda calls upon Tamils and Muslims to unite

The CWC leader and Minister of Tourism, Mr.S.Thondaman speaking at the SLMC annual Conference on 9 April appealed to both Tamils and Muslims to sink their past differences and build a strong, lasting bond of friendship and struggle as a united front until they obtained their legitimate rights.

## Tamils hounded - whilst Amnesty reports

The Sri Lanka police in Colombo have been searching and rounding up over 500 Tamil youths, male and female, from the NorthEast and the Central Province in the aftermath of the five bomb blasts in Colombo on 8 and 9 April. Those rounded up are being held in detention centres without any specific charge being laid against them. The police are being assisted by the army and navy in this operation. In February this year Amnestycalled upon Sri Lanka to stop arbitrary arrests of young Tamils in Colombo.

## UNHCR - What is its (hidden) Agenda?

The majority of the 39,604 refugees who were returned to the island of Sri Lanka with the knowledge of the UNHCR are still languishing in resettlement camps in Mannar, Trincomalee, and Vavuniya. There are still 78, 396 refugees in camps in Tamil Nadu and more than 90,000 refugees live in towns throughout Tamil Nadu, outside these camps. Although the majority of these refugees do not want to be sent back to Sri Lanka, they are being 'persuaded' to return. Meanwhile, 3000 more Eelam Tamil refugees from refugee camps in India are to be sent back by air to Sri Lanka, according to a report issued by Thilak Chandrasekera, the Director of REPIA.

## Chit Chat

*Housing Minister Sirisena Cooray in an interview reported in the Sri Lanka government controlled Sunday Observer, 1 May 1994:* "Let me tell you this. I came to know that many people had gone and told President Premadasa: 'Why don't you appoint Sirisena as the Minister of State for Defence.' He gave them a very convincing reply which was true to his character. He told them: 'The Minister of Defence will have to take tough decisions. Do you want me to make Sirisena look like a killer? I know the man very well. I do not want him to be branded as a killer.' That was his reaction to killings of any sort. He never killed anyone"

***Sri Lanka government owned Lankapuwath newsagency report in the Sinhala owned Sri Lanka Sunday Times, 1 May 1994:*** **"17 Ministers were backing Mr.Gamini Dissanayake to be senior Minister of the government, possibly the Minister for Defence..."**

**V.Balakumaran writes from Tamil Eelam:**

# "Today our people realise not merely the military but also the political value of the arms in the hands of the Liberation Tigers"

**A voice sounding the clarion call of liberation from a corner of South Asia is resounding throughout the world today...**

Actually a liberation fighter does not die. The fiery idealism that inspires him also becomes a historical force enthusing others and rousing a nation's soul from slumber. Tanks, aeroplanes and cannons are powerless against fighters who draw spiritual sustenance and strength from the sacrifice of their lives to attain their objective...

should be given prominence in the Eelam revolution. Some were of the opinion that producing militants was the only function (of the struggle). No, no said some others: it is none of these, after all round preparation, through military operations the goal of liberation can be achieved, they opined.

There were other differences of opinion as well. Some tried to give prominence to internal contradictions, counterpointing North Tamil Eelam and South Tamil Eelam and playing

summit agreements between Sinhala and Tamil political leaders, the Indo Sri Lanka Accord, the All Parties Conference, and the Parliamentary Select Committee. All these opportunities have proved fruitless as the myopic Sinhala leadership has spurned them.

**Today Colombo's politi cal circles talk glibly about the post Pooneryn phase. Do these suave talkers know the heroic sacrifices of life that made the Pooneryn victory possible? Do these people who**

**"Do these people who think that politics means merely the ingestion of various ideologies, and military operations merely the picking up of arms, know that armed struggle is the shedding of blood to attain a firm and clear political objective?Do they know the amount of planning and gathering of intelligence, the skill, training and courage that go into a well conceived military operation, and all the risks to life that are attendant to it? "**

At the beginning of this century there occurred struggles against colonialism. Later socialism and communism ushered in an era of struggles against economic inequality and exploitation....

... from the beginning of history there has been one constant, underlying factor: one could say that it is virtually a law of history that man always struggles to break the fetters that bind him; he struggles to establish and confirm his existence and identity.

The struggle being waged by the Liberation Tigers is further confirmation of this 'law'...

**Since this basic law has not been grasped in all its complex ramifications, many a struggle has been derailed, with the original objective being lost sight of, many a struggle has suffered the indignity of being halted and abandoned mid way...**

A look at our own history will be instructive. At the start there were several opinions about the path our struggle should take. Some said that the proletarians of both countries (Sri Lanka and Tamil Eelam) should unite and carry out a total revolution. Some said that the plantation workers

off the military wing against the political wing.

The struggle was in danger of getting bogged down in these interminable sterile debates. The only ones who benefited from these verbal squabbles were several poets who used them as thematic material for their poems.

What happened ultimately? The Tamil Eelam liberation struggle which at the start accommodated all these trends, through the litmus test of experience accepted some (of these trends) and rejected others. Consequently today, when one talks of North Tamil Eelam and South Tamil Eelam, these are purely geographical expressions, nothing more.

The goal today is the liberation of any and every territory of Tamil Eelam, wherever it may lie.... So it is not important where this struggle to recover our captured territory starts. What is significant is that this historical task should be inaugurated somewhere. Today the Liberation Tigers are carrying out this task which has ben delegated to them by history.

An overview also reveals another truth. History has presented the Sinhala leadership with several opportunities:

**think that politics means merely the ingestion of various ideologies, and military operations merely the picking up of arms, know that armed struggle is the shedding of blood to attain a firm and clear political objective? Do they know the amount of planning and gathering of intelligence, the skill, training and courage that go into a well conceived military operation, and all the risks to life that are attendant to it?**

Today our people have become familiar, thanks to the Liberation Tigers, with the phenomenon of military operations simultaneously turning into political statements. Today our people realise not merely the military but also the political value of the arms in the hands of the Liberation Tigers...

**This is the background for President Wijetunga's infamous statement that if the Government does not send food, the people of Tamil Eelam will have to eat the soil. Time will teach President Wijetunga the truth that our people have put their trust in our good earth and are self reliant. Ultimately it is President Wijetunga and others of his ilk who will bite the dust.**

## A VIEW FROM THE ENEMY'S CAMP

### HELL HATH NO FURY AS JAYALALITHA SCORNED

"Thwarted in her attempt to convince Prime Minister Narasimha Rao to remove her adversaries Channa Reddy and Vazhapadi Ramamurthy from their posts has come out with some stinging allegations. ..'While the Tamil Nadu Government was being accused of allowing the Tigers to operate in the State, **RAW was maintaining clandestine links with the LTTE and negotiating deals'** (Chief Minister) Jayalalitha told the (Tamil Nadu) state assembly. Damning the centre for alleged double standards, she claimed that quid pro quo arrangements had been struck..." *- India Today, 30 April 1994*

### RAW - DOUBLE GAME?

"During the past four months evidence has been piling up that RAW and the LTTE have reached an understanding.... The fact that New Delhi is vaccilating on the LTTE issue has established beyond doubt the RAW-LTTE nexus. According to an INdian magazine, when Prmier Rao was briefed of this relationship., he had endorsed this in his own style by stating that 'Do as you please'. RAW as usual is playing the double game.' *- Journalist, Agni, in the Sinhala owned Sri Lanka Sunday Island, 24 April 1994*

### CONTRACT KILLERS AND DEMOCRACY, SRI LANKA STYLE

"The people have so far suffered silently the unbearable cost of living, youth unrest due to acute and widespread unemployment and the conviction that under the UNP there is no hope of better tomorrow. **Hitherto these frustrations have been suppressed by the display of firearms which filled every Pajero that followed Ministers and MPs wherever they went and the shadowy underworld of contract killers who turned ruthlessly against the few who dared to dissent.** With the tide turning against them, the pillar of the UNP has begun to crumble. The bitter internal factionalism has now taken the form of a no holds barred struggle for power between the two major groups within the UNP... This deadly turn in internal politics of the UNP has now spread like a cancer to the regions. **The murder of Razmar Hussein, a UNP member of the Matale Municipal Council and the relentless pursuit of Mohan Weerakoon another UNP councillor by the same gang of contract killers from whom he has appealed for state protection is now being repeated elsewhere...** Susil Moonesinghe, a prominent UNPer, the former Chief Minister and now leader of the (UNP) Opposition of the Western Provincial Council is also under death threat for stating that there is no law and order in the country today. In the Nuwera Eliya Municipal Council there is a bitter clash between two factions of the UNP and members receiving death threats are similarly asking for protection.. With Ministers preoccupied with intra part conflicts... the government itself is slowly coming to a stage of paralysis" *- Press Statement of Sinhala Opposition Peoples Alliance in the Sinhala owned Sri Lanka Sunday Island, 1 May 1994.*

### SRI LANKA ARMY 'TOTALLY BEHIND' THE 'GREAT STATESMAN' SAYS LANKAPUWATH!

"Official sources told Lankapuwath that Army Commander Gerry De Silva and the entire army were totally behind President Wijetunga .. Political sources pointed out that certain anti national opportunists and government elements were trying to spread dissension but the large majority of Sri Lanka's police and army were **totally behind the great statesman** who had kept the country together... Meanwhile a senior law enforcement officer told Lankapuwath that all inciters and law breakers will be dealt with firmly." *- Report of the government owned news agency Lankapuwath published in the Sinhala owned Sri Lanka Sunday Island, 1 May 1994.*

### AGREEMENTS THAT HAVE BECOME OPINIONS!

"Q. Do you think the annexures of the (1987 Indo Sri Lanka) agreement are still valid? A.Those were merely opinions we had at that time, relevant to that time and I don't think that anybody is bothered about them now. Some of them have been implemented like the Peace Keeping Force coming here. **They are merely suggestions for each country to implement if they wish to.**" *- ex President J.R.Jayawardene, in an interview reported in the Sinhala owned Sri Lanka Sunday Island on 1 May 1994, speaking on the annexures which he had solemnly signed, as President, in July 1987*

# ணைவேந்தர் துரைராசா

— சிறப்புக் கட்டுரை —

தாடர்ந்து ஆறு வருடங்கள்
ழுவதுமே பாராட்டக்கூடிய
ர்கள் 11. 06. 1994 இல்
த்தில் சிகிச்சை பெறமுடி
மிழீழ மண்ணிற்கும் யாழ்.
என்றுமே மறந்துவிடாது.
ற்றலாகிச் செல்லவிருந்த
ால் பாராட்டப்பட்டதோடு
ளாலும் இவர் பாராட்டிக்
நப்பட்ட கட்டுரையினையே

டது. மேலும் மீன்பிடித்துறைக்கு ஒரு பீடம் நிறுவி அதன்மூலம் மீன்பிடியை வளர்க்க 'ரொஸ்சே' பல்கலைக்கழகத்துடன் ஓர் உடன்படிக்கை கைச்சாத்தாகியுள்ளது. போர் காரணமாக அது கிடப்பில் உள்ளது. மேலும் புற நிலைப் படிப்புகள் அலகு, தொழிலாளர் கல்வி, வெளிவாரிக் கற்கை நெறி ஆகியவைகளை நிறுவிக் கல்வியை பரவலாக்கியது குறிப்பிடத்தக்க அம்சமாகும். ஆய்வுகளை நூல் உருவில் வெளியிட நோர்வே அரசின் உதவியுடன் அச்சுக்கூடம் ஒன்றை நிறுவும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. துணைவேந்தரின் முயற்சியால் பொறியில் பீடத்திற்கு ஒரு பேராசிரியர் நியமனம் பெற்றுள்ளார். ஆனால் பொறியியல் பீடத்திற்கு அரசு நிதி வழங்காத நிலையில் பொறியியல் பீடம் ஆரம்பித்த இடத்திலேயே உள்ளது. இதே போல் எட்டு கட்டடங்கள் போர்ச் சூழல் காரணமாக முடியாத நிலையில் கிடப்பில் உள்ளன. ஏழை மாணவரின் பல்கலைக்கழக கல்வியைக் கருத்திற்கொண்டு துணைவேந்தரின் முயற்சியால் துணைவேந்தர் நிதியம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது. கல்வியில் இவருடைய புலமையும் ஆளுமையும் அனைத்துப் பல்கலைக்கழகங்களுடன் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளவும் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களிடம் இருந்து யாழ் பல்கலைக்கழகத்திற்கு உதவிகளைப் பெறவும் உதவின.

## பேராசிரியர் துரைராசாவின் கல்விச் சிந்தனைகள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தமிழினத்தின் பல்கலைக்கழகம். அது உலகத்தின் சிறந்த பல்கலைக்கழகமாக உருவாக வேண்டும். அதற்காக தமிழ் மக்கள் எல்லோரும் பாடுபட வேண்டும், சமூக அக்கறையுடன் ஆய்வுகள் மற்றும் கல்வி வழங்குவதன் மூலம் சகல துறைகளிலும் பல்கலைக்கழகம் அகலக்கால் வைத்து 24 மணி நேரமும் மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும். ஒக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களைப் போல் சமூகத்திலிருந்து விலகி தங்கக கோபுரம் போல் பல்கலைக்கழகம் செயலாற்றுவது பயன்பொருத்தமாகாது. அடிப்படைத் தளத்தில் பல்கலைக்கழகம் காலை ஊன்றிக் கொள்ள வேண்டும். ஆலவிருட்சம் போல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வளர வேண்டும் என்ற செழுமையான சிந்தனைப் போக்கைக் கொண்டிருந்தார். தமிழ் மக்களுக்கு அந்நியமான மதிப்பீடுகளை முன்நிறுத்தாமல் நிகழ்காலம், எதிர்காலம் -இவைகளுக்குப் பொருத்தமான கல்வி சிந்தனைகளை வெளிப்படுத்தி தம்மை சிந்தனை வயப்படுத்தும் தன்மை இவர் கல்விச் சிந்தனையில் இழையோடி நிற்பது குறிப்பிடத்தக்கது.

சரியான, தெளிவான, அறிவுபூர்வமான கருத்துக்களை அஞ்சாமல் கூறும் ஆற்றல் உடையவர். சமகாலத்தில் சர்ச்சைக்குரிய தனியார் கல்வி நிறுவனங்கள் (Tutory) பற்றிக் கருத்து வெளியிட்டவர் அவர். "பள்ளிக்கூடங்கள் அர்ப்பணிப்புடன் கடமை செய்தால் தனியார் கல்வி நிறுவனங்கள் மெல்லச் சாகும்" என்ற கருத்தை உடையவர். இன்றைய போர்க்கால சூழ்நிலையில் கல்வியில் கவனம் எடுக்காது போனால் அது பின்னால் தமிழர் கல்வியைத் தாழ் நிலைக்குத் தள்ளிவிடும் என்ற இன்றைய யதார்த்த நிலையை உணர்ந்து பேசுகிறார்.

தோற்றம் 10 . 11 . 34



மறைவு 11 . 06 . 94

## ஊற்று நிறுவனம்

1980 இல் பேராசிரியர் துரைராசா அவர்களினால் ஆரம்பிக்கப்பட்டது. அவரையே தலைவராகக் கொண்டது. வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மக்களுக்கு உதவி வழங்குதலே இந் நிறுவனத்தின் பிரதான நோக்கம். வெளிநாட்டு நிதிநிறுவனங்கள் ஊற்றுக்கு உதவி வழங்குவதில் கலந்துகொள்கின்றன. கிராம அபிவிருத்தி, மரம் நடுகை, விவசாயம் ஆகிய இன்னோரென்ன துறைக்கு உதவி வழங்குவதன் மூலம் சயசார்புள்ள மக்களை உருவாக்குவதில் ஊற்று நிறுவனம் செயலாற்றி வருகிறது. அத்துடன் பேராசிரியர் துரைராசாவின் சீரிய முயற்சியாலும், உழைப்பாலும் இந்த ஊற்று அமைப்பு இமையாணனை அடுத்துள்ள கிராமங்களில் மனித நேய அமைப்புக்களின் உதவியுடன் சயதொழில் முயற்சிகள், மருந்து நிலையங்கள் போன்றவற்றை அமைத்து அரும் பணி ஆற்றுகிறது. பொதுவாழ்வில் தன்னை அர்ப்பணித்திருக்கும் பேராசிரியர், ஊழலின் நிழல் கூட தன்மேல் படாமல் கண்ணியத்தைக் காப்பாற்றி வந்திருக்கிறார்.


இத்தனைக்கும் பேராசிரியர் வழியில் அவர் தொடர்ந்து செல்ல, அவரது வாழ்வில் உந்துசக்தியாக நின்றவர் அவரது மனைவி ராஜேஸ்வரி. 20-4-1967 இல் போராசிரியர் துரைராசா ராஜேஸ்வரியைத் திருமணம் செய்துகொண்டார். ஏற்ற இறக்கங்களில் உடன்நின்று உழைக்கும் மனப்பக்குவம் பெற்றவர் பேராசிரியர் மனைவி. அவரின் பிற்கால வாழ்க்கை உயர்வுக்கு தளம் அமைத்தவர் மனைவி தான்.

சிலர் பொறுப்பில் இருக்கும் போது மட்டும் பிரகாசித்து, அந்தப் பதவிகள் இல்லாதபோது இருக்கும் இடத்தைத் தேடிக்கண்டுபிடிக்க முடியாமல் கனவாய் கதையாய் போய்விடுகிறார்கள். பேராசிரியர் கொண்டுள்ள செல்வாக்கு இவர் பதவி விலகிப் போகும் காலத்தில், வரலாறு காணாத வகையில் மக்கள் எடுக்கும் விழக்களே நல்ல உதாரணம். போராசிரியர் மக்கள் மனதிலே எப்போதும் மதிப்பும் செல்வாக்கும் மிக்கவர். ■

நன்றி: 'ஈழநாதம் - 29-3-94'

| | |
|---|---|
| யூலை 1953- யூன் 1957 | பொறியியல் பட்டதாரி மாணவர்,இலங்கைப் பல்கலைக் கழகம் |
| யூலை 1957- மார்ச் 1958 | குடியியற் பொறியியல் போதனாசிரியர், இலங்கைப் பல்கலைக் கழகம். |
| ஏப்ரல் 1958- ஆகஸ்ட் 1958 | கனிஸ்ட உதவிப் பொறியியலாளர், பகிரங்க வேலைப்பகுதி (P.W.D.) |
| ஒக். 1958 - டிசம்பர் 1961 | கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகம், கலாநிதி பட்டத்திற்கான ஆய்வு. |
| ஜனவரி 1962 - யூலை 1962 | உதவிப்பணி பொறிமுறைப் பொறியியலாளர், இலண்டன். |
| யூலை 1962 | குடியியற் பொறியியல் விரிவுரையாளர் நியமனம், சிறீலங்காப் பல்கலைக் கழகம் |
| செப். 1969 - செப். 1970 | விடுப்பில் பேராசிரியர் பணி, வார்டலூ பல்கலைக் கழகம் கனடா. |
| டிசம்பர் 1971 | குடியியற் பொறியியல் பேராசிரியர் நியமனம், பேராதனை வளாகம், இலங்கைப் பல்கலைக் கழகம். |
| மே 1975 - செப். 1977 | பீடாதிபதி பொறியியற் பீடம்,பேராதனை வளாகம். |
| ஒக். 1977 - டிசம். 1978 | விடுப்பில் பேராசிரியர் பணி, பிரிட்டிஸ் கொலம்பியா பல்கலைக்கழகம், கனடா |
| பெப். 1982 - பெப். 1985 | பொறியியற் பீடாதிபதி பேராதனை வளாகம். |
| 1985 முதல் | குடியியற் பொறியியல் பேராசிரியர்,சிறீலங்கா திறந்த பல்கலைக் கழகம். |
| ஏப். 1987 - ஆகஸ்ட் 1988 | பீடாதிபதி பொறியியல் தொழில்நுட்பபீடம்,திறந்த பல்கலைக் கழகம். |
| செப். 1988 முதல் | துணைவேந்தர், யாழ்.பல்கலைக் கழகம். |
| ஏப்ரல் 1990 முதல் | ஜனசவிய நம்பிக்கை நிதியச் சபை உறுப்பினர். |
| 1990 முதல் | தொழில்நுட்பக் கல்வி ஆணைக்குழு உறுப்பினர். |
| 1994 மார்ச் முடிய | மீளவும் திறந்த பல்கலைக் கழகம். |

### கௌரவப் பதவிகள்

| | |
|---|---|
| ஒக். 1989 - 1990  | ∴ சிறீலங்கா பொறியியல் மன்றத் தலைவர்<br>∴ பட்டயப்பொறியியலாளர், சிறீலங்காப் பொறியியல் மன்றம்.<br>∴ இலண்டன் பொறியியலாளர் மன்ற அங்கத்தினர்.<br>∴ சிறீலங்கா விஞ்ஞான அக்கடமி அங்கத்தினர். |

# சீதனம்

வேதனைகள் சுமந்த கன்னியர் இங்கே
வெந்து வெந்து போகின்ற நிலைகள்
சாதனைகள் நிறைந்த தமிழீழத்திலே
சரித்திரமாகி விட்ட கதைகளோ பல

உழைத்தும் மீதமில்லாக் கால மிது
ஊனை உயிரைக் குடிக்கும் கால மிது
வளைத்து வீசும் சீதன வலையிலே
வாழ்விழந்து போவோர் ஆயிரம் ஆயிரம்

பணமென்றால் பல்லைக் காட்டி அதள
பாதாளம் வரை செல்லும் கூட்டம்
குணமெனினும் பணம் இல்லை யேல்
குனிந்து மௌனம் கொள்வது மேனோ

தெய்வமென வாயளவில் ஏற்றிப் பெண்ணை
திரு இல்லையேல் கீழே இறக்கி
பொய்மையில் வாழும் மனிதர் கூட்டம்
இம்மண்ணில் நிறையப் பெற்றது மேனோ?

சீதனமெனும் பெயரால் (பெண்ணை) விலைபேசி
சீரழிந்து போன குடும்பங்கள் ஆயிரம்
ஆதனங்கள் கூட இல்லாது இன்று
அனைத்தையும் இழந்த கதையும் இங்குண்டு

ஏனிந்த இழிநிலை எம்மண்ணில்
எவர் வந்துதித்தார் பணத்தோடு இங்கு?
வானிடிந்து வீழ்ந்தாலும் அச்சமின்றி
வாழலாமே உழைப்பால் உயர்ந்து

ஆணுக்குப் பெண் சளைக்காத நிலை
ஆண்டாண்டு காலம் அறிந்த கதையன்றோ
தேனும் பாலுமாய் மனங்கள் ஒன்றிணைந்தால்
தேவைதானோ சீதனம் இம் மண்ணில்?


சீதனம் இல்லாது (மையால்) வயதில்மிக ஏறி
சீரான வாழ் விழந்து கன்னியர் வாடுகையில்
சீரும் சிறப்புமாய் பாதிப் பேரிங்கு
சிரித்து வாழ்வது எவ்வகையில் நியாயமோ?

ஒற்றுமையும் புரிந்துணர்வும் ஒன்றிணைந்தால்
ஒரு காலமும் வாராது இம்மண்ணில் துன்பம்
பற்றிடலாம் இதனைப் பாங்குடன் நாமெல்லாம்
பறக்கவும் செய்திடலாம் சீதனமெனும் வல்லூறை.

- பாஞ்சாலி-
(கிளிநொச்சி)

நன்றி: ஈழநாதம்

**தங்கநகை மாடிமனை தேடாதே**
**நீ மாலையிட சீதனத்தைக் கேளாதே !**



# சுதந்திரத்தைத்தேடி

பயிற்சி.... பயிற்சி

பூநகரிக் கூட்டுத்தளம் மீதான தாக்குதலுக்கான கடுமையான பயிற்சி அது.

பயிற்சி ஆரம்பிக்க முன்னும் பின்னும் இடையே எதையாவது பற்றி கதைப்பதாக இருந்தாலும், அந்த ஆலமரத்தின் கீழ் எல்லோரும் ஒன்றுகூடுவது வழக்கம். அன்றும் அப்படித்தான் எதையோ பற்றிக் கதைப்பதற்காக எல்லோரும் ஒன்றுகூடியிருந்தோம்.

திடீரென ஒருத்தி, "பழுதடைந்த புக்காரா விமானங்களை ஆர்ஜன்ரீனா நாட்டு நிபுணர்கள் திருத்துவதற்காக பலாலி வந்திறங்கினர். விரைவில் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு முடிவடையும் என நம்பப்படுகிறது. ..... டட்ட... டாய்ங்...." என பத்திரிகைச் செய்தியை வாசிக்கிறாள்.

உடனே எனக்கு அருகே இருந்த தயாளினி, நாம் பயிற்சி எடுத்துக் கொண்டிருந்த இடத்திலிருந்த கோயிலை நோக்கி கரம் கூப்பியபடி "கடவுளே.... எங்கட சண்டைக்கு முதல் அவன் திருத்தி முடியக்கூடாது... அப்படி முடியாவிட்டால் உனக்கு ஒன்பது தேங்காய் அடிக்கிறன்..." என உரத்த குரலில் வேண்டுகிறாள்.

"என்னப்பா இது.... திருத்தி முடியாட்டா அவனிட்டை வேற பொம்பர் இல்லையே... இல்லாட்டாலும் ஏன் அவ்வளவு நாளும் திருத்தாமலே இருக்கப் போறான்...?" என்றாள் ஒருத்தி.

*அடிக்கடி, தான் சண்டைக்குப் போகப் போகிறேன் என தனக்குப் பொறுப்பாக இருப்பவர்களை நச்சரிப்பாள். அதற்கு அவர்கள் "உனக்கு கை ஏலாது. நீ சண்டைக்கு துப்பாக்கி கொண்டு எப்படிப் போவது? நீ இஞ்சேயே நில்" எனக் கூறியதற்காக சிரமப்பட்டு இயலாத கையினால் துப்பாக்கியைத் தாங்கிப் பிடிக்கப்பழகி, தினமும் குறிபார்த்துப் பழகி சிறிது காலத்தில் மீண்டும் அவர்கள் முன் சென்று "இந்த ஏலாத கையால் புள் அடித்துக் காட்டினால் சண்டைக்கு எடுப்பியளோ?" எனக் கேட்டு, அதேபோல் அடித்துக் காட்டி, சண்டைக்குச் செல்வதற்கு அனுமதி வாங்கிய இவளின் இந்த தந்திரமான வீரம், சண்டை செய்வதில் உள்ள அடங்காத ஆர்வமெல்லாம், சென்றுவிட்ட மாவீரர் சந்ததி விட்டுச் சென்ற கொடைதானோ, என்னவோ........*

"வேற பொம்மர் இருந்தாலும், கொஞ்ச பொம்பர் எண்டால் போராளிகளின்ரை அநியாய இழப்புக் குறையும். திருத்திறதுக்குத் தேவையான பாகங்கள் ஏதும் கிடைக்காமல் அல்லது கொண்டு வரப்பிந்தினால் திருத்திறதுக்கு நாள் செல்லும் தானே...?" என மற்றொரு போராளி கூறுகிறாள்.

"ஏன் ஆர்ஜன்ரீனாக்காரன்களுக்கும் என்ன பொருளாதாரத் தடையே....?" என்ற மற்றொரு போராளியின் கேலிப் பேச்சுக்கு எல்லோரும் சிரித்துக் கொண்டிருக்கையில் கூட்டம் ஆரம்பிக்கவே சிரிப்பு ஓய்கிறது.

ஒரு நாள்.

தயாளினியைப் பார்த்து. ஒரு சகதோழி கேட்கிறாள், "தயாளினி நீ பேயாய் வந்தால் ஆரையடி வெருட்டுவாய்....?

"நான் பேயாகினால் அடுத்த கணமே மூதூருக்குப் பறந்திடுவன். இஞ்ச நிண்டு ஒருத்தரையும் வெருட்டமாட்டன்..." என கண்கள் மின்னக் கூறுகின்றாள்.

"ஏன் மூதூரில ஆரைப் பார்க்க...?" என மற்றொரு போராளி கேலியாகக் கேட்க,

"எங்கட மக்களைப் பார்க்க ... ஆக்கிரமிப்புப் படையைக் கொல்ல... பேயாய் போயெண்டாலும் ஆக்கிரமிப்புப் படையைக் கலைச்சுப் போட்டு எங்கட நிலத்தில தமிழரைத்தான் இருக்க விடுவன்...!" பகிடியான கேள்விக்கு தீவிரமான போக்கில் பதில் சொல்கிறாள்.

இவள்தான் எங்கள் தயாளினி.

1989 ஆம் ஆண்டு ஆனி மாதம். தென்தமிழீழப் பெண்கள் சிலர், இந்திய அரக்கர் படையை அழிக்க ஆயுதம் ஏந்தத் துணிந்தனர். எத்தனையோ இராணுவக் கண்காணிப்புகளுக்கு மத்தியில் விடுதலைப் புலிப் போராளிகளுடன் தொடர்பு கொண்டு இயக்கத்தில் தம்மை இணைத்துக் கொண்டனர். மகளிர் படைப்பிரிவு அப்போது சிறிய அணியாக இருந்ததால், வடதமிழீழத்தில் மட்டுமே இயங்கி வந்த காலம் அது. காடுகளையும், கடல்களையும், ஆறுகளையும் கடந்து மிக இன்னல்களுக்கு மத்தியில் அவர்கள் வடதமிழீழம் வரவேண்டியிருந்தது.

இப்படி பயிற்சிக்கு முன்னரே பல இன்னல்களை அனுபவித்து, இயக்கத்தில் தம்மை இணைத்துக் கொள்ள வடதமிழீழம் வந்து சேர்ந்த அந்தப் பெண் உறுப்பினர்களில், திருகோணமலை மூதூரில் சேனையூர்எனும் இடத்தைச் சேர்ந்த தயாளினியும் ஒருத்தி. இவளின் இயற்பெயர் சுபா. ஆனால் குடும்பத்தில் எல்லோரும் இவளைச் சின்னத்தங்கச்சி எனச் செல்லமாக அழைப்பார்கள். இவள் தனது ஆரம்பப் படிப்பை கட்டைபறிச்சானிலுள்ள விபுலானந்த வித்தியாலயத்தில் படித்தாள். தனது மேல் வகுப்புப் படிப்பை சேனையூர் மகாவித்தியாலயத்தில் கற்றாள்.

இயல்பாகவே இவளுக்கு இருந்த திறமையாலும், கல்வியில் இவளும் இவளது பெற்றோர்களும் காட்டிய ஊக்கத்தாலும் தயாளினி சேனையூரிலே திறமையான மாணவிகளில் ஒருத்தியாக விளங்கினாள். அது மட்டுமல்லாது விளையாட்டுத் துறையிலும் இவள் சிறந்து விளங்கினாள். ஆனால் இவளின் குடும்ப வசதியின்மை காரணமாக இவளது திறமைகள் பாடசாலை மட்டத்திலேயே முடக்கப்பட்டுவிட்டன.

இயல்பாகவே திறமையும், துடிப்பும் சிந்திக்கும் ஆற்றலும் படைத்த இவள் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டது வியக்கத்தக்கதல்ல.

பல இன்னல்கள் மத்தியில் அளம்பில் காட்டுக்கு வந்து சேர்ந்த இவள், அங்குவந்து சேர்ந்த பின்னர்கூட உடனடியாகப் பயிற்சி ஆரம்பிக்காத நிலையில் எமக்குத் தேவையான நாமே சுமந்துவரும் கடமையில், அந்தக் காட்டுப்பாதையால் கூடகளைப்பின்றிச் சலிப்பின்றி ஈடுபடுவாள்.

மேஜர் தயாளினி



சுபா பாலசுந்தரம்

மூதூர்

பிறப்பு : 1972- 8 - 29

வீரமரணம் : 1993- 11- 11

போராட்டத்தில் இவளுக்கிருந்த ஆர்வம் காரணமாக பயிற்சிக்கு முன்னரே பெண் போராளிகள் ஆயுதங்களைத் துப்பரவு செய்யும் போது அருகில் சென்று அவதானிப்பாள், கேள்விகள் கேட்பாள், தூக்கிப் பார்ப்பாள்.

பயிற்சியின்போது மிகவும் உற்சாகமாகப் பயிற்சி எடுத்தாள். பாடசாலையில் விளையாட்டுத் துறையில் ஈடுபடுபவள் என்பதால் பயிற்சி இவளுக்குச் சிரமமாக இருக்கவில்லை. காடுகளிலும் பற்றைகளிலும் கடுமையாகப் பயிற்சி எடுத்தாள். ஆயுதங்களை இலகுவில் இயக்கப் பழகிக் கொண்டாள். பயிற்சியின் முடிவில் இலகு இயந்திரத் துப்பாக்கிக்குரியவருக்கு உதவியாளராக நியமிக்கப்பட்டாள். இதனால் கனரக ஆயுதப் பயிற்சியும் எடுத்தாள். அதிலும் திறமையாகவே செயற்பட்டாள்.

1990 இல் இந்திய அமைதிகாக்கும் படை விரட்டியடிக்கப்பட்ட பின் நாடு வந்த இவள், பலாலி இராணுவ முகாமைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த காவல்நிலையில் காவலில் ஈடுபட்டாள்.

சிறிது காலத்தில் இவளின் ஆர்வமான செயற்பாடுகள் காரணமாகவும், திறமை துணிவு காரணமாகவும் ஒரு குழுவுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டாள். பூவரசங்குளம், கிளிநொச்சி, தாண்டிக்குளம் ஆகிய பகுதிகளுக்கு குழுத்தலைவியாகவே சண்டைக்குச் சென்று வந்தாள்.

பின்னர் 1990 ஆம் ஆண்டு பங்குனி மாதம் சிலாவத்துறைச் சண்டையிலும் பங்கு கொண்டாள். இச்சண்டையின் பின்னர் ஆனையிறவுப் பெருஞ்சமருக்கான பயிற்சி ஆரம்பமாகியது.

தயாளினி குழுவிலுள்ள அனைவரிடமும் அன்புடனும் பாசத்துடனும் பழகுவாள். உணவருந்தினார்களா, குளித்தார்களா, தலைக்கு எண்ணெய் வைத்தார்களா என்பதில் இருந்து துப்பாக்கியை துப்பரவு செய்தார்களா,

*துப்பாக்கிவேட்டுக்களுக்கும்,குண்டுச்சத்தங்களுக்கும் நடுவே வோக்கியில் கதம்பமாய் பல குரல்கள் ஒலித்தன. சிறிது நேரம் கழிந்திருக்கும். மகளிர் படையின் பகுதிக்குரிய தாக்குதலைத் தலைமை ஏற்று நடத்திக் கொண்டிருந்த சிறப்புத் தளபதி ஜனாவை வோக்கியில் அழைத்த தயாளினி, "நாங்கள் பவள் கவச வாகனத்தின் மேல் நிற்கின்றோம்...." எனக் கூச்சலிட்டாள்.*

காவல் கடமைகளில் சரியாக ஈடுபடுகிறார்களா என்பது வரை பார்ப்பாள். செய்யாவிடில் தானே நின்று அதனைச் செய்விப்பாள். தான் தண்டனை வாங்கினாலும் குழுவிலுள்ள பிள்ளைகளுக்கு தண்டனை வழங்கமாட்டாள். அறிவுரைகள், புத்திமதிகள் கூறியே திருத்துவாள்.

இவளின் இவ்வாறான இயல்புகளையும், இவளுக்கிருந்த திறமைகளையும் கண்டு ஒரு குழுவின் பொறுப்பாளராக இருந்த இவளை நான்கைந்து குழுக்களின் பொறுப்பாளராக நியமித்தனர்.

தயாளினி இயல்பாகவே அமைதியான குணம் உடையவள். ஆனால் கதைக்காமல் திரிபவளல்ல. அளவாகக் கதைப்பாள். மென்மையாகச் சிரிப்பாள். சக தோழிகள் இவள் கீச்சுக் குரலில் கதைப்பதுபோல் செய்து இவளைப் பகிடிபண்ணினால் வெட்கம் கலந்து சிரிப்பாள். தனக்கு மூத்த போராளிகளுடன் பழகும் போது மிகவும் பண்பாகவும், மரியாதையுடனும் பழகுவாள். அவர்கள் ஏதாவது வேலைகள் கொடுத்துவிட்டால் தனது கடமைகளுக்கு நடுவிலும் குடுகுடுவெனச் செய்து முடித்துக் கொடுப்பாள்.

ஆனையிறவுப் பெரும் சமருக்கு குழுக்களின் தலைவியாகவே சென்று போர் புரிந்தாள். பின்னர் மணலாற்றில் இடம்பெற்ற மின்னல் சண்டையில் ஈடுபட்டாள். காடு இவளை வளர்த்த இடம் என்பதால் தங்குதடையின்றி உற்சாகமாகப் போரிட்டாள். கடைசி நாளன்று இடது உள்ளங்கையில் துப்பாக்கி ரவையினால் காயமடைந்தாள்.

சிகிச்சையின் பின் அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியில் கல்வி கற்பதற்காகத் தெரிவு செய்யப்பட்டாள். லெப். கேணல் ராஜன் அண்ணாவின் பொறுப்பில் நடைபெற்ற இக்கல்லூரியில் படிப்பிலும் சரி, பயிற்சியிலும் சரி, விளையாட்டிலும் சரி தயாளினி திறமையாகவே செயற்பட்டாள். பரீட்சைகளில் எல்லாம் நல்ல புள்ளிகளே எடுத்தாள்.

இக்கல்லூரிப் படிப்பின் பின்னர் நிர்வாக சேவைகளில் சிறிது காலம் ஈடுபட்டதன் பின்னர், வடமராட்சியிலுள்ள ஒரு தளத்திற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டாள். காடும் பற்றையுமாக இருந்த அந்த முகாமை திருத்திச் சீரமைத்து கண்ணுக்குக் குளிர்மையான ஒரு தளமாக மாற்றிய பெருமை தயாளினியையே சாரும்.

அருகே பொறுப்பாக நிற்கும் போது அடிக்கடி, தான் சண்டைக்குப் போகப் போகிறேன் என இவளுக்குப் பொறுப்பாக இருப்பவர்களை நச்சரிப்பாள். அதற்கு அவர்கள் "உனக்கு கை ஏலாது. நீ சண்டைக்குத் துப்பாக்கி கொண்டு எப்படிப் போவது. நீ இஞ்சையே நில்" எனக் கூறியதற்காக, சிரமப்பட்டு இயலாத கையினால் துப்பாக்கியைத் தாங்கிப் பிடிக்கப் பழகி, தினமும் குறிபார்த்துப் பழகி சிறிது காலத்தில் மீண்டும் அவர்கள் முன் சென்று "இந்த ஏலாத கையினால் புள் அடித்துக் காட்டினால் சண்டைக்கு எடுப்பியளோ...?" எனக் கேட்டு, அதேபோல் அடித்தும் காட்டி சண்டைக்கு செல்ல அனுமதி வாங்கிய இவளின் இந்தத் தந்திரமான வீரம், சண்டை செல்ல உள்ள அடங்காத ஆர்வமெல்லாம், சென்றுவிட்ட மாவீரர் சந்ததி விட்டுச் சென்ற கொடைதானோ, என்னவோ......

சண்டை செல்ல அனுமதி பெற்ற பின்னர்கூட அந்தத் தளத்தில் அமைந்துள்ள நூலகம் இவளது கைவண்ணத்தால் மேலும் மெருகேறியது. அதன் அமைப்பும், அமைதியும் எனக்கு மிகவும் பிடித்து விட்டது என நான் ஒருமுறை கூறியபோது, "நான் எதையாவது ஒன்றைச் சாதிக்காமல் சாகமாட்டேன். அப்படிச் சாதிச்சுட்டு நான் செத்தாப் பிறகு என்ரை படம் ஒன்றை இதில கொழுவுங்கோ" எனச் சிரித்தபடி கூறினாள். இன்று அந்த நூலகத்தையும் அதிலுள்ள அவளின் படத்தையும் பார்க்கும் எவருக்கும் அவளின் ஞாபகங்கள் நிச்சயம் வரும்.

போராளிகளுடன் மட்டுமல்ல, மக்களுடனும் தயாளினி மிகவும் அன்பாகப் பழகுவாள். அவள் அந்தத் தளத்தை விட்டுப் போனதன் பின்னர்கூட, அடிக்கடி அவளை யாரிடமாவது விசாரித்துவிடும் அளவுக்கு மக்களை அவள் கவர்ந்திருந்தாள்.

பூநகரி முகாம் தகர்ப்பிற்கான பயிற்சி.

மிகவும் சிரமம் நிறைந்த பயிற்சி அது. ஒருமணி வரை தினமும் நித்திரை விழிக்க வேண்டும். சேற்றுக்குள் ஓடித்திரிய வேண்டும். ஆனாலும் அவர்கள் மகிழ்ச்சியாகவே இருந்தார்கள்.

குறிப்பாக தயாளினி மிகவும் மகிழ்ச்சியாகவே இருந்தாள். வழமைக்கு மாறாக தானும் சேர்ந்து பகிடிகள் கதைத்தாள். அவளைப் போல் கதைத்துக் காட்டுவோருக்கு மீண்டும் அவர்களைப் போலவே கதைத்துக் காட்டிப் பகிடி பண்ணினாள்.
ஒருநாள், இரவு நேரப் பயிற்சி நடைபெற்றுக் கொண்டிருந்த போது பலத்த மழை ஆரம்பமாகிவிட்டது. தனது வோக்கி நனையும் என்பதற்காக கட்டடம் ஒன்றினுள் ஓடிச்சென்று புகுந்து நின்ற இவள், நித்திரையாகிவிட்டாள். தாக்குதல் பயிற்சி ஆரம்பித்து இவளின் தொடர்புக்காக எடுத்த முயற்சி எல்லாம் கைவிடப்பட்டு இறுதியில் நேரடியாகச் சென்று பார்த்து இவளைக் காணாது தேடி இவளைக் கண்டுபிடித்த அடுத்த நாள், இவள் பொறுப்பாளரிடம் தன்

தொடர்ச்சி 12ம் பக்கம் ....

# சிறைக்கூடங்கள்

## சிறு கதை

**- திருமலை ஆரணி -**

கோணேஸ்வரம் அமைதியாக உறங்கிக்கொண்டிருந்தது. எல்லா இனமக்களும் செறிந்து வாழும் டவுண் பகுதியில் புதிது புதிதாகக் குட்டிபோட்ட சிங்களக் குடியேற்றங்கள்...! கருத்தரித்த படியும் சில...!! இவற்றைப் பார்க்கும் போது நெஞ்சை என்னவோ வந்து அடைப்பது போன்ற உணர்வுதான் ஏற்படும். என்ன செய்வது...? அரச ஆதிக்கத்துடன் என்றோ வெள்ளரசுகளும் வேரூன்றப்பட்டுவிட்டனவே...! இந்தப் பிரதேசத்திலும் ஒருவித மயான அமைதி குடிகொண்டிருந்தது. தூரத்தே சில தெருநாய்கள் ஒன்றோடொன்று கடிபடும் ஓசை... அதனால் ஈனஸ்வரத்தில் அவை எழுப்பும் முனகல்கள்... இவையெல்லாம் பனிக்குக் கிட்டவாகக் கேட்டுக்கொண்டிருந்தன. திடீரென்று அமைதியைக் கிழித்துக்கொண்டு வரும் டிரக் வண்டிகளின் உறுமல்கள்... சடாரென்று அவை பிரேக் அடித்து நிற்பதும், போவதுமாகப் பல பயமுறுத்தல்கள்... இலக்கத் தகடுகளில்லாத வான்களில் நரவேட்டைக்குப் புறப்பட்டுச் செல்லும் கறுப்புச் சட்டைக்காரர்களை நினைவூட்டுவது போல...!

தெரு நாய்களின் முனகல்களும் அடங்கிவிட்டன. இதமான இளங்காற்றின் மென்மையான வருடலுடன், சங்கிலித் தொடர்போலச் சேவல்களின் கூவலுடன் அமைதியான உதயமொன்று அதிகாலையில் பிறந்தது. அதனைத் தொடர்ந்து காளி கோயிலின் கணீர் என்ற மணி ஓசை... பள்ளிவாசல் ஒன்றில் ஒலிபெருக்கி மூலம் குரலெடுத்து குரான் ஓதும் மௌலவி நகமதுல்லாவின் கம்பீர ஒலி... இன்னொரு புறத்தால் பன்சாலையிலிருந்து புறப்படும் "புத்தங் சரணங் கச்சாமி... சங்கங் சரணங் கச்சாமி" இந்த ஒலிகளெல்லாம், அந்த மண்ணின் மடியில் முரண்பட்டுக்கிடக்கும் மனங்களைப் போல ஒன்றை ஒன்று வெட்டிக்கொண்டிருந்தன. இந்த இனிமைகளையெல்லாம் உதயத்தில் சுவைத்தபடி பலரும் தத்தமது போர்வைகளுக்குள் கதகதப்பைக் கண்டுகொண்டிருந்தார்கள்.

காளி கோவிலின் மணியோசை கேட்டதுதான் தாமதம், பரபரப்புடன் சுப்பிரமணியம் மாஸ்ரர் படுக்கையை விட்டெழுந்தார். இருட்டில் ஒருவாறு சுவரைத் தடவிச் சுவிட்சைப் பிடித்து அதனைத் தட்டிவிட்டார். மின்னொளியில் அறை குளிர்ந்தது. இரவு கவனமாக மேசை லாச்சிக்குள் வைத்திருந்த மூக்குக் கண்ணாடியையும் அணிந்துகொண்டு கையில் ரோச் லைற்றையும் பிடித்துக்கொண்டு கிணற்றடி பக்கமாக நடந்தார். அவர் அணிந்திருந்த தொளதொளத்த பனியன் மழைக் குளிரைத் தாங்கத் தைரியமின்றி மார்பிலே வந்து அடித்ததைவிட தெய்வானை மாஸ்ரர் இரவு சொன்ன செய்தி ஒன்று தான் அவரது மனதை ரம்பமாக அறுத்துக்கொண்டிருந்தது.

"அது உண்மையாக இருக்குமோ? அப்பிடி ஒன்று நடந்து அதன் விளைவாக இங்கை ஏதாவது அசம்பாவிதம் நடக்குமா இருந்தா இங்கை இருக்கிற எங்கடை ஆக்களின்ரை நிலை என்னவாகப் போகும்..."?

அவரது மனம் மெல்ல முணுமுணுக்க பழைய இனக்கலவரக் காட்சிகள் ஒன்றன் பின் ஒன்றாக மாஸ்டரின் மனத்திரையில் ஓடி அவரைப் பயமுறுத்திக் கொண்டிருந்தன.

"காளி... தாயே... நீயே துணை அம்மா".

கோயிலின் திசையை நோக்கி ஒரு கணமும் மறுகணம் வானத்தை நோக்கியும் அவரது கரங்கள் கூப்பின. காலைக் கடன்களை அவசரம் அவசரமாக முடித்துக்கொண்டு, குடுவைக்குள் கிடந்த விபூதியை எடுத்து நெற்றியில் அப்பிக்கொண்டு, கையில் அகப்பட்ட சேர்ட் ஒன்றையும் எடுத்துக் கொழுவிக்கொண்டு படியைவிட்டு இறங்கும்போது, இன்றைய பொழுதைப் பற்றி எதுவித கவலையுமின்றி புன்னகை அரும்பும் உதடுகளுடன் புரண்டுபுரண்டு படுத்துறங்கும் வீட்டு ஜீவன்களினை ஒரு தடவை பெருமூச்சுடன் பார்த்துவிட்டுத் தெருவில் இறங்கி நடக்கத் தொடங்கிவிட்டார்.

'நானாவின் கடைப்பக்கம் போனா நிச்சயம் ஏதாச்சும் புதினம் தெரியவரும்...'

மனம்கணிக்க அவரது பாதங்கள் சர்ப்பத்துக்குப் பேர்போன நானா கடைப்பக்கமாக அவரை இழுத்தன. கடை வாங்கில் வந்து மணியம் மாஸ்டர் இருந்தார். பக்கத்தில் இருந்தவர்களின் முகங்கள் நம்பிக்கை தருவதாக இல்லை. சிலர் குசுகுசுத்துக் கொண்டிருந்தார்கள். ஒரளவு மௌனம் ஆட்கொண்டிருந்த நிலை மாஸ்டருக்கு அந்தரத்தைக் கொடுத்தது. ஒருவர் வாயில் புகைத்த பீடிக்கட்டையை வீசி எறிந்துவிட்டு பெருமூச்சு விட்டார். கடைப்பெடியன் இக்பால், சைக்கிள் கரியரில் சாக்கினால் மூடிக் கட்டியிருந்த ஐஸ் கட்டியை எவ்வித சலனமுமின்றி இறக்கிக்கொண்டிருந்தான். அவனுக்கென்ன தெரியும்? பாவம் -சின்னப்பயல்-

நிலம் தெளிவாகி எவ்வளவோ நேரம். மாஸ்டரின் மனதில் மட்டும் தெளிவில்லை. பயம் கலந்த குழப்பநிலை ஒன்று அவரைப் பாடாதபாடுபடுத்திக் கொண்டிருந்தது. அவருடைய சந்தேகத்தை நிவர்த்திப்பதற்குச் சரியான ஆள் இன்னும் அவருக்குக் கிடைக்கவில்லை. கண்டவர்கள் நிண்டவர்களுடன் நாட்டுப் பிரச்சினைகளைப் பற்றிக் கதைப்பது எவ்வளவு ஆபத்தென்பது மாஸ்டருக்குத் தெரியாதா என்ன?

மாஸ்டரின் முகத்தில் இப்போது மகிழ்ச்சியின் ரேகை ஒன்று குறுகுறுத்தது. தூரத்தே தெரிந்த சோதியின் வருகை சோம்பிக் கிடந்த அவரது மனதுக்குச் சற்று உற்சாகத்தைக் கொடுத்திருக்க வேண்டும்.

"அடே... சோதி... வாடா வா... உன்னைப்போல ஒருத்தனைத்தானே விடிஞ்சதில இருந்து தேடிக்கொண்டிருக்கிறேன்".

அவரது உதடுகள் உச்சரிக்க முன் அவரது உள்ளம் சோகத்திலும் ஒரு சந்தோசத்துடன் அவனது உறவில் சங்கமிக்க விழைந்தது.

சோதி ஒரு குசிப்பேர்வழி. அவன் லேசாக எதனையும் எடுத்துக்கொள்ளக் கூடியவன். பல இடங்களிலும் அவன் அடியுண்டவன். பக்குவமான ஒரு பகிடிக்காரன். கடையில் கூட்டம் அதிகரிக்கவே மாஸ்ரர் கடையை விட்டிறங்கி வெளியே நின்றார்.

"மாஸ்டர்... என்ன பெரிசா யோசிக்கிறீங்க போல இருக்கு" சோதி பொடிவைத்துப் பேசிக்கொண்டே வந்தான்.

"சோதி... வாடாப்பா... ராத்திரி தெய்வானை மாஸ்டர் சொன்ன விசயம் உண்மையாடாப்பா...?

"ஆ... சிங்கள மாக்கெற்றிலை குண்டு வெடிச்ச விசயந்தானே...? எத்தினை பேர் செத்தாங்கள் எண்டதுதான் தெரியல்ல... மாஸ்டர் கடையில என்ன பேசிக்கிறாங்கள்..."?

"பழக்கமில்லாதவங்களோடை இதைப் பற்றியெல்லாம் கதைக்கிறதா...?

"மார்க்கெற்றிலை இரவுதானே குண்டு வெடிச்சுது. அதனால இன்றைக்குப் பகல் பொழுது இங்கால வெளிக்கிட்டுத் திரியிறது அவ்வளவு நல்லதாத் தெரியல்ல... இனக்கலவரம் வந்திட்டுதெண்டாத்தான் எங்கடபாடு ஆபத்து...".

"ஓமடாப்பா சோதி... எங்கே குண்டு வெடிச்சாலும் இங்கை எங்கடபாடு தானே ஆபத்து. எங்கே நாங்க ஓடிறது? ஓடிறதெண்டா நேவிக்கையும் கோட்டையுக்கையுந்தானே... நாங்க ஓடவேணும்... மூண்டு பக்கமும் கடல். மடத்தடியைத் தாண்டிறதெண்டால் சிங்களவங்கடை கத்திவெட்டுக்களையும், குத்துக்களையும் தாங்கவேணும். நோமலான நேரத்திலைகூட நாங்க பயந்து பயந்துதான் றெயில்வேஸ்ரேசனுக்குப் போய்வாறம்... வெளியிலை உள்ளவங்கள் நினைக்கிறாங்கள், இங்க பிரச்சினை இல்லை... கொன்றோல் பிறைசிலை சாமானுகளை வேண்டிக்கொண்டு சந்தோசமா நாங்க வாழிறமெண்டு. பாம்பின் வாயுக்கை எம்பிட்ட தவளை மரணத்தை ஏற்றுவிட்ட நிலையிலை எந்த வேதனைகளையெல்லாம் பட்டுக்கொண்டிருக்கிறதோ... அதே வேதனைகளைத்தான் நாங்களும் இங்க அனுபவிச்சுக் கொண்டிருக்கிறம் எண்டது பலருக்குத் தெரியாது... ஏன் இங்க இருக்கிறவை கூடச் சிலர் தெளிவில்லாமைத்தான் வாழுகினம்".

"சரியாச் சொன்னீங்க மாஸ்டர்... கொன்றோல் பிறைசிலை சாமானுகளை வேண்டி வாழ்ந்திட்டா... அதுதான் சுதந்திரமான வாழ்க்கை என்று நம்பிக் கொண்டிருக்கிற சனங்களும் நிறைய இருக்கு... வயித்தைப் பாக்கிற இந்தச் சனங்கள் அறிவுபெறாத வரை எங்களுக்கு உண்மையான சுதந்திரம் கைக்கெட்டாத உயரத்தில்தான் இருக்கப் போகுது..."

சோதி சொன்னவற்றை ரசித்தபடியே தலையை ஆட்டிக்கொண்டிருந்தார் சுப்பிரமணியம் மாஸ்டர்.

"ஆ... எங்கட பக்கமும் ஒரு ஆள் சேருது மாஸ்டர்" காலையில் பலகாரம் வாங்கவென்று கடைப்பக்கம் வந்த தெய்வானை மாஸ்டரைக் கண்டுவிட்டு சிரித்தான் சோதி.

"மணியம் மாஸ்டர் இண்டைக்கு வேளைக்கே வந்தாச்சுது போல... ஏண்டாப்பா சோதி இண்டைக்கு மணிக்கூட்டடி மாக்கெற்பக்கம் போகலாமடாப்பா...?" கேட்டுக்கொண்டே பேயறைந்த முகத்துடன் வந்து சேர்ந்தார் தெய்வானை மாஸ்டர்.

"ஆ... வாங்க மாஸ்டர் அது சம்பந்தமாகத்தான் மணியம் மாஸ்டரும் நானும் கதைச்சுக்கொண்டு நிக்கிறம். இண்டைக்கு காலம்புற நியூசிலை ஏதாச்சும்...?"

"சிலோன் நியூசிலை மாக்கெற் குண்டு வெடிப்புப் பற்றிச் சொன்னாங்கள்... பிரேமசிறி... பொடிநோனா எண்ட ரண்டு பேர் செத்திட்டாங்கலாம். ஆஸ்பத்திரியிலை ஆபத்தான நிலையிலை கொஞ்சப்பேரைப் போட்டிருக்கிறான்களாம்".

"ம்... அவங்கடை செய்தியளை ஆர் நம்பிறது? ஒரு காலத்திலை இந்தியச் செய்தியளை நம்பினோம்... இந்தச் சிறைக்கூடத்துக்கை ஒரளவு உண்மையைத் தாறதுக்கு பி. பி. சியையும் வெரித்தாசையும் விட்டா வேறு எது இருக்குது...?" மணியம் மாஸ்டர் சொல்லி வாய்மூடுமுன்...

"மணியம் மாஸ்டர் கனநேரமா ஏதோ டிஸ்கஸ் பண்ணிற மாதிரித் தெரிஞ்சிச்சி... நீங்க என்ன பேசிறீங்கெண்டது எனக்கும் வௌங்கிச்சி... நம்பள மாதிரி சோலி சொறட்டு இல்லாமே தொழில் செஞ்சிறவங்களை அல்லாதான் காப்பாத்தணும்... யா... அல்லா!" சொல்லிவிட்டு கடைக்கார நானா தம்பாட்டுக்கு ஓதினார்.

"நானாவை விட்டிடு இப்ப எங்கட பிரச்சினைக்கு வருவம்... நேற்றைக்கு நடந்த குண்டுவெடிப்புக்கெல்லாம் இண்டைக்கோ நாளைக்கோ செக்கிங் பண்றதுக்குப் பெரிய முத்தவெளிக்கு வா... சின்ன முத்தவெளிக்கு வா எண்டு அறிவிக்கத்தான் போகிறாங்கள்... ஆமி... நேவி... முகமூடி எண்டு கடுமையான செக்கிங்குகளாத்தான் இருக்கப்போகுது... இப்பிடியெல்லாம் போட்டு இவன்கள் ஆரைப் பிடிக்கப் போறான்கள்?" தெய்வானை மாஸ்ரர் அலுத்துக்கொண்டார்.

"தொண்ணூரிலை பிரச்சினை தொடங்கின கையோட எங்கட சனமெல்லாம் பாதுகாப்புக்காக நிலாவெளிப் பக்கமா ஓடிச்சினம். பிறகு திரும்பிவந்த ஆக்களை இனவழிப்புத் துடைப்புக்காகக் கொண்டே 'கிளப்பன் பேர்க்' காம்பிலை வைச்சிருந்தாங்க... ஏதோ பேருக்கு அரிசி... பருப்பு எண்டு தந்தாங்கள். இரவு ஆறு மணிக்குப் பிறகு தண்ணி தர மாட்டாங்கள்... குடிக்கிறது... குளிக்கிறது எல்லாம் ஒரே தண்ணிதான். இந்தக் காம்பிலதான் சனங்கள் நிறையக் காணாமல் போயிட்டுதுகள்.

எங்கடை குடும்பத்திலை ஒண்டுமே நடக்கையில்லை. எல்லாம் இந்த அம்மாளின்ரை செயல்தான்...! தொடர்ந்து பேசிய மணியம் மாஸ்ரரின் தொண்டை கரகரத்தது. தொண்ணூரின் அச்சங்களையும் அவலங்களையும் அவரது மனம் மீண்டும் அசைபோட்டதன் விளைவாக அவருடைய குரல் தழதழத்தது கண்கள் கசிந்தன.

"காம்பிலை இருந்த பெடியளையும் பெட்டையளையும் போக்குவரத்துச் சபை பஸ்சிலை கொண்டுபோனாங்கள். அந்தப் பிள்ளைகளுக்கு என்ன நடந்ததோ எங்களுக்குத் தெரியாது... காணாமற் போனவைக்குப் பெரிய எடுப்பா டெத் சேர்ட்டிபிக்கெற் குடுக்கிறதும் அழிச்சுப்



போட்டும் கருக்கிப்போட்டும் எடுப்பா கொம்பென்சேசன் எண்ட சொல்லைக் காட்டி உலகத்தின்ரை கண்ணுக்கை மண்ணைத் தூவிடலாம் எண்டு அரசாங்கம் மனப்பால் குடிக்குது. இவன்கள் செய்த அநியாயங்களுக்கும் அக்கிரமங்களுக்கும் எண்டைக்கோ ஒரு நாளைக்கு நிரந்தரமான பதிலடி கிடைக்கத்தான் போகுது". மணியம் மாஸ்ரர் வயதுக்கு மீறிய உணர்ச்சியுடன் துடித்தார். அவரது உடல் நடுநடுங்கியது. உள்ளம் தர்மாவேசத்துடன் உலைகொதிப்பது போன்று கொதித்துத் தள்ளியது.

தூரத்தே பொலீஸ் ஜீப் ஒன்று வேகமாக வந்து இவர்கள் மூவரையும் கடந்து சென்றுகொண்டிருந்தது. இன்னொரு திசையிலிருந்து ரொபி பக்கெற்றுகளுடன் ரொபி... ரொபி... என்று கூறிக் கொண்டு இவர்களுக்குக்கிட்ட நெருங்கி வந்தவனைக் காண சோதிக்கு உடல் உதறல் எடுத்தது. அவன் இவர்களுக்கு கிட்ட நெருங்கி சோதியைக் குரூரமான ஒரு பார்வை பார்த்துவிட்டுத் தன் காவிப்பற்களைக் காட்டிச் சிரித்தான்.

"என்னா கூட்டங் கூடிறது... ஆங்... அது எனக்குங் சங்கதி தெரியுங்... மிச்சங்... மிச்சங் தெரியுது மச்சாங்...

ஓ... நம்மள ஏமாத்தேலா"

அவன் இவர்களைக் கடந்து,

"ரொபி..." "ரொபி" என்று கூவிக் கொண்டு ஜீப் போன திசையில் போய்க் கொண்டிருந்தான்.

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

# சிறீலங்கா அரசாங்கத்தின் சீருடை அணியாப் பயங்கரவாதிகள்

## ■ பொலிசாரைப் பயன்படுத்தி எம்.பி.க்களை இராஜினாமா செய்யச் சொல்லும் ஜனாதிபதி

சிறீலங்கா அரசாங்கத்தின் பயங்கரவாதச் செயல்கள், தமிழ் மக்களை மட்டுமல்லாமல் சிங்கள மக்களையும் பாதித்த செய்திகள் இப்போது அம்பலமாகி வருகிறன.
சிறீலங்கா அரசாங்கத்தின் சீருடை அணியாப் பயங்கரவாதிகள் சிறீலங்காப் பாதுகாப்புப் படைகளின் முகாம்களில் தாராளமாக நடமாடி வருவதை, தாக்கப்பட்ட பல தமிழர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். இப்போது சிறீலங்கா அரசாங்கத்தின் பாதாள உலகத் தலைவர்களுள் ஒருவரான சொத்தி உபாலி, இரகசியப் பொலிஸ் தலைமைக் காரியாலயத்தில் வைத்து பொலிஸ் அதிகாரிகளுடன் அதிகாரியாக நின்று குண்டாந்தடியால் சிந்தக நளினி பெரேரா என்பவரைத் தாக்கிச் சித்திரவதை செய்து அவரது வலது காலை ஊனமாக்கியதாகவும் இதனால் பெரேரா சிறுநீர் கழிக்க முடியாது இருவாரம் சிகிச்சை பெற்றதாகவும் சிறீலங்கா நீதிமன்றத்தில் தகவல் வெளியாகியுள்ளது.
இதற்கிடையில் தற்பொழுது சிறீலங்காப் பொலிஸ் அதிகாரிகளை அனுப்பி பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை இராஜினாமாச் செய்யும்படி சிறீலங்கா ஜனாதிபதி தனது பாராளுமன்ற உறுப்பினர்களை வற்புறுத்திய சம்பவங்களும் வெளியாகியுள்ளன. ■

# பௌத்த மத...

புதிய அரசியலமைப்பைக் கொண்டுவர விரும்புகிறீர்களா?

**பதில்:-** இதனை நாம் மாற்றியமைக்கப் போகிறோம் என்பதை தெளிவாகக் கூறியிருக்கிறோம்.

**கேள்வி:-** அரசியலுக்கும் மதத்திற்கும் இடையிலான உறவுகள் எப்படி இருத்தல் வேண்டும்?

**பதில்:-** மிகவும் ஆழமான ஒரு அரசியல் கேள்வியை என்னிடம் கேட்டுள்ளீர்கள்? பௌத்த குருமார் அரசியலில் ஈடுபடுகின்ற ஒரு நீண்டகால வரலாற்றைத்தான் எம்முடைய பண்டைய மன்னர்கள் காலத்திற்கு முன் கண்டுள்ளோம். ஆனால் எமது கடந்த கால அரசியற் கட்சிகளும் இந்த நடைமுறையை இனவெறிக்காக பயன்படுத்தின. இந்த அரசாங்கம் இதைப் பெரியளவில் செய்கின்றது. பௌத்த மத தலைவர்கள் மட்டுமின்றி சகல மதத்தலைவர்களும் இந்த நாட்டில் சமூக பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்த தமது பங்களிப்பை வழங்க வேண்டும். பௌத்தமத துறவிகள் இத்தேர்தலில் போட்டியிடுவதைப் பொறுத்த வரையில் அதை ஒரு நகைச் சுவை என்றே நான் எண்ணுகிறேன். பௌத்த மத துறவிகள் மட்டுமல்ல, ஏனைய மத துறவிகளும் எதிர்காலத்தில் தமது முக்கியமான பங்களிப்பை அரசியல் கட்சிகளுக்கு செய்ய வேண்டியவர்களாக உள்ளனர். இதற்காக அவர்கள் எந்தக்கட்சி என்று பாராமல் சுயேட்சையானவர்களாக இருக்க வேண்டும். கட்சி அரசியலில் ஈடுபடாமல் இருந்தால்தான் நாடு அவர்களை மதிக்கும். எந்த ஒரு அரசியல் கட்சியுடனும் அவர்கள் இணைந்து கொள்ளாது தமது கௌரவத்தை பேணிக் கொள்ள வேண்டும். நாட்டில் ஏதாவது பிரச்சினைகள் நெருக்கடிகள் தோன்றும் போது அவர்கள் ஆலோசனை கூறலாம் என்றார் சந்திரிக்கா. ■

# தமிழர்....

தேவையானவற்றைச் செய்யுங்கள் என்று.

ஆனால் அவர்கள் செய்யமுடியாத நிலையில் இருக்கிறார்கள். இன்று வன்னிப் பகுதியை எடுத்துப்பார்ப்போமானால் அங்கே இருக்கின்ற 80 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் மன்னார், முல்லை, வன்னி மாவட்டங்களிலே உள்ள குடும்பங்களில் பெரும்பான்மையானவர்கள் விவசாயத்திலும் விவசாயத்தைச் சார்ந்த உழைப்பிலும் தான் தங்கி இருக்கின்றார்கள். ஆனால் அங்கே பயிர் செய்யக் கூடிய அளவிலே அவர்களிடம் முதலீடுகள் இல்லை. அவர்களுக்கு வங்கிகள் அங்கே கடன் கொடுக்கவில்லை, அதேநிலை தான் இங்கேயும்.

இந்த நிலையைப்போக்க வேண்டும்; எங்களுடைய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும்; அதன் மூலம் எங்களுடைய போராட்டத்திற்கு ஒரு வேகத்தைக்கொடுக்க வேண்டும்; மக்களினுடைய வாழ்க்கைத்தரம் உயருகின்றபோது, போராட்டம் தானாகவே விரைவுபடும் என்ற நோக்கத்தினாலேயே நாங்கள் இதைச் செய்திருக்கின்றோம்.

**அழிவுக்கு பயன்படுத்தப்படும் சிறீலங்கா வங்கிப் பணம்**

மக்கள் வங்கி நிதியிலே 50 வீதமான நிதி கூட்டுறவாளர்களுடையது. அப்படி இருந்தும், இன்றைய நிலையிலே கூட்டுறவாளர்கள் மக்கள் வங்கியிடமிருந்து தமக்கு தேவையான முழுமையான உதவியைப் பெற்றுக்கொள்ள முடியாமல் இருக்கின்றார்கள்.

இந்த நிலை எதற்காக? நாங்கள் இங்கே இருக்கின்ற மக்கள் வங்கியினுடைய ஊழியர்கள் -எங்களுடைய உடன்பிறப்புக்களைக் குறைகூற முடியாது. அவர்கள் சிறீலங்கா அரசாங்கம் சொல்பவற்றைச் செய்பவர்களாக மட்டுமே இருக்கின்றார்கள்.

**அதைத்தான் அவர்களால் செய்யமுடிகின்றது.**

இலங்கை வங்கியைப் பொறுத்தவரையிலும் இதுதான் நிலை - மிக அண்மைக்காலத்தில் 'மகளிர் பொற்கணக்கு' என்றொரு கணக்கைத் தொடங்கினார்கள். கோடிக்கணக்கான பணத்தை கொழும்பிற்கு அனுப்பினார்கள். இங்கே பணத்திற்கு தட்டுப்பாடு; திரவப்பணமில்லை; இந்தநிலையிலே அவர்கள் கொழும்பிற்கு அனுப்பினார்கள். அவர்கள் சிறீலங்கா அரசின் கட்டுப்பாட்டின்கீழ் இருப்பதால் அதைச் செய்தார்கள்.

இங்கே நாங்கள் வைப்பிலிட, அதை அங்கே அனுப்பும்போது அது இரண்டு வேலைகளைச் செய்கின்றது. ஒன்று எங்களுடைய மேம்பாட்டைத் தடுக்கின்றது. மற்றையது அப்பணத்தை சிறீலங்கா அரசு தன்னுடைய தேவைகளுக்கு பயன்படுத்துகின்றது -தமிழ் மக்களை அழிப்பதற்குப் பயன்படுத்துகின்றது.

ஆகவே நீங்கள் சிறீலங்கா அரசுக்கு கொடுக்கின்ற, அதாவது வங்கிகளில் இருக்கின்ற ஒவ்வொரு பணமும் மக்களின் அழிவிற்காக -உங்களின் அழிவிற்காகப் பயன்படுத்தப்படுகின்றது. இந்த வைப்பகம் எங்களுடைய மக்களின் மேம்பாட்டிற்காக உங்களுக்குத் தேவையான கடன் வசதிகளைச் செய்துகொடுக்கும் நிலையான வைப்புக்களையும், சேமிப்பு வைப்புக்களையும், நடைமுறைக் கணக்கையும் நாங்கள் நடைமுறைப்படுத்த இருக்கின்றோம். அதைவிட மேம்பாட்டுக் கடன்கள், அடகுக் கடன்கள், வாணிபக் கடன்கள் ஆகியவற்றைத் தொடக்கிவைத்துள்ளோம். அப்படி கொடுக்கின்றபோது நாங்கள் தொடங்கியுள்ள இந்த வைப்பகம் குழந்தைப் பருவத்தில் உள்ள காரணத்தினாலே, நாங்கள் கொடுக்கப் போகின்ற கடனுக்காக முழுமையான காப்பு நிலையொன்றை தேடிக்கொண்டு அந்த வைப்புக்களைக் கொடுப்போம். அப்படிப் பட்டவர்கள், எங்களுடைய வைப்பகம் வளர்ச்சி பெறவேண்டும், எங்களுடைய மக்கள் அனைத்துப்பேரும் இதன்மூலம் நன்மையடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு வைப்பிலிடவேண்டும்" என்றார். ■

# சுதந்திரத்தைத்....

டனை வாங்கியபின், இவளின் சகதோழிகள் இவளை "என்ன ஏன் தொடர்பு எடுக்கேல்லை...?" என்று கேட்டதற்கு "ஆமிக்குக் கிட்டப் போய் விட்டோம். என்னெண்டு கதைக்கிறது... அதுதான் தொடர்பு எடுக்கேல்லை.." என பகிடியாகக் கூறினாள்.

அவர்கள் பாடுபட்டு எடுத்த பயிற்சியைச் செயலில் காட்டும் அந்த நாளும் வந்தது.

பூநகரி முகாமில் மகளிர் அணிக்கெனத் தரப்பட்ட பகுதியில் வீதிக்கு இடதுபக்க அணிக்குத் தயாளினி தலைமை தாங்குகிறாள்.

மிகவும் சிரமமான பயணங்கள். நகர்வுகள் கூட உறுதியின் காரணமாக விரைவில் செய்து முடிக்கப்படுகின்றன.

போர் ஆரம்பமாகியது.

துப்பாக்கி வேட்டுக்களுக்கும், குண்டுச் சத்தங்களுக்கும் நடுவே வோக்கியில் கதம்பமாய் பல குரல்கள் ஒலித்தன. சிறிது நேரம் கழிந்திருக்கும். மகளிர் படையின் பகுதிக்குரிய தாக்குதலைத் தலைமையேற்று நடத்திக் கொண்டிருந்த சிறப்புத் தளபதி ஜனாவை வோக்கியில் அழைத்த தயாளினி, "நாங்கள் 'பவள்' கவச வாகனத்தின் மேல் நிற்கிறோம்..." எனக் கூச்சலிட்டாள்.

தாக்குதல் தொடர்ந்தது. தயாளினியும் நிலைமைக்கு ஏற்றவாறு ஜனாவின் கட்டளைகளைக் கேட்டு தாக்குதல்களைத் தொடர்ந்து கொண்டிருந்தாள்.

பொழுது புலந்தது. சூரியன் மெல்ல மெல்ல மேலெழுந்தது. 'வெற்றியைப் பார்க்க விரும்பினாலும் வேங்கைகளின் இழப்பை எப்படிப் பார்ப்பேன்' என்று சொல்வது போலிருந்தது.
பகல் சண்டையின் நடுவே 9-30 மணியிருக்கும். தயாளினியின் குரலை வோக்கியில் காணவில்லை. சிறிது நேரத்தில் வயிற்றில் காயம்பட்ட நிலையில் இருவரின் கரங்களின் மேல் தயாளினி "என்ரை றைபிளையும் வோக்கியையும் எடுங்கோ..." அவளின் வாய் மெல்ல இவ்வாறு கூறிக்கொண்டிருந்தது.


காயப்பட்டவர்களை ஏற்றும் வாகனம் வரும்வரை ஒரு இடத்தில் காயப்பட்டவர்களை வைத்திருந்தோம். ஆனால் வாகனம் வருவதற்கு முன்னரே அவளின் தலை துவண்டு இந்த மண்ணை ஆசையுடன் முத்தமிட்டது.

எமது வெற்றியைக் கூட கருதாமல் கலங்கிய கண்ணுடனும் இறுகப் பற்றிய துப்பாக்கியுமாக "தயாளினி அக்காவுக்கு என்ன மாதிரி?" எனக் கேட்ட அவளின் குழுப்பிள்ளைகளைப் பார்க்க அவளின் ஆவி நிச்சயம் இங்கிருந்திருக்காது. மூதூருக்குப் பறந்திருக்கும்.

இவள் மட்டுமல்ல இவளைப் போன்ற இன்னும் எத்தனையோ போராளிகளின் ஆசைக்கிணங்க, தென்தமிழீழ மக்கள் தமிழீழ விடிவின் பின் நிம்மதியாய் தமது மண்ணில் வாழும்காலம் வெகு தூரத்திலில்லை. ■

■ **சித்ரா**

**நன்றி:சுதந்திரப் பறவைகள்**



# தனியரசிற்கான...

பப்படல் வேண்டும். இது உங்களது நன்மைக்காக கட்டி எழுப்பப்படுகிறது. இது எமது தேசிய அபிவிருத்தியை இலக்காகக்கொண்டு அமைக்கப்படுகிறது. எங்களது மக்கள் இந்த வைப்பகத்தில் முதலீடுகளைச் செய்யவேண்டும். பணத்தை காப்புறுதியாக வைக்கவேண்டும். அந்த நிதியிலிருந்து எமது தேசிய அபிவிருத்திக்கான திட்டங்களுக்கு நாங்கள் கடன்கொடுக்க வேண்டும். மக்களுக்கு உதவும் முகமாக பல உன்னத இலட்சியங்களோடு இந்த காப்பகம் திறக்கப்படுகிறது.

**வைப்பகத்தின் வெற்றி மக்களின் கைகளில்**

இது ஒரு முதல் முயற்சி. வருங்காலத்தில் இதுபோன்ற வைப்பகங்கள் மாவட்டாீமியில் அமைக்கப்படும். தமிழர் ஒரு தன்னாட்சியை நிறுவும் ஒரு முக்கியதிட்டமாக இந்த வைப்பகம் உருவாக்கப்படுகிறது என்பதை நான் உங்களுக்கு வலியுறுத்த விரும்புகிறேன்.

அதாவது இந்த வைப்பகத்தின் வெற்றி உங்களது கையில் தங்கியுள்ளது. இந்த வைப்பகத்தை வெற்றிகரமாக செயலாக்கம் பெறச்செய்வதற்கு உங்களது ஒத்துழைப்பும் ஆதரவும் என்றும் தேவை அது வளர்ந்து ஈற்றில் எமது மக்களின் நல்வாழ்விற்காக எமது தேசத்தின் பொருண்மிய வளர்ச்சிக்காக உதவும் என்பது திண்ணம் என்றார். ■

# நாம் கடந்து...

இடையில் சிரித்து விட்டு கொலரை இழுத்துவிட்டவாறு சொல்வான், "எங்கட தமிழீழத்தின் தலைநகரம் திருகோணமலைதான். சொல்வதை வடிவாகக் கேளுங்கள்" என்று தொடர்வான். தான் இயக்கத்துக்கு வந்ததையும் தன் குடும்பத்தைப் பற்றியும், தான் வீட்டில் செய்கின்ற குறும்புகள் பற்றியும் சொல்வான். பிறகு சொல்வான் "அம்மாவுக்குச் செய்த குறும்புக்குத்தான் இப்ப பட்டினி கிடக்கிறன்" என்பான். உண்மையில் அவன் சரியான குறும்புக்காரன்தான். திடீரென பழைய நினைவுகள் கலைய இவனைப் பார்த்தேன். அசைவையே காணவில்லை. அவன் எங்கள் தோள்களிலேயே வீரச்சாவைத் தழுவிவிட்டிருந்தான். எங்களை அறியாமல் எங்களின் கண்கள் அந்த மாவீரனுக்கு கண்ணீர் வணக்கம் செய்தன. நிகழ்ந்திடும் சோகங்கள், தொடர்ந்திடும் மரணங்கள் எங்களை தளர்வடையச் செய்யாது. இந்தச் சோகங்களாலும், சாவுகளாலும் நாங்கள் மேலும் மேலும் உறுதியடைவோம் என எண்ணிக் கொண்டு மீண்டும் எங்களுடைய நிலைகளுக்கு எதிரியை அழித்தொழிக்கும் வேகத்துடன் விரைந்து சென்றோம்.

மூன்றாம் நாள் எதிரியின் கடும் எதிர்ப்புக்கும் மத்தியில் மீண்டும் முன்னேறினோம். எதிரியின் அரணில் இருந்து ஏறத்தாழ ஐம்பது யார் தூரத்தில் நிலை எடுத்திருந்தோம். இரவு கட்டாயம் எதிரின் எல்லையுள் நுழைந்து தளத்தைத் தகர்க்க வேண்டும் என்று எமக்குக் கூறப்பட்டிருந்தது.

இந்த நேரத்தில் சேற்றிலும், சகதி நீருக்குள்ளும், நெல் சுணைக்குள்ளும், நுளம்புக் கடிக்குள்ளும் மூன்று பகலும் ஒரு இரவும் இருந்ததால் எனக்கு சரியான காய்ச்சல் அடிக்கத் தொடங்கிற்று. உடனே சோதியாக்கா மாத்திரையை எடுத்து வயலில் தேங்கிநின்ற நீருடன் விழுங்க வைத்தார். இரவானதும் காய்ச்சல் எனக்கு ஓரளவு தணிந்துவிட்டது.

மூன்றாம் நாள் இரவு தாக்குதலை மீண்டும் ஆரம்பித்தோம். தாக்குதல் மிகக் கடுமையாக இருந்தது. நாங்கள் எதிரியை தரை வழியாக மட்டும் தாக்கிக் கொண்டிருந்தோம். ஆனால் எதிரியோ விமானத் தாக்குதல், எறிகணைத் தாக்குதல் என்று கடுமையாகத் தாக்கினான். நாங்களும் வேகமாக முன்னேறித் தாக்கினோம். வயல் வரம்புகள் மட்டுமே எமக்கு காப்பரணாக இருந்தது. நாங்கள் பல பக்கங்களாலும் சென்று எதிரியைத் தாக்கினோம். ஒரு பக்கத்தில் நாங்கள் பத்துப் பேர் இராணுவ நிலையில் இருந்து இருபது யார் தூரத்தில் படுத்திருந்து எதிரியைத் தாக்கிக் கொண்டிருந்தோம். எங்களுக்கு காப்பரண் இல்லாததினால் நிலத்தோடு முகத்தைச் சரிவைத்துக் கொண்டே தாக்குதலைத் தொடுத்துக் கொண்டிருந்தோம். மெதுவாகத் தலையைத் தூக்கினால்கூட நெற்றியில் வெடி விழும். இதில் எங்களோடு வந்த போராளிகள் நால்வர் எதிரியை அவதானிக்க மெதுவாகத் தலையைத் தூக்கியபோது, நெற்றியில் வெடி வாங்கி வீரச்சாவைத் தழுவினார்கள்.
அன்றைய இரவுத் தாக்குதல் மிகவும் முக்கியம் வாய்ந்தது. அந்த ஒரு இரவில்தான் கல்லுண்டாய்வெளி இராணுவத் தளத்தை தகர்த்தோம். எதிரியின் ஆயுதங்களையும் அள்ளி எடுத்தோம். வெற்றியோடு வெளியே வந்தோம்.
எங்கள் ஒவ்வொருவரையும் நாங்களே பார்த்துச் சிரித்தோம். உடலெல்லாம் ஒரே சேறு. எங்களில் இருந்து வந்த சேற்றின் நறுமணம் எல்லோரினது மூக்கையுமே துளைத்தது. "இது தான் போராட்டம். இதுதான் எங்கள் வாழ்க்கை" எனச் சொல்லிச் சிரித்தோம்.
கல்லுண்டாய் வெளித் தாக்குதலைத் தலைமை தாங்கி வழிநடத்திய லெப். கேணல் ஜொனி அண்ணா, "இனிப் பிள்ளைகள் எல்லாம் போய் குளித்துவிட்டு கொஞ்சம் ஒய்வு எடுங்கோ. அடுத்த சண்டைக்குப் போக வேண்டும்" என்று சொல்லி வாய் மூடுவதற்கிடையில், "சங்கானைக்கு ஆமி வந்துவிட்டான்" எனச் செய்தி வந்தது. அந்த நிமிடமே அடுத்த சண்டைக்காகச் சங்கானையை நோக்கி ஓடினோம்.
'குளிக்க வேண்டும். உடை மாற்ற வேண்டும். உண்ண வேண்டும். உறங்க வேண்டும்' என்ற எல்லா எண்ணமும் மறந்து 'சங்கானைக்கு வந்த இந்தியனை விரட்ட வேண்டும்' என்ற எண்ணம் மட்டுமே மேலோங்கி நிற்க, சங்கானையை நோக்கி விரைந்தோம். ■

# நாம் கடந்து வந்த பாதை

## கல்லுண்டாய் வெளியில் பெற்ற அனுபவம்

விடுதலை, இது எங்கள் அனைவருடைய சுயமான சொத்து. விடுதலையை விலை கொடுத்து வாங்க முடியாது. யாரும் விடுதலையைப் பெற்றும் தரமாட்டார்கள். நாங்கள்தான் எங்களுக்கான விடுதலையைப் பெற்றெடுக்க வேண்டும். எவ்வளவு துன்பங்கள், துயரங்கள், இன்னல்கள், இடர்கள் வந்தாலும் அவற்றுக்கெல்லாம் ஈடு கொடுத்து எம்மண்ணை மீட்டு விடுதலையை வென்றெடுக்க வேண்டும்.

எமது விடுதலைப் போராட்டமானது பல சோகங்களைத் தாங்கி, பல துன்பங்களைச் சுமந்து பல தடைகளைத் தாண்டி வந்துள்ளது. இந்த வகையிலே.....

1987 இல் அமைதி காக்கப் போகின்றோம் எனக் கூறிக்கொண்டு இந்தியப் படைகள் தமிழீழத்தில் நுழைந்தது. தமிழீழ வீதிகளில் எல்லாம் படைகள் வீதி வலம் வர, இனிமேல் எங்களுக்கு இலங்கைப் படையால் அழிவேயில்லை என்ற நினைவோடு இந்தியப் படையைக் கையசைத்து வரவேற்றார்கள் எம்மக்கள்.

தமிழீழத்தில் ஆங்காங்கே தளங்களை அமைத்து, இந்தியப்படைகள் தங்கியிருந்து "நாங்கள் தமிழர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றோம்" எனக்கூறி எம்மக்களையே சோதனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நாங்கள் போராளிகள். அந்த நேரத்தில் வெளியில் செல்லும் போது சாதாரண மக்களாக உடையணிந்துதான் செல்வோம். ஒருநாள் நானும் 2ம் லெப். மாலதியும் சாவகச்சேரியில் இருந்து மிருசுவிலுக்குச் சென்றுகொண்டிருந்தோம். இடையில் கொடிகாமத்தில் இந்தியப்படைகள் தம் தளத்தின் முன் எல்லோரையும் நிறுத்திச் சோதனை செய்து அனுப்பிக் கொண்டிருந்தார்கள். நாங்களும் மிதிவண்டியில் இருந்து இறங்கிச் சென்று அவர்களின் முன்னால் நின்றோம். "பொண்ணுக்கு என்ன பேரு? எங்க போறது?" எனக் கேட்டதற்குப் பதில் அளித்தோம். "சரி போங்கோ" என்றான். சிறிது தூரம் சென்றதும் "பொண்ணுங்களா பொண்ணுங்களா" எனக் குரல்கொடுத்து கையசைத்து நிற்கச் சொன்னான் ஒரு சிப்பாய். உடனே நாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தோம். 'ஏன் நிற்கச் சொல்கின்றான்' என்ற அர்த்தத்தோடு மாலதி எனக்கு மட்டும் விளங்கக் கூடியதாய்ப் பார்த்தாள். 'நாசமாய்ப் போவாங்கள். இன்னும் என்ன கேட்கப் போறாங்களோ. வாறான் வரட்டும் பார்ப்போம்' என்ற துணிவோடு நின்றோம். நிற்கச் சொன்னவன் வந்தான். வந்தவன் சொன்னான், "பொண்ணுங்களா எங்கட கொமாண்டர் சரியான பொம்பிளைக் கள்ளன். இனிமேல் இதால நீங்கள் வரேக்கை நீளமான ஆடை உடுத்திக்கிட்டு வாங்க" என்றான். நாங்கள் முழங்கால் வரையிலான பாவாடை சட்டை அணிந்திருந்தோம். அந்த இராணுவத்தினன் எம்மை இந்தியப் பெண்கள்போல பாதம் வரையில் ஆடையணியச் சொன்னான். "ஆமாங்க" என நையாண்டியாகப் பதிலளித்தோம். நான் மனதுக்குள் 'இவங்கள் தமிழீழத்தில் அமைதி காக்க வரவில்லை. தமிழ் மக்களை அழிக்க வந்திருக்கிறாங்கள்' என்று எண்ணிக் கொண்டேன்.

ஈழ மண்ணில் இந்தியப் படை கால்வைத்த மூன்று மாதங்களிலேயே அவர்களின் அடாவடித்தனங்களும், அட்டகாசங்களும், காட்டுமிராண்டித் தனங்களும் கோரமாக கருநாகங்கள் போல் படமெடுத்து ஆடத்தொடங்கின. இந்தியா தனது உண்மை உருவை எமக்குத் தெளிவாகக் காட்டியது. எமக்கும் இந்தியாவுக்கும் இடையில் போர் மூளும் சூழ்நிலை உருவானது. "இந்தப் பெரிய வல்லரசோடு விடுதலைப் புலிகள் என்னண்டு அடிபடப் போறாங்கள்?" என்று எண்ணி எல்லோரும் வாய் பிளந்து நிற்க, "எந்தப் பெரிய வல்லரசு வந்தால் என்ன? எமக்கு இருக்கும் மனோபலமே மிகப் பெரிய சக்தி. எம் மண்ணில் இருந்து அந்நியனை விரட்டியடிப்போம். புறப்படுங்கள்" என முழங்கிய எங்கள் தலைவரின் குரல் கேட்டு, இந்தியனை எம்மண்ணை விட்டு விரட்டியடிக்கும் பணியில் ஈடுபட்டோம்.

யாழ் குடா நாட்டில் பரவலாக இந்திய இராணுவத்துடனான மோதல்கள் நடந்து கொண்டிருந்தன. எமது பெண்கள் அணியும் இந்திய இராணுவத்துக்கு எதிராக எதிர்த்தாக்குதல்கள் நடாத்திக் கொண்டிருந்தது. எமது அணி கல்லுண்டாய், வட்டுக்கோட்டை, சண்டிலிப்பாய், சித்தங்கேணி, சங்கானை, தொட்டிலடி, பொன்னாலை, மாசியப்பிட்டி ஆகிய பகுதிகளில் இந்திய இராணுவத்தைத் தாக்கிக் கொண்டிருந்தது.



சித்தங்கேணியில் இந்திய இராணுவத்திடமிருந்து கைப்பற்றப்பட்டு, தகர்க்கப்பட்ட, வாகனத்துடன் விடுதலைப்புலிகள்.

இந்தச் சண்டைகளின் போது நாம் பெரும் போர் அனுபவத்தைப் பெற்றுக்கொண்டோம். எப்படியெனில், மழை கொட்டக் கொட்ட மழைக்கவசங்களை அணிந்தவாறு இந்திய இராணுவத்தினர் முன்னேறி வருவார்கள். நாங்கள் மழையில் தோய்ந்து கொண்டே எதிர்த் தாக்குதலில் ஈடுபடுவோம். தொடர்ச்சியாக மழையில் நனைந்து கொண்டே இந்தியத் துருப்புக்களை எதிர்ப்போம். உடலெல்லாம் விறைத்துப் போய் வெளுப்பு நிறமாக இருக்கும். ஒழுங்காக உணவும் கிடைப்பதில்லை. ஆனால் எங்களின் கரங்கள் துப்பாக்கியை இறுக்கிப் பிடித்தபடி இருக்கும். அந்நியனை எங்கள் மண்ணில் இருந்து துரத்தியடிக்கும் வரை, எந்த இடர் எங்களுக்கு வந்தாலும் நாங்கள் சோரவே மாட்டோம் என எங்களது மனங்கள் உறுதியாகவே இருந்தன.

நாலா திசையும் இந்தியத் துருப்புக்கள் கட்டெறும்புகள் மாதிரி பரவி வந்துகொண்டிருந்தன. இந்திய இராணுவத்திடமிருந்து ஒரு வித்தியாசமான வாடை வீசும். அந்த வாடை வீசினால் அவர்கள் வருகிறார்கள் என்று அறிவோம். நாங்கள் நாலா திசையும் ஓடி ஓடி சண்டையைத் தொடுத்தோம். குளித்து எத்தனையோ நாட்களாக இருக்கும். தொடர்ச்சியாக ஒரே உடையை அணிந்தோம். அழுக்கு என்று சொல்வதைவிட அதற்கு மேலாக ஒரு சொல் இருந்தால் அதைச் சொல்லலாம். கால்களில் செருப்புக்கூட இல்லை. வீதிகளில் இருந்த கல்லும், முள்ளும் வேலிகளில் இருந்த வடலி மட்டையின் கருக்கும் எங்களின் கால்களை வஞ்சமில்லாமல் பதம் பார்த்து ஏறிக்கொள்ளும்; கீறிக் கொள்ளும். அத்தோடு பசியும் எங்களை வாட்டும். ஆனாலும் போரில் சளைக்காமல் தொடர்ச்சியாக ஈடுபட்டுக் கொண்டிருந்தோம்.

பொன்னாலையில் நின்றபோது ஒரு நாள் எங்களுக்கு சரியாகப் பசித்தது. மேஜர் சோதியக்காவிடம் போய், "அக்கா, எங்கையாவது கோழி வாங்கிவாறம். எங்களுக்கு கால் காலா வெட்டி அவிச்சுத் தாங்கோ" என்றோம். நாம் மிகுந்த பசியுடன் கெஞ்சிக் கேட்டதைப் பரிதாபமாகப் பார்த்த சோதியாக்கா "ஓம்" என்றார். பின் கோழிகளை வாங்கி வந்து கொடுத்தோம். சோதியாக்கா உப்பும், தூளும் போட்டு கோழியை அவித்துக் கொண்டிருந்தார். நான் காவற்கடமையில் நின்றேன். அந்நேரம் பெருமழையும் பெய்துகொண்டிருந்தது. கொஞ்ச நேரத்தில் பூவரச வேலி அருகில் ஏதோ சத்தம் கேட்க, நான் கூர்ந்து கவனித்தேன். ஏறத்தாழ இருபது யார் தூரத்தில் இந்திய இராணுவம். உடனே எனது ஆயுதம் ரவைகளைக் கக்கியது. உள்ளே பசியோடு இருந்த என் சகதோழிகள் இந்திய இராணுவம் வந்ததை உணர்ந்து கொண்டு வெளியே ஓடி வந்தார்கள். வெளியிலே வரும்போது ஒவ்வொருவரது கைகளிலும் அவிந்ததும், அவியாததுமாக ஒவ்வொரு கோழிக்கால்கள் இருந்தன. எனக்கு அந்த இக்கட்டான நேரத்திலும் சிரிப்பு வந்துவிட்டது. சிரித்துவிட்டேன். என் சகதோழி என்னிடமும் ஒரு கோழிக்காலைத் தந்தாள். சண்டை ஓய்ந்ததும் கோழிக்காலைச் சாப்பிட்டு பசியாறினோம். ஒரு கையில் கோழிக்காலும் மறுகையில் துப்பாக்கியுமாக நாம் ஓடி வந்த அழகை எண்ணி நாமே சிரித்துக் கொண்டோம்.

இந்தியத் துருப்புக்களின் ஏராளமான தாக்குதல்களை எதிர்கொண்டு பதிலடி கொடுத்தோம். அவற்றுள் லெப். கேணல் ஜோனி அண்ணாவின் தலைமையில் நடந்த கல்லுண்டாய் வெளிச் சமர் எமக்குப் பெரிய அனுபவத்தைத் தந்தது. அத்தோடு இந்திய இராணுவத்திற்கு எதிரான மிக முக்கியமான தாக்குதல்களில் ஒன்றாக இது அமைந்தது.

கல்லுண்டாய் வெட்டை வெளி, வயல்வெளிகளைக் கொண்டது. முதல் நாள் இந்தியத் துருப்புக்கள் தளம் அமைத்திருந்த இலக்கை நோக்கி முன்னேறத் தொடங்கினோம். விமானத் தாக்குதல்கள், எறிகணைத் தாக்குதல்களுக்கு மத்தியில் வயல்களில் சேற்றுக்குள்ளாலும் சகதி நீருக்குள்ளாலும் முன்னேறினோம். வெட்டை வெளி என்பதால் எம்மீது இந்தியத் துருப்புக்களின் எதிர்ப்பு மிகக் கடுமையாக இருந்தது. இரண்டாம் நாள் முன்னேறி எதிரியின் தளத்தில் இருந்து ஏறத்தாழ எழுபத்தைந்து யாரில் நிலை எடுத்தோம். இந்நேரம் பசி எம்மை வாட்டியது. ஒரு வயதான ஐயா வெட்டை வெளிக்குள் குனிந்து கொண்டே ஓடி வந்தார். அவரை நாம் வியப்போடு பார்த்தோம். அவரின் இரண்டு கைகளிலும் இரண்டு வாளிகள் இருந்தன. அவர் எங்களுக்குக் கிட்ட வந்தபோது ஒரு வாளியில் ஆறிய தேநீரும், ஒரு வாளியில் குழைத்த சோறும் அவர் கொண்டு வந்ததை அவதானித்தோம். அந்த ஐயா விரைவாக தன் கண்ணுக்குத் தெரிந்த போராளிகள் எல்லோருக்கும் குனிந்து குனிந்து சென்று ஒரு கவளம் உணவையும், தேநீரையும் கொடுத்து விட்டு குனிந்தவாறே வந்த வழியே ஓடிச் சென்றதை நன்றி உணர்வோடு பார்த்துக் கொண்டோம்.

மரணத்தை எதிர்கொண்டு நின்ற வேளையில் கூட நாங்கள் பகிடியையும் சிரிப்பையும் விடவில்லை. ஒரு தம்பி எனக்கருகில் நிலையெடுத்திருந்தான். எதிரியின் நிலையில் இருந்து கனரக ஆயுதத்தின் ரவைகள் எம்மை நோக்கி வரும். இந்த நேரத்தில் இந்தத் தம்பி அடிக்கடி "ஐயோ அக்கா எனக்கு ரவை துளைச்சிட்டுது" என்பான். நாங்கள், "எங்கே பார்ப்போம்" எனக் கேட்டு ஊர்ந்து கொண்டு கிட்டப் போக "நான் சும்மா சொன்னனான்" என்று சிரிப்பான். அத்தோடு என் சகதோழி கப்டன் அஞ்சனா காவோலையைத் தூக்கி தனக்கு முன்னால் பிடித்திருப்பாள். "உது என்னடி?" என்று கேட்டால், "எனக்கு ரவை துளைக்காமல் பாதுகாப்புக் கவசம்" என்பாள். விழுந்து விழுந்து சிரிப்போம். ரவை பட்டு விட்டது என்று அடிக்கடி பகிடி விட்ட தம்பி ஒரு முறை "ஐயோ அக்கா" என்றான். அவன் பகிடிக்கு கத்துகின்றான் என எண்ணிப் போகாமல் இருந்தபோது மேலும், "ஐயோ அக்கா என்னைத் தூக்கிக் கொண்டு போங்கோ" எனக் கத்தினான். மீண்டும் இவன் பகிடிக்குக் கத்துகிறான் என நினைத்தவேளையில் எனது உடையில் ஏதோ வித்தியாசம் தெரிய, என்ன என்று பார்த்தேன். அவனது இரத்தம் குளித்துளியாக என் உடையில் தெறித்திருந்தது. உடனேயே அவன் அருகில் சென்று நானும் என் சகதோழியும் வெளியில் அவனை நிமிர்ந்து தூக்கிக் கொண்டு ஓடிக் கொண்டிருந்தோம். அவனைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு அவசரத்தில் நாம் நிமிர்ந்தவாறு ஓடினோம். இந்த நேரத்தில் எதிரிக்கு எமது நிலைகளைக் காட்டிக் கொடுக்காமல் மறைவாக நிலையெடுத்திருந்த போராளிகள் ஆத்திரத்தோடு "எடியே, ஏன்ரி நிமிர்ந்து கொண்டு போறியள்? குனிந்து ஊர்ந்து போங்கோடி" என்று ஏசினார்கள். நாங்கள் இதையெல்லாம் காதில் வாங்காமல் அந்தப் போராளியை உயிர் தப்ப வைக்க வேண்டும் என்ற வேகத்தோடு போய்க் கொண்டிருந்தோம். இடையிடையில் "அக்கா அக்கா" என அவன் முனகிக் கொண்டிருந்தான்.

அவன் எம் அருகில் நிலையெடுத்திருக்கும்போது கூறிய கதைகள் எல்லாம், அவன் தோளில் இருந்தபோது என் நினைவில் நிழலாடின. அவன் திருகோணமலையைச் சேர்ந்தவன். திருகோணமலையின் சூழ்நிலைகளையும் திருமலை மாவட்டத்தில் எமது மக்களுக்கு நடந்த இலங்கை இராணுவத்தின் கொடுமைகளையும் கொடூரங்களையும், அட்டூழியங்களையும் விபரித்துக் கூறினான்.

தொடர்ச்சி 12ம் பக்கம் ....

# பல துறைகளில்...

**சமாதானச் சூழ்நிலையை உருவாக்குவது சிறீலங்காவின் பொறுப்பே**

பி. பி. சி. நிறுவன முகவர் சமாதானத்துக்கான பேச்சுவார்த்தைக்கு சாத்தியக்கூறுகள் உண்டா எனக் கேட்டதற்கு, "தற்போது சமாதான பேச்சு வார்த்தைகளுக்கான சூழ்நிலை இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. போர் நிறுத்தத்திற்கும் சமாதானத்திற்கும் நாம் தயாராக இருக்கின்றோம் என நாம் பல தடவைகள் பகிரங்கமாகவே அறிவித்திருக்கின்றோம். கடந்த மூன்று வருடங்களாக இங்கு வந்த சமாதானத் தூதுக் குழுக்களிடம் எமது இந்த நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தினோம். ஆனால் சிறீலங்கா அரசாங்கம் சமாதானத்திற்கான எமது கோரிக்கைகளை நிராகரித்து வருகின்றது. இதுவரையும் எந்தவித நல்லெண்ண அறிகுறிகளையும் அரசு காட்டுவதாகத் தெரியவில்லை. பெரியதொரு படையெடுப்புக்கான ஆயத்தங்களைச் செய்வதாகவே தெரிகிறது. ஆகவே பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலையை ஏற்படுத்துவது சிறீலங்கா அரசின் கைகளிலேயே தங்கியுள்ளது.

**ஜனாதிபதி தேர்தல் குறித்து...**

இலங்கைத் தீவில் சிறீலங்கா அரசு இவ்வருடத்தில் நடாத்த இருக்கும் ஜனாதிபதித் தேர்தல் சட்டபூர்வமானதாக அமைவதற்கு வடக்கு -கிழக்கு மாகாணங்களிலும் தேர்தல் நடாத்தப்பட வேண்டியதன் அவசியம்பற்றி ஜோர்ஜ் ஆனி அவர்கள் கேள்வி எழுப்பியபோது தமிழ்ச்செல்வன் அவர்கள் பின்வருமாறு கூறினார்:-

எமது மக்களுக்கான உரிமைகள் நிறைவேற்றப்பட்டு எமது மக்கள் சுதந்திரமாகவும் உரிமையோடும் வாழ்வது உறுதி செய்யப்படும் வரை, எந்த ஒரு தேர்தலும் இந்த மண்ணில் நடப்பதை எமது மக்கள் விரும்பப்போவதில்லை. ஆகவே இங்கு தேர்தல் நடப்பதை நாம் அனுமதிக்கப்போவதில்லை. ■

# இலண்டன் தமிழர் புனர்வாழ்வுக் கழக உதைபந்தாட்ட வெற்றிக் கிண்ணத்திற்கான நான்காவது சுற்றுப் போட்டி - 1994



இலண்டன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம், வருடா வருடம் நடாத்தும் மேற்படி உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நான்காவது தடவையாக, 16. 04. 1994 காலை 9 மணிமுதல் மாலை 6 மணி வரை LEYTON SIXTH FORM கல்லூரி மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இச்சுற்றுப் போட்டியில் இலண்டன் உட்பட, நோர்வே, பிரான்சு, இத்தாலி ஆகிய நாடுகளைச் சேர்ந்த 16 உதைபந்தாட்டக் கழகங்கள் கலந்து கொண்டன. இதில், தமிழீழத்தின் முன்னாள் சிறந்த விளையாட்டு வீரரான டாக்டர் துரைசிங்கம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். திரு. பிரான்சிஸ், திரு. சீத்தாராமன்செட்டி ஆகியோர் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

ஏழுபேர்கொண்ட இப்போட்டியின் அரை இறுதிப் போட்டிக்கு, நோர்வே -தமிழர் விளையாட்டுக் கழகமும், பிரான்ஸ் -பாடும்மீன் விளையாட்டுக் கழகமும், இலண்டன் -புளூஸ் விளையாட்டுக் கழகமும், கிழக்கு இலண்டன் ஐக்கிய விளையாட்டுக் கழகமும் தெரிவாகின. இறுதி ஆட்டத்தில் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்துடன் மோதிய புளூஸ் விளையாட்டுக் கழகம், 3 -1 கோல்கள் போட்டு முதலாம் இடத்தைப்பெற்று 1994 ஆம் ஆண்டுக்கான வெற்றிக் கிண்ணத்தைத் தட்டிக்கொண்டது. பிரான்ஸ் -பாடும்மீன் விளையாட்டுக் கழகம், நோர்வே -தமிழர் விளையாட்டுக் கழகம் என்பன முறையே 2 ஆம், 3 ஆம் இடங்களைத் தட்டிக்கொண்டன. இப்போட்டியில் புளூஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த திரு. செல்ரன் என்பவர் சிறந்த விளையாட்டு வீரருக்கான விருதைப் பெற்றார்.

உதைபந்தாட்டப் போட்டியைத் தொடர்ந்து மேற்படி கல்லூரி மண்டபத்தில், பரிசளிப்பு விழா, கலை நிகழ்ச்சி, அதிஸ்டலாபச் சீட்டிழுப்பு, ஏலவிற்பனை என்பன இடம்பெற்றன. உலகப் பிரசித்திபெற்ற உதைபந்தாட்டக் கழகங்களில் ஒன்றான 'MANCHESTER UNITED' கழக வீரர்கள் கையெழுத்திட்டு அன்பளிப்புச் செய்த உதைபந்தாட்டப் பந்து ஒன்றே ஏலத்தில்விடப்பட்டது.

உதைபந்தாட்டப் போட்டி, அதிஸ்டலாபச் சீட்டிழுப்பு, ஏலவிற்பனை, ஆகியவற்றின் மூலம் திரட்டப்பட்ட நிதி தமிழீழ நிவாரண நிதிக்காக, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ■

## இனப்பிரச்சினை...

தியாக வாழ முடியாத நிலை உள்ளது" என தனது மற்றுமொரு மகோன்னதக் கண்டுபிடிப்பையும் சிறீலங்கா ஜனாதிபதி பிரகடனப் படுத்தியுள்ளார்.

அத்துடன் நின்றுவிடாது, "விடுதலைப் புலிகளுக்கு தீர்வு ஒன்று வேண்டுமானால் அவர்கள் பேச்சு வார்த்தைக்கு வருவதற்கான கதவுகள் திறந்தே உள்ளதென நான் பலதடவைகள் தெரிவித்தும் அவர்கள்தான் வருகிறார்கள் இல்லை" என முழு பூசணிக்காயை சோற்றுக்குள் மறைக்கும் கதை ஒன்றையும் அவிட்டு விட்டுள்ளார். ■

# கேடீஸ் தும்புத்...

தொழில் பிரிவினை என்பது இல்லை. காரணம், ஒரு பகுதியினருக்கு ஒரு வேலைதான் தெரியும் என்றால், அந்தப் பகுதியினர் திடீர் விடுப்பில் நின்றால், அந்தப் பகுதி ஸ்தம்பித்து விடக்கூடாது. எல்லோருக்கும் எல்லாம் தெரிந்தால் தொழில் தங்குதடையின்றி நடைபெறும் என்று நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர். இந்த நிறுவனத்தில் இரு வேலைநேரம் என்ற அடிப்படையில் வேலை நடைபெறுகிறது. காலை 6 மணியில் இருந்து பி. ப. 2 மணிவரை முதலாவது வேலைநேரம். 12 மணியிலிருந்து இரவு 8 மணி வரை இரண்டாவது வேலைநேரம் ஆகும்.

தென்மராட்சியில் கிராமப்புறங்களில் கேடீஸ் நிறுவனத்தின் கயிறு திரிக்கும் நிலையங்கள் உள்ளன. இவற்றில் அதிகமாக பெண்கள்தான் வேலை செய்கிறார்கள். கேடீஸ் தும்புக் கைத்தொழில் நிறுவனத்தின் பதினெட்டுக் கிளைகளிலும் 90 கயிறு திரிக்கும் பொறிகள் உள்ளன. ஒரு பொறியில் மூன்று பேர் வேலை செய்யலாம். சராசரி ஒருவரால் நாளொன்றிற்கு மூன்றுகிலோ கயிறு திரிக்கப்படுகின்றது. ஒரு கிலோ கயிறு திரிப்பதற்கு 24 ரூபா. இந்த வகையில் ஒருவர் நாளொன்றுக்கு 72 ரூபா சம்பாதிக்க முடியும்.

தென்மராட்சி பகுதியிலுள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வாழ்பவர்களுக்கு தென்னை ஓலை வழங்கப்படுகின்றது. அங்குள்ள வேலைவாய்ப்பற்ற பெண்களுக்கு தொழில் வழங்கும் நோக்குடன் இத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. கிடுகின் சந்தை விலையில் அரைப்பங்கு அவர்களுக்குக் கூலியாகக் கொடுக்கப்படுகின்றது. அன்றாட அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு இந்தக் கொடுப்பனவு உதவுகின்றது.

கேடீஸ் தும்புக் கைத்தொழில் நிறுவனம் தனக்கென ஒரு தலைமைக் காரியாலயத்தைக் கொண்டு இயங்குகிறது. தலைமைக் காரியாலயத்தில் வேலை செய்பவர்களின் சம்பளம் 1300 ரூபா முதல் 3000 ரூபாவரை உள்ளது. தும்புத் தொழிலில் தேர்ச்சி பெற்றவர்களும் போதனாசிரியர்களாகக் கடமைபுரிகிறார்கள்.

கிளைகளிலிருந்து உற்பத்திப் பொருட்கள் தலைமைக் காரியாலயத்திற்குக் கொண்டு வரப்படுகின்றன. இங்கிருந்து யாழ். குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் விநியோகம் செய்யப்படுகின்றன. கடனடிப்படையில் பொருட்கள் மொத்த வியாபாரிகளுக்கு வழங்கப்படுகின்றன.

மூலப்பொருள், மனிதவளம் ஆகியன எம் மண்ணில் உண்டு. இவற்றைக்கொண்டு தமிழீழத்தில் சுயசார்புப் பொருண்மியத்தைத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்பதினை கேடீஸ் தும்புக் கைத்தொழில் நிறுவனம் கோடி காட்டுகின்றது. ■

**பொ. இராஜேஸ்வரன் (ஈசன்)**

**நன்றி:'ஈழநாதம்'**

## சிறைக்கூடங்கள்......

"மாஸ்டர்... இங்க நடக்கிற அட்டூழியங்களுக்கெல்லாம் இவன்தான் அடிக்கால்... பொலிஸ் உளவாளி... எங்களைப் பொறுத்தவரை இந்த மலையில் ஆபத்தானவன். பேருக்கு ரொபி யாவாரத்தைச் செய்துகொண்டு காட்டிக் கொடுப்பதுதான் இவன்ரை வேலை" சோதி பயந்த குரலில் சொல்லி முடித்தான்.

நானா கடைக்குள் பிசியாக இருந்தார். இன்னும் சிறிது நேரத்தில் நடக்கப்போகும் சர்பத் வியாபாரத்துக்காக இக்பால் அண்ணாசி பழங்களைத் துரிதமாகத் துண்டு துண்டாக வெட்டிக் கொண்டிருந்தான். குண்டு வெடிப்பு நடந்ததைப்பற்றிய கவலையோ, பயமோ அவர்களிடம் இல்லாமல் வெகு இயல்பாக அவர்கள் வியாபாரத்தைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

இவர்களைக் கடந்து சென்ற ஜீப் மீண்டும் படுவேகத்தில் வந்தது. நானா கடைக்குமுன் பிரேக் அடித்து நின்றது. ஜீப்பைவிட்டு வேகமாகக் குதித்த பொலிஸ்காரர்கள் அதேவேகத்தோடு எதுவித விசாரணையுமின்றி சோதியை ஜீப்புக்குள் தள்ளினார்கள். எல்லாம் மின்னல் வேகத்தில்! சோதியின் முகத்தில் ஒரு பொலிஸ்காரன் ஓங்கி அடிப்பதும் சோதி மன்றாடுவதும் ஜீப்பின் கண்ணாடிக்கூடாக மணியம் மாஸ்டருக்குத் தெரிந்தது. காக்கிகளின் பூட்சுகளுக்குள் இன்னும் சில நிமிடங்களில் கசக்கிப் பிழிபடப்போக இருக்கும் சோதியை நினைத்து மணியம் மாஸ்டர் பரிதாபப்பட்டார். தெய்வானை மாஸ்டர் கண்ணைத் துடைத்துக்கொண்டார். அவர்கள் இருவரும் மெல்ல மெல்ல நடந்து மெயின் ரோட்டைக் குரோஸ் பண்ணினார்கள். நானாவின் கடை இரைச்சலைப் பிரிந்து இவர்கள் அப்பால் வந்துவிட்டார்கள்.

"தெய்வானை மாஸ்டர்! இந்த மலையிலை ஆட்டு மந்தையளா நாங்க மேயிறோம் எங்கட பொழுது அஸ்தமனத்துக்கு வருகுது. பயந்து வெருண்டும் இங்கை வாழிறதை நாங்க ஏத்திட்டோம். இது எங்கடை தளிருகளுக்கு வரக்கூடாது. இது எங்கடை தலைவிதி எண்டு சொல்லிக்கொண்டு எங்கடை பிள்ளையளும் இப்பிடியான அடிமைச் சீவியம் நடத்துங்களா இருந்தா, நாளைக்கு இந்த டவுனே ஒரு பெரிய சவக்குழியா மாறியிடும். இங்கை இருந்து அநியாயமாக சிங்களவங்கடை கையாலை சாகிறதைக் காட்டிலும் நாட்டுக்காக போராடிச் சாகிறது மேல்... மாஸ்டர்... இந்த நிமிசமே நான் ஒரு முடிவுக்கு வந்திட்டேன். என்ரை ரண்டு மகன்மாரையும் நான் இயக்கத்திற்கு அனுப்பப் போறேன்..." மணியம் மாஸ்டர் உறுதியுடன் சொன்னார். விழியோரங்களில் விழுவதற்குத் தயாராக இருந்த கண்ணீர்த் துளிகளை ஆனந்தத்துடன் கசக்கி விட்டார். அந்த மண்ணின் மீது புதிய பிரேமை ஒன்று அவருக்கு இழையோடியது.

தெய்வானை மாஸ்டர் மணியம் மாஸ்டரின் கையைப் பற்றிக்கொண்டார்.

"மணியம் மாஸ்டர்! நீங்க எடுத்த முடிவைத்தான் நானும் எடுத்திருக்கிறேன். என்ரை மூத்தவளையும் இளையவளையும் அங்கைதான் அனுப்பப்போறேன்" இனக்கலவரம் பற்றிய பயம் எதுவுமின்றி புதிய மிடுக்குடன் அவர்கள் தத்தமது வீடுகளுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள். ■

# தென்னிந்தியத் திரைப்படங்களைத் தடைசெய்வது குறித்து தமிழீழத்தில் பரிசீலனை

தமிழீழ மக்களின் பண்பாட்டு வாழ்வுக்கும் மனித மேம்பாட்டுக்கும் தீமை விளைவிக்கும் தென்னிந்தியத் திரைப் படங்களைத் தமிழீழத்தில் தடைசெய்வது குறித்து, அங்கு பரிசீலனை நடைபெற்றுவருவதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் பி.பி. சி. முகவர் ஜோர்ஜ் ஆனிக்கு யாழ்ப்பாணத்தில் வைத்துக்கூறியுள்ளார். அவர் கூறியதாவது:-

"நாம் பொதுவாகத் தென்னிந்தியத் திரைப்படங்களைத் தடை செய்வது பற்றி பரிசீலனை செய்து வருகின்றோம். ஏனென்றால், அநேகமான தென்னிந்திய தமிழ்ப்படங்கள் எமது பண்பாட்டு வாழ்வைச் சீர்குலைக்கும் அம்சங்களைக்கொண்டதாக இருக்கின்றன. தமிழீழ மக்களின் பண்பாட்டு வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் இவை குந்தகமாக அமையுமென நாம் நினைக்கின்றோம். பாலியல் வன்முறை, கொலை, கொள்ளை மற்றும் மனித மேம்பாட்டுக்குத் தீமை விளைவிக்கும் பல்வேறு அம்சங்களை இந்தப் படங்கள் கருப்பொருளாகக் கொண்டுள்ளன. இந்தப் படங்களைத் தடைசெய்துவிட்டு நாம் எமது திரைப்படத்துறையை பெரிய அளவில் வளர்க்கத் தீர்மானித்துள்ளோம். புரட்சிகரமான சிந்தனையையும் சமூக மேம்பாட்டையும் இலக்காகக்கொண்ட சிறந்த திரைப்படங்களைப் படைத்து மக்களுக்கு வழங்குவதே எமது நோக்கம்" என அவர் தெரிவித்தார். ■

# கொழும்பில் கைதானவருக்கு, யாழ்ப்பாணத்தில் பதுங்குகுழி வெட்டியதாக 2 வருடச் சிறை

சுழிபுரத்தைச் சேர்ந்த 33 வயதான கார்த்திகேசு சத்தியநாதன் கொழும்பில் சுற்றிவளைப்பு ஒன்றின் போது சிறீலங்காப் பாதுகாப்புப் படைகளால் கைதாக்கப்பட்டார். கொட்டாஞ்சேனை லாட்ஜ் ஒன்றில் வைத்துக் கைதாக்கப்பட்ட இவர் கடந்த ஆனி மாதம் முதல் எவ்வித விசாரணையுமின்றிக் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

இவ்வாண்டு இவர் மீது விடுதலைப் புலிகளுக்குப் பதுங்கு குழி வெட்ட உதவிய குற்றத்திற்காக ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடூழியச் சிறைத்தண்டனையும் 55 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. இவர் திருமணமானவர். ஆனால் சிறீலங்காப் பொலிசார் திருமணமாகாதவர் என்றே குறிப்பிட்டுள்ளனர். இதுபற்றி நீதிபதி இவரிடம் கேட்டபோது, "அருகில் இருந்தவர் எதை எதை வாக்குமூலமாகச் சொல்லச் சொன்னாரோ அதையே நான் கூறினேன்" எனக் கூறினார். இவருக்கு 1990 பங்குனி மாதத்தில் விடுதலைப் புலிகளுக்கு பதுங்கு குழி வெட்டி குற்றம் செய்தார் எனக்கூறி 1994 இல் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. சிறீலங்காப் பொலிசார் வழக்குகளை எவ்வாறு சோடித்து நீதி வழங்குகிறது என்பதற்கு இப்படியான சம்பவங்கள் உதாரணமாக கூறக்கூடியதாக உள்ளன. ■

## தமிழீழச்...

தைக் கொடுத்து வருவதால் அதன் காரணமாக ஆண்களிலிப் பெண்களுக்கு ஏற்படுகின்ற கவர்ச்சியால் பல பெண்கள் ஆண்கள் மேல் வைக்கும் அளவற்ற நம்பிக்கை, இந்த நம்பிக்கையால் ஆண்களுக்கு பெண்கள் கொடுக்கும் அளவுக்கு அதிகமான இடம் -எல்லாமே இறுதியில் பெண்களைத்தான் பாதிக்கின்றது.

இதை எல்லாப் பெண்களுமே தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு பெண் விரும்பியோ விரும்பாமலோ ஒரு ஆணிடம் வைத்திருக்கும் பாலியல் உறவானது வெளிப்படையாகவும், நேரடியாகவும் பெண்களைப் பாதிக்கின்ற அளவுக்கு ஆண்களைப் பாதிப்படையச் செய்யாது என்பது உண்மையே. எனவே இந்த விடயத்தில் மட்டுமல்லாது எந்த விடயத்திலுமே பெண்கள் மிக அவதானமாக இருக்க வேண்டும். ■

**தகவல்:சுதந்திரப் பறவைகள்.**

# பாப்பரசர் யாழ் வர வேண்டுகோள்

எதிர்வரும் ஆண்டின் ஆரம்பத்தில் "யோசப் வாஸ்" அடிகளுக்கு புனிதராகத் திருநிலைப்படுத்துவதற்கான முதற்பட்டமாகிய "முத்திப்பேறு பெற்ற" பட்டத்தை வழங்குவதற்காக, இலங்கைத்தீவுக்குப் புனித பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் விஜயம் செய்யவுள்ளார். சிறீலங்கா அரசாங்கம் காலிமுகத்திடலில் புனித பாப்பரசர் கலந்து கொள்ளும் திருப்பலிக்கான ஏற்பாடுகளைத் திட்டமிட்டுவருகிறது.

அமைதி, சமாதானம் வேண்டி உலகப்பயணங்கள் மேற்கொண்டுவரும் புனிதபாப்பரசர், இலங்கையின் வடபகுதியில் யுத்தம் நடைபெற்று வருவதால் இந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து அமைதி திரும்புவதற்கும், அவரின் விஜயம் பயன்படவேண்டும் என தாங்கள் எதிர்பார்ப்பதாக வடபகுதி மதகுருமார்கள் - கத்தோலிக்க பிரமுகர்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளனர்.

பரிசுத்த பாப்பரசரை வடபகுதிக்கும் விஜயம் செய்ய வேண்டுமென வேண்டுகோள் விடுத்த இவர்கள், "கத்தோலிக்க மக்கள் கூடுதலாக வாழும் வடபகுதிக்கு வருகை தராத பாப்பரசரின் இலங்கை விஜயம் தமிழ்க்கத்தோலிக்க மக்களுக்கு மகிழ்ச்சி அளிக்காது" எனவும் செஞ்சிலுவைச்சங்கத்தின் உதவியுடன் பாப்பரசரின் வடபகுதி விஜயம் வெற்றிகரமாக அமைக்கப்படலாம் எனவும், நம்பிக்கை தெரிவித்துள்ளனர். இலங்கை விஜயத்தில் வடபகுதி விஜயம் இடம் பெறாவிடில் வடபகுதிக்கு வரக்கூடிய சூழ்நிலை தோன்றும் வரை பாப்பரசர் தனது விஜயத்தை ஒத்திவைப்பது நல்லதெனவும் அவர்கள் ஆலோசனை கூறியுள்ளனர்.

யோசப் வாஸ் அடிகளின் பெரும் பணி யாழ்ப்பாணம் சில்லாலை, மாதகல் பகுதிகளிலேயே இடம் பெற்றது எனவும், எனவே மதரீதியாக அவரின் முத்திப்பேறு பெற்ற பட்டமளிப்பு விழாவிற்கு வரும் பாப்பரசர், அவர் வாழ்ந்த யாழ்ப்பாணப் பகுதிக்கு விஜயம் செய்வது அவசியமானதென்றும் யாழ் கத்தோலிக்க மக்கள் கருதுகின்றனர். யாழ்ப்பாணத்தில் பணிபுரிந்த பின்னரே அவர் கண்டிக்கு சிங்கள மக்கள் மத்தியில் பணிபுரிய சென்றார் என்பது வரலாறு. ■

## மனைவியை விடுதலை செய்வதாயின் கணவன் சிறைப்பட வேண்டும்

### □ சிறீலங்காப் பொலிசாரின் நிபந்தனை

காங்கேசன்துறையைச் சேர்ந்த துரைசாமி குமாரலிங்கம் என்பவர் தனது மனைவி வவுனியாவில் வைத்து சிறீலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப் பட்டிருப்பதை அறிந்து அங்கு சென்றிருந்தார். உமது மனைவியை விடுதலை செய்வதாயின் அவருக்குப் பதிலாக நீர் பொலிசில் சரணடைய வேண்டும் என பணிக்கப்பட்டதினால் அவர் பொலிசில் சரணடைந்து மனைவியை விடுதலை செய்தார்.

தற்போது காரணமின்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இவரை விடுதலை செய்யக்கோரி இவரின் மனைவி சாந்தினி துரைசாமி சிறீலங்கா நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்துள்ளதாகத் தெரியவருகிறது. ■

# சிங்களமயமாகும் திருமலை

வட - கிழக்கு மாகாணத்தின் அதாவது, தமிழ்பேசும் மக்களின் தாயகத்தின் தலைநகரான திருகோணமலை இன்று அத்தன்மையை படிப்படியாக இழந்து ஒரு பௌத்த பிரதேசமாக மாற்றமடைந்து வருவதையே அங்கு நடைபெறும் செயற்பாடுகள் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

வடக்கே மாஓயாவையும், மேற்கே அனுராதபுரம், பொலநறுவை மாவட்டங்களையும், தெற்கே வெருகல் ஆற்றையும் எல்லைகளாகக்கொண்ட இம் மாவட்டம் 2630 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு கொண்டதாகவும் மீன்பிடியையும், விவசாயத்தையும் தனது பிரதான தொழில்களாகக் கொண்டதாகவுமுள்ளது. இவ்வாறான தன்மைகளுடன் காணப்படும் இம்மாவட்டத்தின் இன்றைய உண்மைநிலை, இம் மாவட்டத்தில் உள்ள மக்களும், திருமலை நகரமும் துண்டு துண்டாக சிங்களக் குடியேற்றங்கள் மூலம் சூழப்பட்டுக் காணப்படுவதேயாகும்.

கொழும்பிலிருந்து திருமலையை நோக்கிப் பிரயாணம் செய்யும் போது, பொலநறுவை மாவட்ட எல்லையில் இருந்து திருமலை நகர எல்லைவரை அனைத்துக் கிராமங்களும் சிங்களக் குடியேற்றக் கிராமங்களாகவே காணப்படுகின்றன. இடையிடையே காணப்படும் தமிழ், முஸ்லீம் கிராமங்களைக்கூட, சிங்களமயப்படுத்துவதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழ்க் கிராமமான தம்பலகாமம் அது தம்புனுகமுவ என்று எழுதப்பட்டுக் காட்சியளிக்கின்றது.

மாகாணசபை அமைப்பு முறை ஏற்படுத்தப்பட்ட காலம் தொட்டே திருமலையைச் சிங்கள மயமாக்கும் முயற்சியில் அரசு வெளிப்படையாக ஈடுபட்டு வந்துள்ளது என்பது நாடறிந்த உண்மை. 1971 இல் 29 வீதமாக இருந்த சிங்களவர்களின் தொகை 1981 இல் 34 வீதமாக அதிகரித்திருப்பதில் இருந்து இதை நன்கு உணர்ந்துகொள்ள முடியும். தற்போது ஒரு கணக்கெடுப்பு நடாத்தப்பட்டால், நிச்சயமாக சிங்கள மக்களின் தொகை 45 வீதம் முதல் 50 வீதமாகக் காணப்படும். திருகோணமலை சகல இனமக்களுக்கும் உரிய பூமி என்று கூறிக்கொண்ட இவ் அரசு தான் விரும்பிய அனைத்தையும் செய்து வருகின்றது. கண்துடைப்புக்காக பல்லின சங்கமம் என்னும் மாதிரிக் கிராமத்தையும் அமைத்து, அதில் மூவின மக்களையும் குடியமர்த்திக்கொள்ளும் அதே வேளையில், திருக்கடலூர் கிராமத்தின் வடக்குப் புறத்தில் உள்ள பிரச்சினைகளால் அகதிகளாக இடம்பெயர்ந்து இந்தியா சென்ற தமிழர்களின் வீடுகளில், சிங்கள மக்கள் அவசர அவசரமாகக் குடியமர்த்தப்படுகின்றார்கள். அதேசமயம் அதேவேகத்தோடு பௌத்த விகாரைகளும் திருமலையில் புதிது புதிதாக ஏற்படுத்தப்படுவதையும் ஊன்றிக் கவனித்தால் நன்கு புரிந்து கொள்ள முடியும்.

இவ்வாறான நிலைமைகளோடு நிர்வாக ரீதியிலும் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்பேசும் மக்கள் அதிகமாக வாழும் திருமலை மாவட்டத்திற்கு சிங்கள அரச அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டதில் ஆரம்பித்து பின்பு வேறு மாவட்டங்களின் எல்லையில் காணப்படும் சிங்களக் கிராமங்களை திருமலை மாவட்டத்துடன் இணைத்து சிங்களவர்களுக்கென தனி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அடுத்த கட்ட நடவடிக்கையாக மீன்பிடித்தொழில் அமைச்சை திருமலைக்கு இடமாற்றம் செய்ததனூடாக கரையோரங்களில் சிங்கள மீனவர்களை மேலும் குடியமர்த்தி, இறுதியாக தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்டு தற்போது அரசினாலேயே ஆளுனருக்கூடாக ஆட்சி செய்யப்படும் வட -கிழக்கு மாகாண சபையில் உள்ள அமைச்சுகளின் செயலாளர்களையும் சிங்களவர்களாக நியமிப்பதில் முடிவடைந்துள்ளது.

இங்குள்ள தமிழ் மக்கள்கூட தங்களுடைய குரலை வெளிப்படுத்துவதற்கு சரியான வழிமூலங்கள் அற்றவர்களாகவே காணப்படுகின்றனர். இந்நிலையில் திருமலை தமிழ் மக்கள் திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்கு சென்று வழிபடுவதற்குக்கூட அஞ்சுகின்ற நிலையே காணப்படுகின்றது. புண்ணிய பூமியாகக் கருதப்பட்ட இந்த இடம், தற்போது பௌத்த விகாரையையும் சிங்கள மக்களுக்கான கச்சேரியையும் இராணுவ முகாமையும்கொண்ட பிரதேசமாக மாற்றியமைக்கப்பட்டு தமிழ் மக்களே அங்கு செல்ல முடியாத நிலை உருவாகியுள்ளது. ■

நன்றி:'ஈழநாதம்'

## ஆவணி முதல் அகதிகளை இந்தியா மீண்டும் அனுப்பும்

### □ சிறீலங்கா அமைச்சர் தயாரத்னா

எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் 5,500 இலங்கைத் தமிழ் அகதிகளை இந்தியா திருப்பி அனுப்ப இருப்பதாக சிறீலங்காவின் அமைச்சர் தயாரத்னா அறிவித்துள்ளார்.

**அறப்போராட்டம் - வை. கோ.**

"தமிழ் நாட்டில் இருந்து அகதிகள் அனைவரையும், மரண பூமியாகக் காட்சிதரும் இலங்கைத் தீவுக்கு தமிழக அரசு நிர்ப்பந்தப்படுத்தி அனுப்ப முயற்சித்தால், உலகின் பல்வேறு நாடுகளில் அகதிகளாக வாழும் தமிழர்களும் கட்டாயப்படுத்தி வெளியேற்றப்படுகிற சூழ்நிலை உருவாகலாம். இலங்கை அகதிகள் அனைவரையும் திருப்பி அனுப்பும் செயலை தமிழ்நாடு அரசு செய்யுமானால் மன்னிக்க முடியாத, ஈவு இரக்கமற்ற இச்செயலைக் கண்டித்து கழகம் அறப்போராட்டம் நடத்தும்" என வை. கோபாலசாமி இலங்கை அகதிகள் விவகாரம் தொடர்பாக தமிழ்நாட்டில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். ■

## தமிழீழ விடுதலைப்புலிகள்
### தொலை பேசிச் செய்தி நிலையம்
### யேர்மனி

*எமது தாயக பூமியான தமிழீழ மண்ணில் நாளாந்தம் நடைபெறும் செய்திகளையும், உலகச் செய்திகளையும் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களில் நீங்கள் தொடர்ந்து கேட்கலாம் என்பதை யேர்மன் வாழ் தமிழ் மக்களுக்கு அறியத்தருகின்றோம்.*

| | நகரம் | தொலை பேசி இல. |
|---|---|---|
| 1 | Berlin | 030- 6885284 |
| 2 | Bonn | 0228- 692333 |
| 3 | Bremen | 0421- 6165463 |
| 4 | Frankfurt | 069- 4691367 |
| 5 | Hannover | 0511- 8790957 |
| 6 | Maikammar | 06321- 57194 |
| 7 | Hailbron | 07136- 4170 |
| 8 | Munster | 0251- 786943 |
| 9 | Neuss | 02131- 120395 |
| 10 | Munchen | 089- 7212903 |
| 11 | Nurenberg | 0911- 311668 |
| 12 | Saarbrucken | 0681- 684636 |
| 13 | Stuttgart | 0711- 246554 |
| 14 | Dortmund | 0231- 416634 |

## திருமலை - பொலநறுவை தாக்குதல்களில் இராணுவத்தினர், பொலிசார் பலி

திருகோணமலை குணத்தீவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதல் ஒன்றில், நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளதாக சிறீலங்கா பாதுகாப்புப் படைகளின் தலைமையகம் அறிவித்துள்ளது. ஆயினும் இறந்த இராணுவத்தினரின் தொகை அதிகம் எனவும் பலர் காயமுற்றனர் எனவும் ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுஒருபுறம் இருக்க, பொலநறுவையில் மன்னம்பிட்டிக்கும் வெலிக்கந்தைக்கும் இடையில் வைத்து விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மற்றொரு தாக்குதலில் நான்கு பொலிசார் உயிரிழந்ததாகவும் பலர் காயமுற்றனர் எனவும் சிறீலங்கா இராணுவ வட்டாரங்கள் அறிவித்தள்ளன.

இத்துடன் அறவகன்வில பொலிஸ் நிலையத்தின் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் ஜயவர்த்தன என்ற பொலிசார் இறந்துள்ளதாகவும் சிறீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் செய்தி தெரிவித்துள்ளன.

**முல்லைத் தீவில் மூன்று நாட்களாகத் தாக்குதல்**

முல்லைத் தீவு மாவட்டத்தில் மக்கள் குடியிருப்புகள் மீது மூன்று தினங்களாக சிறீலங்கா விமானப்படையினர் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தியதனால் முள்ளியவளை, முள்ளி வாய்க்கால் கிராம மக்கள் உயிர்ப் பாதுகாப்புக்காக வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர் எனத் தெரியவருகிறது. ■

## மின்சாரம் இன்மையால் அநியாயமாக இரு உயிர்கள் பலி

மின்சாரமின்மையால் குப்பி விளக்கில் படித்துக் கொண்டிருந்த பதினைந்து வயதான நடராசா கிருபா என்ற மாணவி உடையில் தவறுதலாகத் தீ பிடித்ததனால் தீக்காயங்களுடன் கிளிநொச்சி வைத்தியாசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார். ஆயினும் யாழ் போதனா வைத்தியசாலையில் அவர் மரணமானார்.

இவ்வாறே இரவு நேரத்தில் பாம்புக் கடிக்கு இலக்காகிய சின்னத்தம்பி குமாரசாமி என்ற 40 வயது பொதுமகன் ஒருவரும் யாழ் போதனா வைத்தியசாலையில் மரணமானார். மின்சாரம் இன்மையால் தமிழ் மக்கள் படும் துன்பங்கள், சிறீலங்கா அரசாங்கத்திற்கு இராணுவ தந்திரோபாயமாக காட்சியளிப்பதாக அவதானி ஒருவர் இது குறித்து கருத்து வெளியிட்டுள்ளார். ■

## 70 வயதுப் பெண் பயங்கரவாதியென வெலிக்கடைச் சிறைச்சாலையில்

70 வயதுப் பெண்ணான கந்தப்போடி அழகம்மா என்பவர், மட்டக்களப்பில் இருந்து தனது கணவருடன், சிறீலங்காப் பாதுகாப்புப் படைகளால் சுற்றிவளைப்பு நடவடிக்கைளின்போது கைதான தன் மகனைப் பார்ப்பதற்காக கொழும்பு வந்திருந்தார்.

இவரையும் இவரது கணவரையும் சிறைச்சாலைக்குச் தள்ளிய சிறீலங்கா பாதுகாப்புப் படையினர், இவர்களையும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் காவலில் வைத்துள்ளனர்.

தற்பொழுது அழகம்மா என்ற இந்த மூதாட்டியை விடுதலை செய்யுமாறு ஆட்கொணர்வு மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ■

# இலண்டனில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடாத்திய உலகத் தமிழர் உதைபந்தாட்டத்தின் போது...



பிரான்ஸ் — பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தினரும் (மஞ்சள் — சிவப்பு நிறம்)
நோர்வே — தமிழர் விளையாட்டுக் கழகத்தினரும் (வெள்ளை — பச்சை நிறம்)




இத்தாலி விளையாட்டுக் கழகத்தினரும் (பச்சை — மஞ்சள் நிறம்)
இலண்டன் சன்டோஸ் விளையாட்டுக் கழகத்தினரும் (வெள்ளை — பச்சை நிறம்)





வெற்றிக் களிப்பில் இலண்டன் — புளூஸ் விளையாட்டுக் கழகத்தினர்







உதைபந்தாட்டப் போட்டியில்,சில கழகங்கள் மோதிக்கொள்ளும் விறுவிறுப்பான காட்சிகள்


U.T.O
211 Katherine Road
London E6 1BU, UK
T/F 081-470 8593

L.T.T.E
Postbox 47, 7600 Struer
Denmark. Tel/Fax
97-841231

W.T.C.C
HOF JECKLIN, 7415 RODELS
SWITZERLAND
Tel/Fax: 081-831797

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

T.C.C
Via Mariano Stabile - 34
90139 Palermo, Italy
T/F091-611 3179

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel 435 81142 F 435 81191

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1, Norway
Tel 022-191260 F-190114

T.C.C
Groot Hertoginnelaan 106
2517 BL Den Haag, Nederland
Tel 070-346 1963 F-384 0683

T.C.C
Glomminge Grand-29
16362 Spanga, Sweden
Tel 08-7612943


Printed by Observer Group Newspapers,